
நிறுவனர் : நா.மகாலிங்கம்
அக்டோபர் 2021

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்
₹15/-



அன்புடன்...

'சக்தி'யைக் கொண்டாடுவோம்!

பெண்களை சக்தியின் அம்சமாகப் போற்றும் தேசம் நம்முடைய தேசம். நாட்டையும் தாய்நாடு என்று பெருமிதத்துடன் போற்றுகிறோம். மண்ணுக்கு வளம் சேர்க்கும் நதிகளுக்கும் கங்கை, யமுனை, காவிரி என்று பெண்களின் பெயர்களையே சூட்டிப் பெருமிதப்படுகிறோம். சிவபெருமானை சிவராத்திரி ஓர் இரவு மட்டும் வழிபடும் நாம், அம்பிகையை ஒன்பது இரவுகள் நவராத்திரி என்ற பெயரில் வழிபட்டு வருகிறோம். ஆக, வழிபாட்டிலும் சக்திக்கே மகத்துவம் அதிகம்!

நவராத்திரி புரட்டாசி மாதத்தில் வரும் விழாவாகும். இந்த நாள்களில் வீட்டில் கொலு வைத்து, அக்கம்பக்கத்தில் உள்ள பெண்களையும், உறவுப் பெண்களையும் வீட்டுக்கு அழைத்து அவர்களுக்குத் தாம்பூலம் கொடுத்து கௌரவிப்பது மரபு. இன்னும் சிலர் தங்கள் வீட்டில் சுமங்கலிப் பெண்களை வரவழைத்து அவர்களை அம்பிகையாக பாவித்து, 'சுமங்கலி பூஜை' செய்வதும் வழக்கம். இப்படியெல்லாம் பெண்களைப் போற்றிக் கொண்டாடும் நம் தேசத்தில்தான், பெண்கள் சாதிக்கத் துடிக்கும்போது, அவர்களின் லட்சியத்துக்கு தடைக்கற்கள் போடுவதும், எதிர்த்துச் செயல்படுவதும் நடைபெறுகிறது. அப்படி தேசத்தின் நலன் சார்ந்த தன் லட்சியத்துக்குக் குறுக்கீடாகத் தோன்றிய எதிர்ப்புகளை மனஉறுதியுடன் எதிர்த்து வெற்றி பெற்ற ஒரு பெண் மணியின் வரலாறு இந்த 'சக்தி' சிறப்பிதழில் இடம் பெற்றிருக்கிறது. அவர்தான் மேஜர் மதுமிதா.

ராணுவ வீரர்களை கௌரவிக்கும் வகையில் வெளிவரும் தொடருக்கு வாசகர்களிடையே பெரும் வரவேற்பு கிடைத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது. இந்த இதழிலிருந்து பரம்வீர் சக்ரா என்ற உயரிய விருது பெற்றவர்களைப் பற்றிய தொடரைத் தொடங்க நினைத்திருந்தோம். ஆனால், இந்த இதழ் 'சக்தி சிறப்பித'ழாக வெளிவருவதால், ராணுவத்தில் சேனா விருது பெற்ற மேஜர் மதுமிதா பற்றிய கட்டுரை இடம் பெற்றிருக்கிறது. அடுத்த இதழிலிருந்து பரம்வீர் சக்ரா விருது பெற்றவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளலாம்.

அடுத்து வரும் தீபாவளிச் சிறப்பிதழில் சந்திக்கலாமே...

– பொறுப்பாசிரியர்

● சுவாமி கமலாத்மானந்தர்

நல்லன அனைத்தும் அருளும் நவராத்திரி வழிபாடு!




பகலிலே செய்யப்படும் பூஜைகள், வழிபாடுகள் எல்லாம் இறைவனுக்கு உரியவை; இரவிலே செய்யப்படும் பூஜைகள், வழிபாடுகள் எல்லாம் அம்பிகைக்கு உரியவை. ஆனால் நவராத்திரி விழாவின் போது, சகல தெய்வங்களும் அம்பிகையிடம் லயித்திருப் பதனால் அப்பொழுது செய்யப்படும் பூஜைகள் எல்லாம். அவை பகலில் செய்யப்படும் பூஜையானாலும் சரி; இரவில் செய்யப்படும் பூஜையானாலும் சரி, இறைவிக்கே உரித்தாகும்.நவராத்திரி சமயத்தில் வீடுகளில் கொலு வைப்பார்கள். இந்தக் கொலு வைப்பதில் ஆழ்ந்த தத்துவம் ஒன்று உள்ளது. இந்தக் கொலு மொத்தம் ஒன்பது படிகளைக் கொண்டிருக்கும்.

இதில் முதல் மூன்று படிகள் தமோ குணத்தைக் குறிப்பவை; அதற்கடுத்த மூன்று படிகள் ரஜோ குணத்தைக் குறிப்பவை; அதற்கும் மேலே உள்ள மூன்று படிகள் சத்துவ குணத்தைக் குறிப்பவை. இப்படி வைக்கப்படும் கொலு பிரபஞ்ச சிருஷ்டியின் ஒரு சிறு மாதிரி என்று சொல்லத்தக்க வகையில் அமைந்திருக்கும். இந்த உலகிலுள்ள பொருள்கள் அனைத்துமே சத்வம் – ரஜஸ் –தமஸ் ஆகிய மூன்று குணங்களினால் ஆனவை. அம்பிகையைப் பற்றிச் சொல்லும்போது, ‘திரிகுண மயீ’ என்று சொல்வர். இந்த மூன்று குணங்களைச் சித்திரிக்கும் வகையில்தான் நவராத்திரி







கொலு அமைகிறது. இதில் முதல் மூன்று படிகளில். லௌகீக வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள், விவசாயி, செட்டியார் போன்ற பொம்மைகள் வைக்கப்படும். இது தாமோ குணத்தைக் குறிக்கும்.

அதற்கடுத்த மூன்று படிகளில் ராஜா, ராணி, மந்திரி போன்ற பொம்மைகள் வைக்கப்படுகின்றன. இது ரஜோ குணத்தைக் குறிக்கும். மேலே உள்ள மூன்று படிகளில் தெய்வத் திருவுருவங்கள் வைக்கப்படும். இது சத்துவ குணத்தைக் குறிக்கும்.

உச்சியில் வைக்கப்பட்டிருக்கும் பூரணகலசம் அம்பிகையின் பூரண அருளைக் குறிப்பதாகும். ஒருவன் தமஸ் - ரஜஸ் - சத்வம் ஆகிய முக்குணங்களைக் கடந்து செல்வானாகில், அவன் அன்னையின் அருளுக்குப் பாத்திரனாகிறான் என்பதைக் குறிப்பிடும் வகையில் இந்த நவராத்திரி கொலு அமைகின்றது.

இந்த ஒன்பது நாள்களில் முதல் மூன்று நாள்கள் துர்கையையும், அடுத்த மூன்று நாள்கள் மகாலக்ஷ்மியையும், அதற்கடுத்த மூன்று நாள்கள் சரஸ்வதியையும் வழிபடுவர். இந்த மூவரும் இணைந்த வடிவம்தான் அன்னை ஸ்ரீராஜராஜேஸ்வரி.

அம்பிகை கருணையே வடிவானவள். ஒருவன் எத்தகைய பாவியாக இருந்தபோதிலும், அவன் தேவியின் திருவடிகளைப் பற்றுவானாகில், அவனை தேவி காத்தருள்வாள். கம்சன், வசுதேவருக்கும் தேவகிக்கும் பிறந்த குழந்தைகள் எல்லோரையும் கொன்றான். ஆனால், கண்ணனுக்கு முன்பு பிறந்த ஒரு பெண் குழந்தையை

கம்சன் கொல்ல நினைத்து, அதன் காலைப் பிடித்துத் தூக்கியபோது, அந்தக் குழந்தையாகப் பிறந்த அம்பிகை அவன் கையில் இருந்து மறைந்து, மேலே சக்தி வடிவினளாய்க் காட்சி அளித்தாள். அம்பாள் நினைத்திருந்தால் அப்பொழுதே கம்சனை அழித்திருக்க முடியும். ஆனால், அவன் திருவடிகளை கோபத்துடன் பற்றினாலும் அப்படி தன் திருவடிகளைப் பற்றிய ஒரு காரணத்தினாலேயே அவனை அப்போது கொல்லாமல் விட்டாள். அந்த அளவிற்குக் கருணை கொண்டவள் அம்பிகை. சிவபெருமான் ஞான ஸ்வரூபம் என்றால், அம்பிகை அருள் வடிவம். சிவன் வேறு, சக்தி வேறு அல்ல. சிவன் முழுமுதற் பொருள் என்றால், அவனது திருவருள் வடிவம்தான் சக்தி. இதைத்தான் 'அருளது சக்தியாகும் அரன்தனக்கு' என்று தெளிவாகக் கூறுகிறது சைவசித்தாந்தம்.

நவராத்திரி சமயத்தில் சண்டி ஹோமம், சுவாசினி பூஜை முதலியன நடைபெறும். வங்காளத்தில் தேவிமகாத்மியம் பகவத்கீதைக்கு இணையாகப் போற்றப் பெறுவதுடன் அதை தினமும் பாராயணம் செய்பவர்களும் உண்டு.

அசுரனை வெல்வதற்காக துர்கையாக அவதரித்த அம்பிகை, ஒன்பது நாள்கள் நோன்பு இருந்தாள். அதைத்தான் நாம் நவராத்திரியாகக் கொண்டாடுகிறோம். ஒன்பதாவது நாள் தன் ஆயுதங்களையெல்லாம் பூஜித்தாள். பத்தாவது நாள் அசுரனுடன் போரிட்டு அவனை அழித்தாள். உலகத்திற்கு நன்மை புரிந்தாள். ஆக, அம்பிகை ஒன்பது நாள்கள் நோன்பிருந்ததால் நவராத்திரி என்றும், ஒன்பதாவது நாள் ஆயுதங்களுக்குப் பூஜை செய்ததால் ஆயுதபூஜை என்றும், பத்தாவது நாள் அசுரனை ஜெயித்ததால் விஜயதசமி என்றும் கொண்டாடப்படுகிறது.

அம்பிகை வழிபாடு அனைவரும் செய்ய வேண்டும். ஸ்ரீகிருஷ்ணர் பிரம்மயோனி வடிவில் அம்பிகை வழிபாடு செய்தார். ஸ்ரீராமர் அசுரர்களை அழிப்பதற்கு முன் அம்பிகை வழிபாடுதான் செய்தார். ஸ்ரீகிருஷ்ணசைதன்யர் ராதையை அம்பிகை வடிவமாகவே வணங்கி வழிபட்டார். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரும்கூட ஸ்ரீசாரதாதேவியை அம்பிகையாகவே வழிபட்டார். சீதா பிராட்டி ஸ்ரீராமபிரானைப் பார்த்தவுடன், அவரே தனக்கு மணாளனாக வாய்க்க வேண்டும் என்று அம்பிகையின் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டதாகத் துளசிராமாயணம் கூறுகிறது.

நவராத்திரி சமயத்தில் மற்ற எல்லா தெய்வங்களும் பராசக்தியிடம் லயித்திருப்பதாலும், பராசக்தியை மற்ற தெய்வங்களைவிட ஒன்பது மடங்கு அதிகமாகப் பூஜிக்க வேண்டும் என்பதாலும் தான் நவராத்திரி ஒன்பது நாள்கள் அம்பிகையை வழிபடுகிறார்கள்.

நவராத்திரியின்போது ஒவ்வொரு தினமும் ஒரு சக்தி பிரதானமாக அமைந்து, மற்ற அம்சங்கள் பரிவாரங்களாகத் திகழ்கின்றன. நவராத்திரியின் முதல் நாள் மகேஸ்வரி பிரதானமாகவும், இரண்டாம் நாள் கௌமாரியும், மூன்றாவது நாள் வாராகியும், நான்காம் நாள் மகாலக்ஷ்மியும், ஐந்தாம் நாள் வைஷ்ணவியும், ஆறாம் நாள் இந்திராணியும், ஏழாம் நாள் பிராஹ்மி, எட்டாம் நாள் நாரசிம்ஹி, ஒன்பதாம் நாள் சாமுண்டி பிரதானமாக விளங்குகிறார்கள்.

நவராத்திரியின் முதல் மூன்று நாள்களில்



பிரதானமாக விளங்கும் மகேஸ்வரி, கௌமாரி, வாராகி பார்வதி தேவியின் அம்சமாதலால் முதல் மூன்று நாள்கள் பார்வதிக்கு உரியவை.

நவராத்திரியின் அடுத்த மூன்று நாள்கள் மகாலக்ஷ்மிக்கு உரியவை. மகாலக்ஷ்மி, வைஷ்ணவி, இந்திராணி ஆகியோர் அந்த மூன்று நாள்கள் வழிபடப் பெறுகிறார்கள்.

இறுதியான மூன்று நாள்கள் சரஸ்வதிக்கு உரியவை. அந்த மூன்று தினங்கள் சரஸ்வதியின் அம்சங்களான பிராஹ்மி, நாரசிம்ஹி, சாமுண்டியை வழிபடுகிறோம். மதுகைடபர்களை அழிக்க வெளிப்பட்ட தாமஸசக்தியை மகாகாளி அல்லது மகாதுர்கை என்கிறோம். மகா காளியை இச்சாசக்தி என்று சொல்வார்கள். மகிஷாசுரனை வதம் செய்ய

வெளிப்பட்ட ராஜஸசக்தியை லக்ஷமி துர்கை என்கிறோம். இந்த லக்ஷமி துர்கையை கிரியாசக்தி என்று சொல்லுவார்கள். சும்ப நிசும்பர்களை அழிக்கத் தோன்றிய சக்தியை ஞானசக்தி என்று சொல்லுவார்கள். இச்சாசக்தி பார்வதிக்கு உரியது. கிரியா சக்தி லக்ஷமிக்கு உரியது, ஞானசக்தி சரஸ்வதிக்கு உரியது.

இந்த இச்சாசக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி மூன்றுமே நம் ஒவ்வொருவருடைய அன்றாட வாழ்க்கையிலும் வெளிப்படுகிறது. பார்வதி, மகாலக்ஷமி, சரஸ்வதி ஆகியவர்களின் அம்சங்கள் நம் ஒவ்வொருவருடைய இதயத்திலிருந்தும் வெளிப்பட்டு, நம் அன்றாட வாழ்க்கையை நடத்தி வைக்கின்றன. நமக்குள் இருந்து, நம்மை நாள்தோறும் வழிநடத்திச் செல்லும் மூன்று சக்திகளை (இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி) நாம் வழிபடும் விழாதான் நவராத்திரி விழா.

அம்பிகை நமக்கெல்லாம் தாய். அவளை வழிபடுவதனால் மட்டுமே நம் பிறவித் துன்பங்கள் தீரும். அவளுக்கு ஆடம்பரமான வழிபாடுகள்; ஆரவாரமான விழாக்கள் தேவையில்லை. உள்ளார்ந்த பக்தி ஒன்று மட்டுமே போதும்.

ஒருமுறை தேவேந்திரன் தனது அமராவதிப் பட்டிணத்தில் அம்பிகைக்குப் பூஜை செய்தான். பற்பல மலர்கள், கனிவகைகள் எல்லாம் சமர்ப்பித்து மிகவும் ஆடம்பரமாகப் பூஜை செய்தான். அதைப் பார்த்து வியந்த அம்பாள் உபாசகரான துர்வாசர், 'இந்தப் பூஜையினால் தேவி மிகவும் உவகை கொண்டிருப்பாள். அதை நேரில் சென்று பார்ப்போம்' என்று எண்ணியவராய் அம்பிகை உறைவிடமான ஸ்ரீபுரம் - ஸ்ரீநகரம் சென்றடைந்தார்.

அவரை வரவேற்ற பணிப்பெண்களிடம் தாம் தேவியைப் பார்க்க வந்திருப்பதாகக் கூறினார் துர்வாசர். பணிப்பெண்கள், ''மகரிஷியே! அம்பிகைக்கு உடல் முழுவதும் கொப்புளங்கள் தோன்றி வாட்டுகிறது. இந்நிலையில் தாங்கள் அம்பிகையைத் தரிசிக்க முடியாது'' என்று சொல்ல, கோபம் கொண்ட துர்வாசர், "தேவி உபாசகனான நான் அம்பிகையைப் பார்க்கத் தடையா?" என்று சீற்றத்துடன் கூறி, அவர்களை ஒதுக்கிவிட்டு, தேவியின் இருப்பிடம் அடைந்தார். தேவி உடல் முழுவதும் கொப்புளங்களுடன் அவதிப்படுவது கண்ட துர்வாசர், "அன்னையே! அகிலம் முழுவதற்கும் தாயான தாங்கள் இப்படி கொப்புளங்களுடன் வேதனைப்படும் காரணம்தான் என்னவோ?" என்று மனவருத்தத்துடன் கேட்டார்.

தேவி சொன்னாள், "தேவேந்திரன் செய்யும் ஆடம்பரமான பூஜைதான் இதற்குக் காரணம். அவன் ஒவ்வொரு மலராக எடுத்து என்னை அர்ச்சிக்கும்போது, 'தான் மிகவும் ஆடம்பரமாகப் பூஜை செய்கிறோம்', 'இப்படி யாராலும் செய்ய முடியாது' என்று கர்வம் கொண்டதால், அவன் அர்ச்சிக்கும் ஒவ்வொரு மலரும் என் மேனியில் கொப்புளங்களாக மாறி வேதனைப்படுகிறேன்" என்று.

''தாயே தங்களது இந்த வேதனையைத் தீர்க்கவல்ல மருத்துவர் யாரென்று சொல்லுங்கள். நொடியில் அழைத்து வருகிறேன்" என்று தேவியின் துயரம் தீரவேண்டும் என்ற துடிப்புடன் கேட்டார் துர்வாசர். தேவி அவரிடம், 'நீ காசியில் உள்ள ஆலயத்துக்குப் போனால், அங்கு ஒரு மருத்துவர் இருப்பார். அவரால்தான் என் துன்பத்தைப் போக்க முடியும்" என்று சொல்ல துர்வாசர் உடனே புறப்பட்டுவிட்டார்.

காசியை அடைந்த அவர், அம்பிகை குறிப்பிட்ட ஆலயத்திற்குச் சென்று பார்த்தார். அங்கு மருத்துவர் யாரும் காணப்படவில்லை. எனவே, அம்பாள் சந்நிதிக்கு முன்பாக மன நெகிழ்ச்சியுடன் வழிபட்டுக் கொண்டிருந்த - பார்க்க மிகவும் வறிஞனாக, முதுமையுடன் காணப்பட்ட ஒரு மனிதனிடம், ''இங்கே யாரும் மருத்துவர் உள்ளாரா?'' என்று கேட்டார். அந்த மனிதன் தனக்கு எதுவும் தெரியாது என்று கூறிவிடவே, குழப்பத்துடன் ஸ்ரீபுரம் திரும்பினார் துர்வாசர்.

ஸ்ரீபுரத்துக்குள் நுழைந்த துர்வாசர், அங்கே அம்பிகை கால்களில் சலங்கை கட்டிக் கொண்டு மிகவும் ஆனந்தமாக நடனமாடுவது கண்டு வியப்புற்று, "தேவி! தாங்கள் நலம் அடைந்துவிட்டது எப்படி? தாங்கள் சொல்லியபடி நான் மருத்துவரைப் பார்க்க முடியவில்லை. மாறாக ஒரு ஏழை பக்தனைத்தான் பார்த்தேன். தங்களது துன்பம் தீர்த்த மருத்துவர் யாரோ?" என்று கேட்டார்.

புன்னகைத்த தேவி, "நீ பார்த்த அந்த ஏழை பக்தன்தான் நான் சொன்ன மருத்துவர். அவன் என் மீது கொண்ட மாசற்ற பக்தியினால் சிந்திய கண்ணீர்த் துளிகளே என் துன்பம் போக்கின" என்றாள். துர்வாசர் பக்தியின் தன்மையையும், ஆடம்பர ஆரவாரங்களால் அம்பிகையை அடைய முடியாது என்பதையும் தெரிந்துகொண்டார்.

'பூத்தவளே புவனம் பதினான்கும் பூத்தவண்ணம் காத்தவளே' என்று அபிராமபட்டர் போற்றி வணங்கும் அந்த முழு முதற்பொருளை - மூலாதாரத்தை - தேவி பராசக்தியை நவராத்திரியில் ஒன்பது நாளும் வழிபடுவோம். நமது உள்ளார்ந்த வழிபாடு கண்டு. நவராத்திரி நாயகியான ஸ்ரீராஜராஜேஸ்வரி நமக்கெல்லாம் நலம் புரிவாள்.


● கவிஞர்: **சிற்பி பாலசுப்பிரமணியம்** ● ஓவியம்: **ம.செ**

மனித மாண்புகளின் களஞ்சியம்


மனோரஞ்சிதம் என்ற பூ நினைத்தவர்களுக்கு அவர்கள் நினைத்த மணத்தையே தரும் என்று சொல்வது வழக்கு. நாம் கண்ணாரக் காண வாய்த்த காலத்தின் கொடையான அருட்செல்வரும் ஒரு மனோரஞ்சித மலர்தான். அவரை நேசித்தவர்களும் அவரது எழுத்தை வாசித்தவர்களும் அவரால் அரும்பெரும் உதவி பெற்று அவரை நெஞ்சில் வைத்துப் பூசித்தவர்களும் எப்படி அவரை வியந்தார்களோ அந்த வியப்புக்கேற்ற விசுவரூபம் கொண்டவர் அவர்.

ஆங்கில இலக்கிய உலகைத் தம் கதைகளால் வசீகரித்தவர்களில் அகதா கிறிஸ்டிக்குத் தனி இடம் உண்டு. அவர் ஒரு வரலாற்றறிஞரைத் திருமணம் புரிந்திருந்தார். வேடிக்கையாக அகதா கூறுவார்: “அதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி. ஏனெனில் வரலாற்று ஆய்வாளர்களுக்கும் பழையவை மீது மிகுந்த பிரியம் இருக்கும். எனக்கு எவ்வளவு வயதானால் என்ன? பழையவற்றைக் காதலிப்பவர் என் கணவர்” என்பார். நீண்ட காலம் அருட்செல்வரை அறிந்த என்னைப் போன்றவர்களுக்கு அவரைப் பற்றிய பழைய நினைவுகள் அப்படித்தான். மேலும் மேலும் காலம் செல்லச் செல்ல அவர் “முன்னைப் பழைமைக்கும் பழைமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்” தகத்தகாயமாய்ச் சுடர் வீசி வளர்ந்து கொண்டே இருக்கிறார்.

அவர் வாழ்ந்தது மாமனிதர்களின் காலம். அரசியலில் அப்பழுக்கற்ற தலைவர்களாக ஜவகர்லால், சி.சுப்பிரமணியம், ஓமந்தூரார் எனப் பொன்னினும் மணியினும் மேலானவர்கள். அதே காலத்தில் கேரளத்தில் முதல்வராக முத்திரை பதித்த சி. அச்சுதமேனன் வாழ்ந்தார். அத்தகைய பெரியோர்கள் அருட்செல்வரை எப்படி மதித்தார்கள்?



நான் என் முனைவர் பட்ட ஆய்வுக்காகத் தேர்ந்தெடுத்த தலைப்பு- பாரதி - வள்ளத்தோள் ஒப்பாய்வு. இதற்காக வள்ளத்தோள் பற்றிய செய்திகள் தேடித் திருச்சூரில் கேரள சாகித்ய அகாதெமி நூலகம் சென்றேன். அங்கே சொன்னார்கள் -



> நீண்ட விவாதத்துக்குப் பிறகு நான் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் கல்லூரியிலிருந்து வருவதாக அறிமுகம் செய்து கொண்டேன். 'மகாலிங்கம்' என்ற சொல் ஒரு மந்திரச் சாவி என்பதை அங்கே கண்ணாரக் கண்டேன்.

பக்கத்தில் முன்னாள் முதல்வரும் அரிய சிந்தனையாளருமான அச்சுதமேனன் வாழ்கிறார். அவர் அரிய தகவல்கள் தருவார் எனச் சொன்னார்கள். அவருடைய வீடு வயல்வெளிகளுக்கு நடுவே இருந்தது. முதுமையில் ஓய்வில் இருப்பதால் அவரைப் பார்க்க அங்கிருந்தோர் அனுமதிக்கவில்லை. நீண்ட விவாதத்துக்குப் பிறகு நான் பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்களின் கல்லூரியிலிருந்து வருவதாக அறிமுகம் செய்து கொண்டேன். 'மகாலிங்கம்' என்ற சொல் ஒரு மந்திரச் சாவி என்பதை அங்கே கண்ணாரக் கண்டேன். உடனடியாகக் கதவு திறந்தது. அரிய மனிதர் அச்சுதமேனன், 'மகாலிங்கம் என் அருமை நண்பர் அல்லவா? நாங்கள் இருவரும் தமிழ்நாடு சட்டமன்றத்தில் உறுப்பினர்களாக ஒன்றாக இருந்திருக்கிறோம். He is a Gem of a Man" என்று குதூகலத்துடன் என்னுடன் உரையாடத் தொடங்கினார்.

"சந்தித்துப் பல ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனாலும் அவரிடமிருந்து புத்தகங்கள் வருவது நிற்கவில்லை" என்றார். கேரள மக்களின் நெஞ்சில் வரலாறாக நிலைத்திருக்கும் அச்சுதமேனன். பிறகு நான் கேட்ட வள்ளத்தோளைப் பற்றிய அரிய தகவல்கள் நயாகராவாக அவரிடமிருந்து புறப்பட்டன. இன்னொரு மாநிலத்தின் மரியாதைக்குரிய பெரியவர் இப்படி நெகிழ்ந்து போகும்படி செய்த அருட்செல்வருடைய பெயரையும் பண்பையும் என்னென்று கூறுவது?

கேரள முதல்வரைப் போலவே பண்பின் நிறைகுடமாகத் திகழ்ந்தவர் தமிழக முதல்வராக விளங்கிய உத்தமர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார். நம் அன்பிற்கும் வணக்கத்துக்கும் உரிய ஊரன் அடிகள் அவரைப் பற்றிச் சொல்லும்போது, "பிறப்பாலே பெரிய மனிதர்; ஒழுக்கத்தாலும் பெரிய மனிதர்; எல்லாவற்றிலுமே பெரிய மனிதர்" என்று குறிப்பிடுவார். அத்தகைய பெருந்தகை முதல்வர் பதவியை நீத்த பிறகு 1951-ல் வடலூருக்கு வந்து சுத்த சன்மார்க்க நிலையத்தை நிறுவினார். அதன் நிழலில் வள்ளலார் குருகுல உயர்நிலைப் பள்ளி, அநாதை மாணவர் இல்லம், அப்பர் சான்றோர் இல்லம், இராமலிங்கர் தொண்டர் இல்லம் இவற்றையும் ஏற்படுத்தினார். அவர் தளர்ச்சியுற்ற போது இந்நிறுவனங்களை எடுத்து நடத்த ஒருவர் வேண்டும். அவர் அப்பழுக்கற்றவராக இருக்கவேண்டும் என்று நினைத்தார்.

மனம் தூயரான ஓமந்தூரார் 1969-ல் தன் நிறுவனங்கள் அனைத்தையும் அருட்செல்வர் பொறுப்பில் ஒப்படைத்தார். அன்பிற்கினிய ஔவை நடராசன் இந்தச் சூழலையும் ஓமந்தூரார் எண்ணியதையும் குறித்துச் சொல்கிறார்:



"ஒருமுறை ஓமந்தூரார் அவர்கள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு யாருக்குத் திறமை இருக்கிறதோ, யாருக்குப் பெருமை இருக்கிறதோ அவருக்குத்தான் தேசத்தை நிர்வகிக்கும் உரிமை வர வேண்டும். என்னால் யாரையும் நம்ப முடியவில்லை. உன் எதிரிலேயே சொல்கிறேன். உன்னைக்கூட நம்ப மாட்டேன். உங்கள் தலைவர் மகாலிங்கத்துக்குத்தான் அந்தப் பொருத்தம் இருக்கிறது. அவர் பெரிய மனிதர். என் உள்ளம் அப்படிச் சொல்கிறது. இந்த வடலூர் நிலையங்கள் எண்ணி இருபத்தைந்தாண்டுகளில் எவ்வளவு பெரிய வளர்ச்சியைப் பெறும் என்று என்னால் இப்போது நினைத்துப் பார்க்க முடிகிறது. அவரைத்தான் நம்பி ஒப்படைக்கிறேன், என்று சொன்னபோது அவர் குரல் தழுதழுத்தது".

யாரையும் நம்பாத ஓமந்தூரார் 'நம்புதற்கு ஒருவர்'என்று அருட்செல்வரை நம்பினார். அந்த நம்பிக்கைக்கு ஏற்றார்போல் ஓமந்தூரார் நிறுவனங்கள் பல்கிப் பெருகித் தழைத்து வடலூரில் இன்று ஓங்கி வளர்ந்திருக்கின்றன. 1970-ல் ஓமந்தூரார் மறைந்தார். ஆனால் அவர் அருட்செல்வர் மீது கொண்ட நம்பிக்கையை வானளவு சாதனைகளாக மாற்றித் தந்திருக்கிறார் அருட்செல்வர். ஐந்து நிறுவனங்களை ஓமந்தூராரிடம் பெற்றார் அருட்செல்வர். இன்று பயிற்சிப்பள்ளிகள், பயிற்சிக் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, கலை அறிவியல் கல்லூரி, தொழுநோய் நிவாரண நிலையம், கஸ்தூரிபா பாலிகா வித்யாலயங்கள், தொழில்பள்ளி என இருபத்தேழு நிறுவனங்களாக அவை பல்கிப் பெருகி இருக்கின்றன. கோடிக் கணக்கில் மதிப்புடைய கட்டடங்கள் வளர்ந்திருக்கின்றன.



ஒற்றை நெல்மணி பச்சை வயலாக மாறிய கதை ஓமந்தூரார் நிறுவனங்களின் அபார வளர்ச்சி. நம்பிக்கை ஞான நதியாகப் பெருகியிருக்கிறது.

‘அய்யாமுத்து என்றால் கதர்; கதர் என்றால் அய்யாமுத்து’ என்று ராஜாஜியால் புகழ்ந்துரைக்கப்பட்ட தேசபக்தர் கோவை அய்யாமுத்து தம் துணைவியாரோடு இறுதி நாள்களில் கோதைவாடி கிராமத்துக்கு அருகில் வேளாண்மை செய்து வாழ்ந்து வந்தார். முதுமை நெருங்கியதும் அருட்செல்வரை அணுகித் தம் சொத்துக்களுக்கு அவரைப் பொறுப்பாக்கி விட்டு மறைந்தார். இந்த மனிதர்தான் துளியும் வீணாகாமல் நாட்டு நலனுக்குத் தம் சொத்துக்களை நல்குவார் என்று அந்த தேசபக்தர் கருதினார். அந்தக் கருத்தை நிறைவேற்றும் வகையில் அந்த நிலத்தை சர்வோதய சங்கத்துக்குத் தானமாக நல்கினார் அருட்செல்வர். அய்யாமுத்து பழுத்த தேசியச் செம்மல்; காந்தியடிகளோடு பழகியவர். ஒரு சமயம் அண்ணல் காந்தியடிகளிடமே தம்முடைய நேர்மைக்காகச் சண்டை போட்டவர். அத்தகைய தேசபக்தருடைய மனதில் அருட்செல்வர் மீது கொண்ட ஆறாத அன்பும் மாறாத நேசமும் அவரைத் தம் மானசிக புத்திரர் ஆகும்படிச் செய்தன.

மக்கள் குடியரசுத் தலைவராய்த் திகழ்ந்த மாண்புறு மனிதர் அப்துல்கலாம். அவர் ராஷ்ட்ரபதி பவனில் இருந்தபோது பலமுறை அவரைச் சென்று சந்தித்திருக்கிறேன். என்னிடம் மிகுந்த நேசம் கொண்டவர். ஒருநாள் அவரைச் சென்று கண்டு அவரிடம் உரையாடிக் கொண்டிருந்தேன். இடையே அருட்செல்வரைக் குறித்த பேச்சு வந்தது. உடனே அய்யா கலாம். ‘அற்புதமான மனிதர், அருமையான மனிதர் இல்லையா சார்?’ என்று என்னிடம் வியந்தார். இந்த மகத்தான மனிதர் என்னுடைய பவளவிழாவுக்காகக் கோவை வந்தார். அவரோடு விழாவில் கலந்து கொள்ள வேண்டிய அருட்செல்வருக்கு உடல்நலமில்லாததால் கே.எம்.சி.எச் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். கோவை வந்த கலாம் முதல் வேலையாக மருத்துவமனையில் இருந்த அருட்செல்வரைப் பார்த்துவிட்டு விழாவுக்கு வந்தார். நம் காலத்தில் இந்திய மக்களையும், ஏன்



உலக மக்களையும் கவர்ந்த மாமனிதரான கலாமின் உள்ளத்தை அருட்செல்வர் கவர்ந்திருந்தார்.

திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயத்துக்கு தம் முதிய வயதில் வழிபாட்டுக்குச் சென்றார் தமிழில் முதன் முதல் கலைக்காளஞ்சியம் உருவாக்கிய அறிஞர் பெரியசாமித் தூரன். முதலில் சிதைந்து கிடந்த ராஜ கோபுரத்தைக் கண்டு நெஞ்சுருகினார். அருட்செல்வர் பார்வையில் இது படலாகாதா என்று நினைத்தார். இது அருட்செல்வருக்குத் தெரியாது. சில மாதங்களுக்குப் பின் தூரன் அவர்கள் மீண்டும் ஆலயத்துக்குச் சென்ற போது குடமுழுக்கு நடத்தி ராஜகோபுரத்தையும் எடுப்பாகக் கட்டும் திருப்பணி அருட்செல்வர் முயற்சியால் நடந்து விட்டதை அறிந்தார். தாம் அருட்செல்வரின் கொடை உள்ளம் பற்றிக் கொண்டிருந்த நம்பிக்கை நிறைவேறியதால் மனநிறைவு கண்டார் அறிஞர் தூரன். தம் நினைவுக்குறிப்பில் இதனைப் பதிவு செய்திருக்கிறார்.

உத்தமமான மனிதப் புனிதர்கள் நெஞ்சையெல்லாம் அருட்செல்வர் ஆட்கொண்டிருந்தது எப்படி?

தந்தையார் நாச்சிமுத்துக் கவுண்டர் தந்த செல்வத்தை இருபது முப்பது மடங்கு பெருக்கிப் பல தொழில் வளர்த்தார். கண்பட்ட இடமெல்லாம் கல்லூரிகள், கல்வி நிறுவனங்கள் கண்டார். தென்பட்ட திசைகளில் எல்லாம் திருக்கோயில்களுக்கு நிலையான திருப்பணிகள் செய்தார். வள்ளலாரையும் அண்ணல் காந்தியாரையும் இரண்டு கண்களாகக் கருதி வாழ்ந்தார். மங்கிக் கிடந்த சன்மார்க்க இயக்கத்தை மலை மேல் ஏற்றிய விளக்காக மாற்றினார். ஞானானந்த சுவாமிகள் வேண்டுகோளையேற்று எண்பதாம் வயதில் (2003) பத்ரிநாத் ஆலயத்துக்கு மேலே ஓரிடத்தில் இமயப் பேரொளியாக ஜோதியை ஏற்றி வைத்தார், சித்பவானந்தர், சச்சிதானந்தர், அபேதானந்தர், வாரியார் சுவாமிகள், மௌன சுவாமிகள், கோடி சுவாமிகள், சாந்தலிங்க இராமசாமி அடிகள் என எண்ணற்ற துறவி வேந்தர்களின் அடியாராகி 'அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே' எனப் பெருவாழ்வு வாழ்ந் தார். திருக்குறளை, திருவருட்பாவை, திருமந்திரத்தை எல்லாம் பிற மொழிகளில் மொழி பெயர்த்து வழங்கினார்.

இவையெல்லாம் அவர் பெருமையென்றாலும் இதனாலா பெரியோர்கள் அவரைப் போற்றி நின்றார்கள்?

"குறி தவறாத ஏவுகணைகளைச் செய்துவிட்டோம்

நெறி தவறாத மனிதர்களை உருவாக்கினோமா?"

என்று கவலை கொண்டவர் அருட்செல்வர்.

ஆன்மிகம் என்றால் என்ன என்று ஒருவர் அவரிடம் கேள்வி கேட்டார். ஆயிரமாயிரமாய் ஆலயப்பணி செய்த அய்யா என்ன பதில் சொன்னார்?

"என்னைப் பொறுத்தவரை, மனித வாழ்க்கையில் முடிந்த
அளவுக்குப் பிறருக்கு உபயோகமாக இருக்க வேண்டும்
அதுதான் ஆன்மிகம்"

ஆன்மிகத்தின் ஆழத்தில் திகழும் அர்த்தத்தை அருட்செல்வர் உணர்ந்திருந்தார். வள்ளற்பெருமானின் உயிரிரக்கம் அருட்செல்வரின் இரத்த அணுக்களில் கலந்திருந்தது.

"எத்துணையும் பேதமுறாது
எவ்வுயிரும் தம்முயிராய்
எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய்
உவக்கின்றார் யாவர்?"

என்ற சன்மார்க்க வேந்தரின் வினாவுக்கு விடையாக வாழ்ந்தார் அருட்செல்வர்.

அதனால்தான் பழமரம் தேடும் பறவைகள் போல தேசபக்தர்களும், அருளாளர்களும், அன்பர்களும் அவரை மொய்த்துக் கிடந்தார்கள்.

அருட்செல்வரின் புனித வாழ்வில் மனிதம் ததும்பி வழிந்தது. மனித மாண்புகளின் களஞ்சியமாக மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்கிறார் அருட்செல்வர்.



நா.மகாலிங்கம்

அண்ணலின் வழிகள்!



காந்தியடிகளின் பெயர் பொதுவாக தேச விடுதலைப் போராட்டத்தோடு அதிகம் சம்பந்தப்பட்டுக் கூறப்படுகிறதே தவிர, இதர பல துறைகளில் அவர் எடுத்துக் கொண்ட மாபெரும் முயற்சிகள் பற்றி யாரும் நினைப்பதே இல்லை.

நீண்ட நெடுங்காலமாக சமுதாயத்தின் அடித்தளமாக அமைந்து தேச உழைப்பையே மூச்சாகக் கொண்டு வாழும் மக்களின் வாழ்வு வளம்பெறவும், அவர்கள் தங்கள் நினைவுகளிலிருந்து விடுதலை பெறவும் அவர் அன்றே அடித்தளமிட்டுக் கொடுத்துவிட்டார்.

நம் நாட்டில் உழைக்கும் வர்க்கம் தன் மிகக் குறைந்த வருமானத்தையும் மது போதையில் வீணடித்துக் குடும்பங்களைத் துயரத்திலும், வறுமையிலும் ஆழ்த்தி வருவதைக் கண்டு காந்திஜி மிகவும் துயருற்றார். தேசம் முழுவதிலும் மது அரக்கன் ஏழை எளியவர்களை ஒட்ட உறிஞ்சிக் கொண்டு இருந்தான். அவர்களை வறுமையிலிருந்து மீட்கவே நாடு முழுவதும் மதுவிலக்கு வேண்டுமென விரும்பிப் பெரு முயற்சி எடுத்தார்.

அதைக் காங்கிரசின் முக்கிய கொள்கையாக்கியதோடு அல்லாமல், தேச விடுதலைப் போராட்டத்திலும் கள்ளுக்கடை மறியலை ஒரு முக்கிய இடம்பெறச் செய்தார்.

நம் சாஸ்திரங்கள் எல்லாம் ஒரே முகமாகப் பஞ்சமா பாதகங்களில் மதுவும் ஒன்று என்று பல காலமாகக் கூறி வந்தாலும், அது பல்லாயிரம் ஆண்டுகளாக விலக்க முடியாத ஒன்றாகவே இருந்தது.

அந்த மதுவை ஒழிக்கும் முயற்சி, ஒரு பொருளாதார விடுதலை இயக்கமாக காந்திஜிக்குத் தோன்றியது.

அன்றைய விவசாய மக்கள் நிலையும் காந்திஜியை மிகவும் கலக்கியது. ஆண்டு முழுவதும் அவர்கள் சரியான வேலையில்லாமல் படும் துயரத்தை மாற்ற என்ன வழி என்று அவர் சிந்தித்தார். ஆறு லட்சம் கிராமங்களில் வேலையின்றி இருந்த உழவர் குடும்பங்களை நல்ல உழைப்பாளர்களாக்கவே அவர் கதர் இயக்கத்தை உருவாக்கினார்.

கதர் பொருளாதாரமே கிராம அஸ்திவாரத்தைப் பலமுடையதாக்கும் என அவர் நம்பினார். அன்று கோணித் துணியாக இருந்த கதர் இன்று எவ்வளவு வளர்ந்துவிட்டது!

தேசப் பொருளாதாரத்தில் அது இன்னும் சிறப்பான இடத்தைப் பெற வேண்டும்.

கதரும், கைத்தறியுமே தேச மக்கள் மொத்த பேருடைய உடைத் தேவையைப் பூர்த்தி செய்யும் காலம் சீக்கிரம் வர வேண்டும். அப்படி வந்தால் நமது கிராமங்கள் எல்லாம் மிகவும் சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இன்று சுமார் 30 லட்சம் கைத்தறிக்குள்ளாகவே வேலை செய்து வருகின்றன. மக்களின் ஆடைத் தேவை முழுவதும் கைத்தறி மூலமே பூர்த்தி பெறுவது என்று வந்துவிட்டால் 250 லட்சம் தறியாக அது உயர்ந்துவிடும். எத்தனை லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு அது பிழைப்பு கொடுப்பதாக ஆகும் என்று எண்ணியது காந்திஜியின் தீர்க்க தரிசனம். இது

சக்தி களஞ்சியம்

/Omsakthimagazine



அவருடைய பிரத்யட்ச நோக்கைப் புலனாக்கும்.

கிராம மக்களிடையே இருந்த கஷ்டங்களே காந்திஜியின் கவனத்தில் எப்போதும் இருந்தது. பீகாரில் சம்பரான் சத்தியாகிரகத்தை அவர் ஆதரித்தது இதே நோக்கில்தான். அவுரி சாயம் உற்பத்தி செய்ய மிகக் குறைந்த விலைக்குச் செடிகளை விற்பனை செய்ய கட்டாயப்படுத்திய ஒரு கொடும் நிலையை எதிர்த்து இராஜன் பாபு போர் முரசு எழுப்பினார். காந்திஜி கிராம மக்களை நசுக்கும் எல்லாவற்றையும் எதிர்த்தார். இந்தக் கோரிக்கைகளே அவர் திட்டங்கள் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருந்தன.

உலக நாடுகளில் தொழிற்புரட்சி வந்த பின்னர் விவசாயத் தொழிலாளர்களுக்கும், இயந்திர தொழிலாளர்களுக்கும், சிந்தனை வேலை செய்பவர்களுக்கும் இடையே மிகுந்த ஊதிய வேறுபாடுகள் ஏற்பட்டன. காந்திஜி இந்த அம்சத்தைப் பற்றியும் ஆழ்ந்து சிந்தித்து முடிவு சொல்லி இருக்கிறார்.

சாதாரணமாகக் கிராமத் தொழிலாளியைவிட பலர் 80, 100 பங்கு ஊதியம் பெற்று வந்தார்கள். 1930-40-ல் விவசாயத் தொழிலாளியின் கூலி 10 அணா, 8 அணா என்று இருந்தபோது நீதிபதியின் சம்பளம் 3,000 ரூபாயும், கவர்னர் சம்பளம் 5,000 ரூபாயும், வைசிராய் சம்பளம் 20,000 ரூபாயுமாக இருந்து வந்ததை காந்திஜி கண்டித்தார். தேசத்தில் சம்பள வேறுபாடுகள் 1 : 10 மடங்குக்கு மேல் இருக்கக் கூடாது என்றும் அவர் சொன்னார்.

சமதர்மம் என்ற கோட்பாட்டில் பொருளாதார வேறுபாடுகளைக் குறைக்க முயன்று கொண்டிருந்தபோதும் பாபுஜி இயற்கையான பிறப்பிலே உள்ள திறமைகள் காரணமாகக் கூட ஒருவன் அதிகம் சம்பாதிக்கக் கூடாது என்று கருதினார்.

அது காரணமாகத்தான் தர்மகர்த்தா முறை என்ற புதிய சித்தாந்தத்தை வகுத்துப் பணக்காரர்களும், அறிவாளிகளும் தங்கள் வசதிகளையும், திறமைகளையும் தர்மகர்த்தாக்கள் போன்று உபயோகப்படுத்த வேண்டுமென்று விரும்பினார்.

நாட்டின் பொருளாதாரத்தில் தியாக உணர்வான உழைப்புக்கு முதலிடம் கொடுக்க



வேண்டும் என்று அவர் விரும்பினார். உணவு சாப்பிட வேண்டுமாயின் உழைக்க வேண்டும். உழைக்காமல் உண்ணுகிறவர்கள் பாவம் செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

கல்விகூட உழைப்பின் மூலமாகத்தான் பெருக வேண்டும் என்று விரும்பினார். நூற்பும் விவசாயமும் கல்வி வளர இரு தூண்களாக இருக்க வேண்டும் என்று காந்திஜி எண்ணி ஆதாரக் கல்வி முறையை உருவாக்கினார்.

காந்திஜி சாதாரண தொழிற்சங்கவாதியாக மட்டும் இல்லாமல் உழைப்பவர்களை உயர்த்துவதற்கு ஒரு புதிய சித்தாந்தத்தையே உருவாக்கிய மிகப் பெரிய பொருளாதார மேதை.

அவர் காண விரும்பிய புதிய உலகில் மக்கள் எல்லோரும் உழைப்பாளிகளாகவும், மக்களுடைய திறமையும் வசதியும் சமுதாயத்தின் பொதுச் சொத்தாகவும் இருக்கும் நல்ல நிலைமையைக் காண விரும்பினார். ●

உலகத்தில் இதுவரை தோன்றியுள்ள மதங்களையும் அவற்றைத் தோற்றுவித்த மகாபுருஷர்களையும் வரிசையாக நினைவுப்படுத்திப் பாருங்கள்.

ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும், உபதேசங்களையும் நினைவுகூருங்கள். அவர்கள் போதித்த மார்க்கங்களையும் அவை அவலம்பிக்கப் படும் வழிகளையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றிலும் ஏதாவது ஓர் அம்சம் உங்கள் மனதுக்கு ஒப்பாது இருக்கும். ஒருவர் உடலை அவசியமின்றி வருத்திக் கொள்வதைப் பற்றிச் சொல்லியிருப்பார்; இன்னொருவர் ஆசைகளை அறுத்தெறிந்துவிட்டு ஜடமாகக் கிட என்று சொல்லியிருப்பார்; வேறொருவர், எல்லாமே மாயை என்று பூனை மாதிரி கண்களை மூடிக் கொண்டிருப்பார். நாலாமவர் ஆராதனைகளையும், சடங்குகளையும் மந்திரங்களையும் கொட்டி முழங்கிக்காது செவிடுபடச் செய்வார்.



இன்னும் சிலரோ, உயிர்க் கொலையைச் செய்து வயிற்றை பிராணிகளின் இடுகாடாக்கிக் கொண்டே இறைவனின் கருணையைப் புகழ் பாடுவார்கள்.

தன்னைத்தானே சித்ரவதை செய்து கொள்வதையும், கூட்டம் கூட்டமாகப் பிராணிகளை ஆண்டவனுக்குப் பலி கொடுப்பதையும், வாழ்நாள் முழுவதும் அழுது வடியும்படியாக முகத்தை வைத்துக் கொள்வதையும் மதமாகக் காட்டிவிட்டுப் போன 'பெரியோர்களை' எல்லாம் நினைவு படுத்திக் கொண்டு நம் நாட்டின் வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். அப்படிப் பார்த்தால், அதில் பல அறிஞர் பெருமக்களைக் காணலாம்.

ஞானிகள், கவிகள், அரசர்கள், பேரரசர்கள், அமைச்சர்கள், சாதனையாளர்கள், கலை வல்லுநர்கள், சமுதாய சீர்திருத்தவாதிகள், அரசியல்ஞானிகள், வீரர்கள், வீராங்கனைகள்.

இவ்வாறு ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றுக்கு மேற்பட்ட துறைகளில் அரும் பணியாற்றி, தம்மைத் தாமே அர்ப்பணித்துக் கொண்டு அமரத்வம் பெற்று இருக்கும் பலரின் பெயர்களை அதில் காணலாம். உண்மையில் இவர்களின் வரலாறே பாரத நாட்டின் வரலாறாக இருப்பதைப் பார்க்கலாம்.

இந்தப் புண்ணிய புருஷர்களால்தான் இந்த நாட்டின் வரலாறு நமக்குக் கிடைத்திருக்கிறது. இவர்களுடைய படைப்புகளாலேயே பாரதநாடு தலைநிமிர்ந்து நிற்கும் பெருமை பெற்று இருக்கிறது. இப்படிப்பட்ட ஞான புருஷர்களில் துருவ நட்சத்திரம் போல விளங்கிக் கொண்டு இருப்பவர் திருஅருட்பிரகாச வள்ளலார்.

வள்ளல்பெருமான் ஒரு தனிமனிதராக விளங்காமல் ஒரு ஜீவசக்தியாக ஜொலித்துக் கொண்டு இருப்பவர்.

"இந்திய நாட்டின் சகோதர அறம் நாட்டப்பெறல் வேண்டும்" என்று முதன் முதலாக பாரத தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குரல் கொடுத்தவர் வள்ளலார். பாரத நாட்டின் அடிப்படையில் மனித குலத்தவரின் ஒருமைப்பாட்டை வலியுறுத்தி சர்வதேச சகோதரத்துவத்தைத் தமிழ் மக்களுக்குப் போதித்தவர், இராமலிங்க அடிகள்.

பாரத தேசிய, சர்வதேசிய ஒருமைப் பாடுகளின் அடிப்படையில் உயிர்க்குலத்தின் ஒருமைப் பாட்டை வலியுறுத்தும் "ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை" என்னும் மகாமந்திர மொழியைத் தந்த முதல்வர் வள்ளலார்.


மனித குலத்தின் ஒருமைப் பாட்டுக்குத் தடைகளாக இருக்கும் சாதி, குல பேதங்களை அழித்தொழிக்கப் பாடிய - உரையாற்றிய தமிழகத்தின் முதல்

அக்டோபர் - 5 வள்ளலார் பிறந்த தினம்

அருட்பெருங்கவி வள்ளலார்

நா.மகாலிங்கம்







சீர்திருத்தச் செம்மல்.

ஏழை - பணக்காரன் என்ற வர்க்க வேற்றுமை அவரவர் பாவ – புண்ணியங்களின் விளைவு என்று போதித்த போலிச் சமயப் புரட்டர்களின் வாதத்தை மறுத்து, சமுதாயத்திலே பொருளாதாரச் சமத்து வத்தை வலியுறுத்திய சமதர்ம ஞானி.

'அடுப்பூதும் மங்கைக்குப் படிப்பு எதற்கு?' என்று சொல்லி வந்த காலத்தில், மொழி அறிவுக் கல்வி மட்டும் அல்ல, மெய்ஞ்ஞானக் கல்வி பெறவும் பெண்களுக்கு உரிமை உண்டு என்று பிரகடனம் செய்த மாமேதை.

இந்து சமயத்தைச் சார்ந்தவர்களில் குறிப்பிட்ட ஒரு சாரார் திருக்கோயிலுக்குள் சென்று வணங்கும் உரிமை பெறாது இருந்த காலத்தில், உலகில் இருக்கும் எல்லா சமயத்தைச் சேர்ந்தவர்களும் கூடி வழிபடக் கூடிய சன்மார்க்க சத்திய ஞானசபையைக் கண்டவர், வள்ளலார்.

ஆங்கிலப் பேரரசு பாரத நாட்டை அடிமைப்படுத்தி ஆண்ட காலத்தில் "கருணை இலா காட்சி கடுகி ஒழிக!" என்று சங்கநாதம் செய்த அரசியல் ஞானி.

தெய்வத்தின் பெயரால் உயிர்ப்பலி கொடுக்கும் கொடிய வழக்கத்தை முதன் முதலில் கண்டித்த கருணை வள்ளல் அல்லவா அவர்?!

மனிதன் சாகாமல் நித்திய தேகத்துடன் வாழ முடியும் என்பதைத் தகுந்த சான்றுகள் காட்டிப் போதித்தவர். போதனை மட்டுமா? இன்றும் மரணமிலாமல் வாழ்ந்து கொண்டு இருக்கும் சரித்திர நாயகர், திருஅருட்பிரகாசர்.

கன்னித் தமிழில் அரசியல், பொருளாதாரம், சமூகம், மொழி, சமயம், தேசியம், சர்வதேசியம், பக்தி, முக்தி ஆகிய அனைத்துத் துறைகளைப் பற்றியும், சித்தாந்தம் - வேதாந்தம் ஆகிய தத்துவங்கள் பற்றியுமாக எண்ணாயிரத்துக்கும் மேற்பட்ட கவிதைகளும் கீதைகளும் பாடிய, பத்தொன்பதாம் நூற்றாண்டின் மகாகவி; அருட்பெருங்கவி!

திருவருட்பிரகாச வள்ளலார், அருட்பெருங்கவிஞர் மட்டுமல்லர். உயர்ந்த உரைநடை ஆசிரியரும் ஆவார்.அவரது பாடல்கள் எந்த அளவுக்கு உள்ளத்தை உருக்கும்வண்ணம் எளிய சொற்களில் அரிய பல சமயக் கருத்துக்கள் அமைந்தனவாகவும், புராணக் கருத்துக்களுக்குப் புது விளக்கம் தருவனவாகவும், கவிதை நயம் தலை நிமிர்ந்து நிற்பனவாகவும் அமைந்துள்ளனவோ, அதற்குச் சிறிதும் குன்றாமல், குறையாமல் அவரது உரைநடையும் எளிமையும் இனிமையும் கலந்து மிளிர்கின்றது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் உரைநடைக்குச் சீரியதோர் எடுத்துக்காட்டு வேண்டுமானால், அதற்கு வள்ளலாரின் உரைநடையைக் கூறலாம். வள்ளலார் தாம் போற்றிப் பின்பற்றி வந்த சமரச சன்மார்க்கத்திற்கு ஏற்ற இனிமையும் மென்மையும் வாய்ந்த மொழி தமிழ்மொழியே எனக் கருதினார்.


அதனால்தான், சத்தியப்பெரு விண்ணப்பத்தில்,

"இடம்பத்தையும், ஆரவாரத்தையும், பிரயாசத்தையும், பெருமறைப்பையும், போது போக்கை யும் உண்டு பண்ணுகின்ற பாஷைகளில் எனக்கு ஆசை செல்லவொட்டாது, பயிலுதற்கும், அறிதற்கும் மிகவும் இனிமையுடையதாய் சாகாக் கல்வியை இலேசில் அறிவிப்பதாய்த் திருவருள் வலத்தாற் கிடைத்த தென்மொழி (தமிழ்) ஒன்றினிடத்தே மனம் பற்றச் செய்து அத்தென் மொழிகளாற் பல்வகைத் தோத்திரப் பாட்டுகளைப் பாடுவித்தருளினீர்" என்று இறைவனைத் துதிக்கின்றார்.

"எந்தையுனைப் பாடி மகிழ்ந்து இன்புறவே வைத்தருளிச் செந்தமிழை வளர்க்கின்றாய்" என்கிறார். சமரச சன்மார்க்க நெறியையும், சீவகாருணிய ஒழுக்கத்தையும் நாட்டுமக்கள் அனைவருக்கும் உணர்த்தி அவர்களை அந்நெறிப்படுத்தி ஒழுகச் செய்ய வேண்டுமென விரும்பினார் வள்ளலார். ●

வேங்கடவ

கோவிந்தா என்று



கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான வேங்கடவனை பக்தர்கள் கோவிந்த நாமம் சொல்லி வழிபடுவதன் பின்னணியில் ஒரு சம்பவம் சொல்லப்படுகிறது.

மகாவிஷ்ணு மனித வடிவில் திருப்பதிப் பகுதியில் தோன்றினார். மனித உருவில் வந்த காரணத்தால் அவருக்கும் பசி, தாகம் எடுக்கத்தான் செய்தது. தன் பசி போக்கப் பால் தருவதற்கு ஒரு பசு இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தவர், மலையில் இருந்த அகத்திய முனிவரின் ஆசிரமத்துக்குச் சென்றார். அவரைக் கண்டதும் அவரே இந்த உலகத்தைக் காக்கும் மகாவிஷ்ணு என்பதை அகத்தியர் தம் ஞானதிருஷ்டியால் அறிந்து கொண்டார். பகவானை வணங்கி வரவேற்றார்.

''முனிவரே, நான் கலியுகத்தில் சில செயல்களை முடிக்கத் திருவுளம் கொண்டு இங்கு வந்து வசிக்கிறேன். தங்களிடம் உள்ள பசுக் கூட்டங்களிலிருந்து எனக்கு ஒரு பசுவினை தானம் செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

“சுவாமி, நீர் யார் என்பதை நான் அறிவேன். உங்களுக்கு நான் சொல்ல வேண்டிய நியதி எதுவுமில்லை. பசுவினை பிரம்மசாரிக்கு தானம் செய்யக் கூடாது என்று சொல்வர். ஒருவன் இல்லறத்தில் இருக்கும்போதுதான், அவனுக்கு தானமாகத் தரப்படும் பசுவினை அவன் நல்ல முறையில் பராமரிப்பான். இல்லத்தில் இருக்கும் அவன் மனைவி அந்தப் பொறுப்பைச் சரிவரச் செய்வாள். அப்படிப் பணிவிடை செய்ய ஆள் இல்லாத பிரம்மசாரிக்கு பசுவை தானமாகத் தர இயலாது. மேலும் கலியுகத்தில் தாங்கள் அவதரித்தது போல் அன்னை மகாலட்சுமியும் அவதரித்திருக்கிறாா். நீங்கள் அன்னையைக் கரம் பற்றி தம்பதி சமேதராக இங்கு வருவீர்கள் என்றால் நான் அடுத்த கணமே தங்களுக்கு ஒரு பசுவை தானமென அளிக்கிறேன்" என்று பணிவுடன் கூறினார்.

...னை அழைப்பது ஏன்?

பெருமாளும் முனிவர் சொல்வதில் இருக்கும் நியாயத்தைப் புரிந்துகொண்டு அங்கிருந்து சென்றுவிட்டார். பின்னர் அவர் அன்னை பத்மாவதியைத் திருமணம் செய்துகொண்டு தனது வாசஸ்தலமான திருமலைக்குச் செல்லத் தொடங்கினார். அதற்கு முன்னர் அகத்தியரின் குடிலுக்குச் சென்று அவர் தருவதாகச் சொன்ன பசுவையும் வாங்கிக் கொண்டு செல்லலாம் என்று முடிவு செய்தார். அதற்காக அவர் முனிவரின் இருப்பிடம் சென்றார். ஆனால், முனிவர் அப்போது அங்கு இல்லை.

முனிவரின் சீடர்களே அங்கிருந்தனர். அவர்களிடம் பெருமாள், 'அகத்தியர் தமக்கு ஒரு பசுவை தானமாகத் தருவதாக வாக்குப் பண்ணியிருக்கிறார்' என்பதைச் சொல்லி பசுவைப் பெற்றுச் செல்லவே தான் வந்திருப்பதாகச் சொன்னார். செய்வதறியாது திகைத்தனர் சீடர்கள்.

"ஐயா தங்களையும் அன்னையையும் கண்டால் வைகுண்டவாசனான அந்தப் பரந்தாமனையும் அன்னை மகாலட்சுமியையும் போல் உள்ளது. தாங்கள் கேட்டும் மறுக்க வேண்டிய சூழல் எங்களுக்கு. இந்த ஆசிரமத்தில் அனைத்தும் எங்கள் குருநாதர் அகத்தியருக்கே உரிமையானவை. அவர் அனுமதியில்லாமல் நாங்கள் எதையும் தரவும் பெறவும் இயலாது. நீங்கள் அவர் வரும்வரை இங்கேயே தங்கியிருந்தால் நாங்கள் உங்களுக்குப் பணிவிடை செய்யக் காத்திருக்கிறோம். அதன்பின் குருதேவர் வந்ததும், நீங்கள் பசுவினை அவரின் திருக்கரத்தாலேயே பெற்றுச் செல்லலாம்" என்றனர்.

பெருமாள் அவர்கள் சொன்ன பதிலில் வருத்தம் கொள்ளாது அவர்களின் குருபக்தியையும் அதிதிகளிடம் காட்டும் மரியாதையையும் கண்டு மகிழ்ந்தார். பின்பு அவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தன் நிரந்தர வாசஸ்தலம் நோக்கிப் புறப்பட்டார்.

சற்று நேரத்துக்கெல்லாம் அங்கு வந்த அகத்தியர் நடந்தவற்றைக் கேள்விப்பட்டு வருத்தமுற்றார். உலகையே காக்கும் உத்தமனை ஒரு பசுவின் காரணமாக அலைக்கழித்து விட்டதற்காக வருந்தினார். எப்படியும் பெருமாளைச் சந்தித்து தன்னிடம் உள்ளதில் ஆகச் சிறந்த பசுவினைத் தந்து விடுவது என்று முடிவு செய்து காமதேனுவைப் போன்ற பசு ஒன்றினை அவிழ்த்துக் கொண்டு பெருமாள் தாயாரோடு சென்ற வழியை விசாரித்துக் கொண்டு சென்றார். வேகமாக நடந்ததில் கொஞ்ச நேரத்திலேயே பெருமாள் நடந்து செல்வதை அகத்தியர் பார்த்து விட்டார். பெருமாளை நோக்கிக் குரல் கொடுத்தார்.

"சுவாமி கோவு – இந்தா" என்று சத்தமிட்டார்.

தெலுங்கில் 'கோவு' என்றால் பசு. 'இந்தா' என்றால் எடுத்துக்கொள் என்று பொருள். ஆனால் சுவாமிக்கு முனிவரின் குரல் கேட்கவில்லை போலும். மீண்டும் சத்தமாக 'சுவாமி கோவு இந்தா' என்று சொன்னார். அப்போதும் அவர் திரும்பவில்லை. மீண்டும் மீண்டும்

"சுவாமி கோவு இந்தா... சுவாமி கோவு இந்தா... சுவாமி கோவு இந்தா" என்று அழைத்துக்கொண்டேயிருந்தார். அதுவரை அன்னநடை போட்டுக் கொண்டிருந்த பெருமாளும் தாயாரும் விரைவாக நடக்க ஆரம்பித்து விட்டனர். அகத்தியரோ தன் குரலை இன்னும் உயர்த்தி 'கோவு இந்தா கோவு இந்தா' என்று வேகவேகமாக உச்சரிக்க அது கோவிந்தா... கோவிந்தா என்று ஆனது.

கோவிந்தா கோவிந்தா என்று நூற்றியெட்டு முறை அவர் அழைத்ததும் பெருமாள் நின்றார். திரும்பிப் பார்த்தார். அகத்தியர் மூச்சு வாங்க அவரிடம் ஓட்டமும் நடையுமாய்ப் பசுவோடு வந்தார். பெருமாள் அவரை ஆசுவாசப்படுத்தி, அந்தப் பசுவை தானமாகப் பெற்றுக்கொண்டார். பின்னர்,

"இந்தக் கலியுகத்தில் என்னை அழைக்க உகந்த நாமம் 'கோவிந்தா' என்பதே. நீங்கள் 'கோவு – இந்தா' என்று சொன்னதன் மூலம் 'கோவிந்தா' என்னும் நாமத்தைச் சொல்லி என்னை மகிழ்ச்சிப் படுத்தினீர். நீர் மட்டுமல்ல, இனி யார் யார் எல்லாம் தம் ஜீவனாகிய பசுவினை என்னிடம் சேர்ப்பிக்க விரும்புகிறார்களோ அவர்கள் எல்லாம் 'கோவிந்தா' என்னும் நாமத்தைச் சொன்னாலே போதும், பதியாகிய நான் உடனடியாக அவர்களை நோக்கி அனுகிரகம் செய்வேன்" என்று சொல்லி விடைபெற்றுத் திருமலையில் குடிபுகுந்தான்.

● காயத்ரி கணேஷ்





நம் மனமே நம் பகை. அதில் இருக்கும் ஆணவம், கண்மம், மாயை என்னும் மும்மலங்களும் திருச்சீரலைவாயில் இருக்கும் செந்திலாண்டவரை தரிசனம் செய்தால் வீழ்ந்துவிடும். அந்தப் பொறுப்பை அவன் கை வேல் கொண்டிருக்கிறது. அந்த வேல்தான் சூரபத்மனை இருகூறாக்கி சேவலும் மயிலுமாகச் செய்தது. ஒன்று ‘கொடி’ மற்றொன்று வாகனம். கொடி என்பது ஓரிடம் யாருக்குச் சொந்தமானது என்பதைக் குறிப்பது. சேவல் கொடி முருகனுக்குச் சொந்தமான ஆன்மாக்களின் அடையாளம். ஆணவம் அழிந்தால் நாம் அவன் சொந்த மாகிவிடுவோம். அதை வெளிப்படுத்தவே சேவல் கூவுவதைப் போல அவன் புகழைப் பாடித் திரிவோம். சேவல் கூவப் பொழுது புலரும். முருகனின் புகழைப் பாடட அஞ்ஞான இருள் விலகும்.



/Omsakthimagazine

சென்ற இதழின் தொடர்ச்சி...

அழகன் முருகனின் ஆற்றுப்படை

ஞானத்தை நாடி ஓர் ஊர்வலம்...

(திருஆவினன்குடி)

வாகனம் என்பது சுமந்து திரிவது. அவன் புகழ்பாடி அஞ்ஞான இருள் அழிந்துவிட்டால் அவன் நம்முள் எழுந்தருளிவிடுவான். அதன்பின் நாம் அவன் வாகனமாவோம். அவனையே சுமந்து திரிவோம். இந்த மாபெரும் தத்துவத்தை நாம் அடையும் தலம் திருச்சீரலைவாய்.

அஞ்ஞானம் அழிந்துவிட்டால் மெய்ஞ்ஞானம் அடையத் தகுதியுடையவர்களாகிவிடும் ஆன்மாக்கள். அதற்காகவே அடுத்த படைவீடு. திருச்செந்தூரில் அவன் கரங்களையும் முகத்தையும் பாடிப் பாடிப் போற்றிய நக்கீரர் அடுத்த படைவீட்டைப் பாடுகையில் அவன் உருவைப் போற்றவேயில்லை. உருவில் மயங்குவது உலக வழக்கம்தான். ஆனால் ஞானத்தை தரிசிக்க வேண்டுமென்றால் உருவு கடந்து நோக்கும் பக்குவம் வேண்டும். அதனால்தானோ நக்கீரர் ஆவினன்குடியில் அவன் அழகைப் பாடாமல் அவன் தகுதியைப் பாடுகிறார். அவன் தகுதி ஞானத்தால் வந்தது. அதனால்தான் அவன் அங்கே ஞான தண்டபாணியாக, ஞானாசிரியனாக, ஞான தேசிகனாகக் காட்சி கொடுக்கிறான். வெறும் தண்டு கொண்டு கோவணம் உடுத்தி எளிய ஆண்டியாகக் காட்சி கொடுக்கும் அவனைக் கண்டு அகந்தை உள்ளவர்கள் இகழ்ந்து கடப்பார்கள். ஆனால் அவன் உள்ளொளியின் மகிமையை அறிந்தவர்களோ அவன் திருவடி வணங்கி ஞானத்தைப் பெறுவார்கள்.

குருவின் தரிசன மாத்திரத்திலேயே நமக்கு ஒளி கிடைத்துவிடும். உபதேசம்

கிடைக்கும் முன் நாம் செல்ல வேண்டிய வழி கிடைத்துவிடும். மாணிக்கவாசகர் குருவின் திருவடியையே முதலில் கண்டார். அடுத்த கணம் அவர் வினைகள் ஒழிந்தன. தான் பற்றிக்கொள்ள வேண்டியது அந்தத் திருவடிகளைத்தான் என்பதை அறிந்து கொண்டார். சிவன் சந்நிதியில் குள்ள பூதமாக இருந்து பின் ஆசையால் பூமியில் பிறக்க வேண்டிய சாபத்துக்கு ஆளானவர் அவர்.

ஆசைதான் எவர் பிறப்பையும் உண்டாக்கு கிறது. ஆசையின் காரணமாக வினையையும் வினையின் காரணமாக பிறப்பையும் பூதம்போல் சுமந்து திரிகிறோம் நாம். வினை அறுபட ஆசைகள் அகல வேண்டும். அதற்கு நல்வழி காட்டும் திருவடியை தரிசிக்க



வேண்டும். வாதவூராருக்குத் திருபெருந்துறை யில் இறைவன் காட்சி கொடுத்தார். மற்ற உயிர்களுக்கெல்லாம் அந்த தரிசனத்தை அருளத் தன் குமரனுக்கு ஆணையிட்டார் போலும். அதற்காகவே அவன் ஆவினன்குடியில் அருள்பாலிக்கிறான். நக்கீரர் அந்த ஞானத்தை தரிசனம் செய்ய முடிவு செய்தார். அதைப் பாட ஆரம்பித்தார்.

திரு என்றால் திருமகள், ஆ என்றால் காமதேனு, இனன் என்றால் சூரியன், கு என்றால் பூமகள், டி என்றால் அக்னி என்பார்கள் பெரியோர். திருமகளும், காமதேனுவும், சூரியனும், பூமகளும், அக்னியும் முருகப் பெருமானை வழிபட்டுப் பேறுபெற்ற தலம் ஆகையால் இதற்குத் திருவாவினன்குடி என்ற பெயர் வந்தது என்றும் சொல்வர்.

நக்கீரர் மனக்கண்ணில் ஓர் ஊர்வலத்தைக் காண்கிறார். அது முருகனை தரிசனம் செய்யச் செல்லும் ஊர்வலம். அந்த ஊர்வலம் வித்தியாசமான வரிசையில் அமைந்திருக்கிறது.

வழக்கமாக ஊர்வலங்களில் முக்கியஸ்தர்கள்தான் முன்பாகச் செல்வார்கள். சந்திக்கப்போகும் ஆளுமையைக் கண்டு முதலில் கைகுலுக்க விரும்புவதும் அவர் களாகத்தான் இருப்பார்கள். ஆனால் இங்கே அந்த வரிசை மாறுகிறது. அந்த ஊர்வலத்தில் முன்னின்று நடத்துபவர்கள் முனிவர்கள்.

முன்னின்று என்றால் பின்னால் யாரெல்லாம் வருகிறார்கள். கந்தர்வர்கள், அவர்களின் மனைவிகள், அவர்களுக்குப் பின் தேவர்கள், அவர்களுக்குப் பின் திருமால், இந்திரன் ருத்திரன் ஆகிய மூவர் வருகிறார்கள். இவர்களோடு ஆதித்தியர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மர், அசுவினி தேவர் என்னும் மருத்துவர் இருவர் என வானுலகில் வாழும் தேவர்கள் குழாம் முழுமையும் அந்த வரிசையில் இருக்கிறது.

இந்த வரிசை முறையையும் அது ஏன் என்பதையும் சூட்சுமமாகப் பாடுகிறார் நக்கீரர். வரிசையில் முதலில் நிற்கிறார்கள் முனிவர்கள். அவர்களின் தோற்றம் எப்படி இருக்கிறது தெரியுமா?

சீரை தைஇய வுடுக்கையர் சீரொடு

வலம்புரி புரையும் வானரை முடியினர்

மரவுரியினைத் தொடுத்துச் செய்த உடையினை உடுத்தவரும், சிறப்புடன் வலம்புரிச்சங்கு போன்ற வெள்ளிய நரைத்த முடியினைக் கொண்ட முனிவர்கள் முன் செல்கிறார்கள் என்கிறார் நக்கீரர்.

இது என்ன விநோதம்... எலும்பு துருத்திக் கொண்டிருக்கும் அழகில்லாத மெலிந்த உடலை உடையவர்களா முன்வரிசையில் செல்வார்கள்... பேரழகும் கம்பீரமும் உடையவர்கள் அல்லவா முன் வரிசையில் இருக்க வேண்டும்... அப்படி முன் வரிசையில் அழகுடையவர்களைக் கண்டால் காண்போர் மனம் குளிரும். தன் வாசல் நாடி வருகிறவர் களை அகமும் முகமும் மலர வரவேற்பார்கள். இதுதானே உலக வழக்கம்.

ஆனால், முருகப் பெருமானை தரிசனம் செய்யச் செல்லும் ஊர்வலத்திலோ அழகு முன்னிலைப் படுத்தப்படவில்லை. சரி அழகாக இல்லாமல் இருந்தால் பரவாயில்லை. அவலட்சணமாக இருந்தால்...

மானினுரிவை தைஇய வூன்கெடு மார்பி

னென்பெழுந் தியங்கு மியாக்கையர்

என்கிறார் நக்கீரர்.

அதாவது, மானின் தோல் போர்த்திய தசை (சதை) கழிந்த மார்பு அமைந்த எலும்பு வெளியில் தோன்ற உலவும் உடம்பை உடையவர்கள். ஆனால் அவர்கள்தான் முன்வரிசையில் செல்கிறார்கள். காரணம் என்ன என்பதையும் நக்கீரரே சொல்கிறார்.

கடுஞ்சினங் கடிந்த காட்சிய ரிடும்பை

யாவது மறியா வியல்பினர் மேவரத்

துனியில் காட்சி முனிவர்

கடுஞ்சினம் ஒழித்தவர்கள். கோபம் இல்லை என்றால் ஆசை இல்லை என்று பொருள். ஆசை இல்லை என்றால் காமம் இல்லை என்று பொருள். அப்படி ஆன்மாவின் பகைவர் களான இந்த மூன்று குணங்களையும் அவர்கள் நீக்கிவிட்டபடியால் அவர்களுக்குத் துன்பம் என்பதே இல்லை. துன்பம் இல்லை என்றால் அறிவு நிறைந்தவர்களாக இருக்கிற மேலோர்களாக அவர்கள் இருக்கிறார்கள்.



முருகன் சந்நிதியில் யாருக்கு முதலிடம் கிடைக்கும் என்னும் சூட்சுமமான பொருள் இங்கே விளங்குகிறது அல்லவா. அழகோ, தேஜஸோ, பதவியோ அவன் முன் முதன்மைப் படுவதில்லை. ஆலயங்களில் தரிசனம் காணக் காத்திருக்கையில் சிறப்பு தரிசனம் என்று பலர் முன் சென்று இறைவனை தரிசிப்பதைக் காணலாம். சிலர் முக்கியஸ்தர்கள் தரிசனம் என்று சென்று காண்பதும் உண்டு. அப்படிச் சென்றால் அவன் அருள் கிடைக்கும் என்றால் இந்த ஊர்வலத்தின் முதலில் ருத்திரனும், விஷ்ணுவும், இந்திரனும் அல்லவா முன்னால் செல்லும் முக்கியத்துவம் பெற வேண்டும்?







ஆனால், அவ்வாறு இல்லாமல் முனிவர்களும் அவர்களைப் பின் தொடர்ந்து கந்தர்வர்களும் அல்லவா வருகிறார்கள்?

முனிவர்களைத் தொடர்ந்து கந்தர்வர்கள் செல்கிறார்கள்.

புகைமுகந் தன்ன மாசில்தூ உடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவி
னல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென்மொழி மேவல ரின்னரம் புளர

கந்தர்வர்களும் அவர்களின் மனைவிகளும் முனிவர்கள் பின் செல்கிறார்கள். இந்த கந்தர்வர்கள் இசையில் பெரியவர்கள். யாழினை இசைத்து அவனைத் தொழுபவர்கள். இறைவனை இசையால் தொழும் பாக்கியம் பெற்றவர்களிடம் என்ன மாசு இருக்க முடியும்... மாசில்லாத தன்மையோடு விளங்குபவர்கள். அவர்களோடு அவர்களின் மனைவியர் வருகின்றனர். அவர்களோ அழகுக்கு இலக்கணமாகத் திகழ்பவர்கள். புகைபோன்ற மெல்லிய உடையை உடுத்தியிருப்பவர்கள். முனிவர்கள் அழகில்லாதவர்களாக இருந்தார்கள். அவர்களைப் பின் தொடரும் பெண்களோ அழகிற்கே இலக்கணமாகத் திகழ்கிறார்கள். அவர்கள் மேனி பொன்னிறமாக ஒளிர்கிறதாம். அங்கங்கள் எல்லாம் கவர்ந்திழுக்கும் தன்மையுடையவை என்கிறார் நக்கீரர்.

நோயின் றியன்ற யாக்கையர் மாவி
னவிர்தளிர் புரையு மேனிய ரவிர்தொறும்
பொன்னுரை கடுக்குந் திதலைய ரின்னகைப்
பருமந் தாங்கிய பணிந்தேந் தல்

என்று புகழ்கிறார் நக்கீரர்.








ஆனால், அவன் சந்நிதியில் யாரும் அதைக் கண்டு காமுறவில்லை. காரணம் அவர்களின் மனம் பக்தியில் தோய்ந்திருக்கிறது. பக்தி மனதில் தோன்றிவிட்டால் கண் காண்பதைக் கொண்டு ஆசை உண்டாகாது. அப்படி உண்டானால் மனம் இன்னும் அவன்பால் செல்லவில்லை என்று பொருள். மனம் அவனை எண்ணவில்லை என்றால் நாம் தரிசனம் செய்வது சிற்பமாக இருக்குமே தவிர அவன் திருவருள் தரிசனமாக இருக்காது. கல்லை மட்டும் கண்டு கடவுளைக் காணமுடியவில்லை என்றால் அதற்கு ஆலயம் செல்வானேன்... அழகும் திறமையும் வாய்ந்த கந்தர்வப் பெண்கள் பாடிச் செல்ல அவர்களைத் தொடர்ந்து தேவர்கள் வருகிறார்கள்.

உண்மையில் இந்த ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் தேவர்கள்தான். முன்வரிசையில் முனிவர்களையும் பின் வரிசையில் கந்தர்வர்களை யும் செல்ல வேண்டிக்கொண்டவர்களும் அவர்கள்தான். தங்களுக்குத் துணை வருமாறு இந்திரன், விஷ்ணு, ருத்திரன் ஆகிய மூவரையும் வேண்டிக்கொண்டவர்களும் அவர்கள்தான். ஏன்? அச்சத்தோடு அவனருள் வேண்டி அவர்கள் மேற்கொள்ளும் இந்த ஊர்வலம்தான் எதற்காக? மூவர் என்றால் பிரமனும், விஷ்ணுவும், சிவனும்தானே... பிரமன் ஏன் இந்த வரிசையில் இல்லை... அவன் எங்கு சென்றான்?

தியானிப்போம்...

ராசிபலன்



மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதம்)

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் காணப்படும். மாதத்தின் பிற்பகுதியில் எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். குழந்தைகளின் உடல்நலனில் கவனம் தேவை அவர்களுடன் அனுசரணையுடன் பேசித் தட்டிக் கொடுத்துச் செல்லவும். கணவன் மனைவியிடையே சிறுசிறு வாக்குவாதங்களும் பூசல்களும் இருந்தாலும் சிறிது நேரத்தில் எல்லாம் சரியாகி விடும். ஒருவரை ஒருவர் அனுசரித்துச் சென்றால் நன்மை உண்டு. திருமண வயதில் உள்ள சிலருக்குத் திடீரென திருமண யோகம் ஏற்படும். அதிகரித்தாலும் மாதத்தின் பிற்பகுதியில் வருமானம் அதிகரித்து எல்லா வற்றையும் சமாளித்து விடுவீர்கள். தாய்மாமன் வழியில் பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பேசும்பொழுது கவனமுடன் இருக்கவும். மாத முற்பகுதியில் வாழ்க்கைத்துணை வழியில் அனுகூலம் உண்டு.

அலுவலகத்தில் வேலைப் பளு சற்று அதிகமாக இருந்தாலும் மாதப் பிற்பகுதியில் சக ஊழியர் களின் உதவியுடன் எல்லாவற்றையும் சமாளித்து விடுவீர்கள். நீண்ட நாள்களாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த புதிய வேலைவாய்ப்பு சிலருக்கு அமையும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் சற்று கடினமாக உழைக்க வேண்டி இருந்தாலும் குருவின் பார்வையினால் பணவரவிற்குக் குறையிருக்காது. கூட்டுத் தொழில் அல்லது வியாபாரம் சம்பந்தமான டாக்குமெண்ட் விஷயங்களில் புதன் சாதகமாக இல்லாததால் மாதத்தின் பிற்பகுதியில் முயற்சி செய்யவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாத முற்பகுதி மிகவும் நன்றாக உள்ளது. மாதத்தின் பிற்பகுதியில் அண்டை அயலாருடன் சற்று கவனமுடன் பேசவும். எனினும் குருவின் பார்வை யினால் பிரச்னைகளில் இருந்து தப்பி விடுவீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 8,9,10

அதிர்ஷ்ட நாள்கள்: 2,6,11,16,19,23,28,31

வணங்க வேண்டிய தெய்வம் : விநாயகருக்கு சங்கடஹர சதுர்த்தி அன்று விரதம் இருந்து விளக்கேற்றி அருகம் புல்லால் அர்ச்சனை செய்ய சங்கடங்கள் நீங்கும்.



ரிஷபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1,2-ம் பாதம்)

சுற்று வட்டாரத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். பணவரவு அதிகமாக ஏற்படும். பிள்ளைகள் வழியில் பாராட்டும், மகிழ்ச்சியும் ஏற்படும். தந்தைவழியில் மாதத்தின் பிற்பகுதியில் அனுகூலமும் உதவியும் உண்டு. மனைவி வழியிலும் நண்பர்களின் வழியிலும் சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மிகவும் சந்தோஷமாகக் காணப்படுவீர்கள். சகோதர சகோதரிகளின் வழியில் பிரச்னைகளைத் தவிர்க்கவும். மாத முற்பகுதியில் தந்தையுடன் சிறிது கருத்து வேறுபாடு ஏற்பட்டுப் பிற்பகுதியில் சரியாகிவிடும். சிலருக்குத் தங்களுக்குப் பிடித்த புதிய வாகனம் வாங்கும் யோகமும் ஏற்படும். உறவினர்களின் வழியில் உதவிகள் கிடைக்கும். நண்பர்களின் வழியிலும் வாழ்க்கைத்துணை வழியிலும் உங்களின் ஆலோசனைகளை கேட்டு நடந்து கொள்வார்கள். உங்களால் இளைய சகோதர சகோதரிகளுக்கு உதவியும் அனுகூலமும் உண்டு. குழந்தைகளின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மாத முற்பகுதியில் தங்களின் ஆரோக்கியத்திலும் சற்று கவனம் தேவை. மாதப் பிற்பகுதியில் ஆரோக்கியத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

அலுவலகத்தில் வேலைச்சுமை அதிகரித்தாலும் சக ஊழியர்களின் உதவியுடன் அனைத்து வேலைகளையும் சரிவரச் செய்து முடிப்பீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாதப் பிற்பகுதியில் வியாபாரம் சிறந்து காணப்படும். நல்ல விதத்தில் முன்னேற்றம் ஏற்படும். திரும்பி வராது என்று நினைத்த பணம் உங்களுக்குக் கிடைக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் சந்தோஷமும் உண்டாகும். அண்டை அயலார் வீட்டு விசேஷங்களுக்குச் சென்று பாராட்டுகளைப் பெறுவீர்கள். உங்கள் முயற்சி களுக்குப் பாராட்டும் புகழும் கிடைக்கும்.

சந்திராஷ்டம நாள்கள்: 10,11,12

அதிர்ஷ்ட நாள்கள்: 1,3,6,10,16,17,22,28,30

வணங்க வேண்டிய தெய்வம் : மஹாலக்ஷ்மி, அம்பாள். ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் விளக்கேற்றி மஹாலக்ஷ்மி அஷ்டகம்,லலிதா சஹஸ்ரநாமம் சொல்வது நன்மையை அதிகரிக்கும்.

மேஷம் முதல் மீனம் வரை 12 ராசிகளுக்கான ராசிபலன் அதிர்ஷ்டக் குறிப்புகள் மற்றும் எளிய பரிகாரங்களுடன் கணித்துத் தந்திருக்கிறார் ஜோதிடர் **பூமணி நாராயணன்,**
B.A. (Tamil) M.Sc (Astrology) ஜோதிடக் கலை பயிற்றுநர்



மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதம்)

சுற்றுவட்டாரங்களில் மிகவும் கௌரவத்துடன் நடத்தப்படுவீர்கள். இந்த மாதம் மிகவும் சிறந்த மாதமாக இருக்கப் போகிறது. டாக்குமெண்ட் சம்பந்தமான விஷயங்களில் மாதத்தின் பிற்பகுதியில் கையெழுத்திடவும். பெண் குழந்தைகள் வழியில் சுபச் செலவுகள் ஏற்படும். தேவையான ஆடை ஆபரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வீண் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணவிஷயத்தில் கவனம் தேவை. வீட்டில் உதவிக்கு இருக்கும் வேலையாள்களிடம் அனுசரித்து நடந்துகொள்ளவும். சனி பகவானின் பார்வையினால் பணவரவு தடைப்பட்டாலும் குருபகவானின் பார்வையினால் பணவரவு சற்று தாமதமாகவேனும் கிடைத்துவிடும். நண்பர்களிடம் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். மாத முற்பகுதியில் மனைவியிடமிருந்து தாங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும்.

அலுவலகத்தில் வேலைச்சுமை சற்று அதிகரித்தாலும் தங்களின் சமயோசித புத்தியால் அதனை சமாளித்து விடுவீர்கள். உங்கள் ஆலோசனைகளை முன்பு மறுத்த மேலதிகாரிகள் தற்போது ஏற்றுக் கொள்வார்கள். அதனால் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் அஷ்டமச் சனி நடை பெற்றாலும் குருவின் பார்வையினால் லாபம் அதிகமாகக் கிடைக்கும். தனவரவு அதிகரித்துக் காணப்படும். புதிய வியாபார ஒப்பந்தம் செய்வதை சற்று தள்ளிப் போடவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குக் கையில் பணம் அதிகப்படியாக இருந்தாலும் சற்று சிக்கனமாகச் செலவு செய்யுங்கள். சுபச்செலவுக்கு வாய்ப்பு உண்டு. உற்றார் உறவினரிடம் தங்களின் கௌரவம் அதிகரிக்கும். மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 12,13,14

அதிர்ஷ்ட நாள்கள்: 3,7,10,16,18,21,25,28,30

வணங்க வேண்டிய தெய்வம்: விநாயகப் பெருமானுக்கு விளக்கேற்றி தும்பைப் பூவால் அர்ச்சனை செய்யவும். மகாவிஷ்ணுவை சஹஸ்ரநாமம் பாராயணம் செய்து வணங்குவது நல்லது.



கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயில்யம்)

பணவரவு திருப்தி தருவதாக இருக்கும். இந்த மாதம் முழுவதும் தாங்கள் நினைத்ததை விடப் பணவரவு மிகவும் அதிகரித்துக் காணப்படும். உடன் பிறந்தவர்களுடன் அநாவசியப் பேச்சைத் தவிர்த்தால் பிரச்னைகளைக் குறைக்கலாம். மாதப் பிற்பகுதியில் செவ்வாய் வலுவுடன் காணப் படுவதால் எந்த விஷயங்களிலும் துணிச்சலுடன் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். குழந்தைகளின் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். கணவன் மனைவியிடையே சிறுசிறு வாக்குவாதங்கள் ஏற் பட்டு பிறகு சரியாகும். மாத முற்பகுதியில் குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். கண்டகச் சனி நடப்பதால் வண்டி வாகனங்களில் செல்லும் போதும் உடல்நிலையிலும் கவனம் தேவை. தந்தையின் ஆரோக்கியத்திலும் அக்கறை அவசியம். பணம் செலவு செய்யும்போது யோசித்து அவசியத்திற்கு மட்டும் செலவு செய்ய வேண்டும். வெளியூர் பயணம் செல்லும்போது கைப்பொருள் களை பத்திரமாகப் பாதுகாத்துக் கொள்ளவும். சிலர் வீட்டில் நடைபெறும் சுப காரியங்களுக்காக ஆடை ஆபரணங்கள் வாங்கி சந்தோஷப் படுவீர்கள். புதிதாக அலுவலக இடமாற்றம் அடைந்தவர்கள் அந்த சூழ்நிலைக்குத் தங்களைப் பழக்கி கொள்வீர்கள்.

அலுவலகத்தில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும். மேலதிகாரிகள் அனுசரணையுடன் நடந்து கொள்வார்கள். தாங்கள் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாக கிடைத்தாலும் உதவிகரமாக இருக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். மற்றபடி வியாபாரம் சிறந்து காணப்படும். பணவரவு அதிகரித்துக் காணப்படும். விற்பனை எதிர்பார்த்தபடி இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குப் பண விஷயமாக இருந்தாலும் சுப காரியங்களாக இருந்தாலும் மிகவும் மகிழ்ச்சி தரும் மாதமாகவே இருக்கப்போகிறது. நீண்ட நாள்களாக எதிர்பார்த்திருந்த ஆடம்பரப் பொருள்களை வாங்கப் போகிறீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 14,15,16

அதிர்ஷ்ட நாள்கள்:1,6,9,12,14,19,23,26,30

வணங்க வேண்டிய தெய்வம்: மகாலட்சுமியை வெள்ளியன்று விளக்கேற்றி வழிபாடு செய்யவும்.



(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாதம்)

பண வரவு அதிகரிக்கும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடை பெறும். அரசாங்க வழியில் அனுகூலம் உண்டாகும். நெடு நாள்களாக எதிர் பார்த்திருந்த பணம் கிடைக்கும். குழந்தைகள் நலனில் அக்கறை தேவை. உடன் பிறந்தோருடன் பிரச்னைகள் ஏற்பட்டு விரைவில் சரியாகும். பெண் குழந்தைகள் சம்பந்தமாக சுபச்செலவுகள் ஏற்படும். அனைத்து முயற்சிகளும் மாதப் பிற்பகுதியில் வெற்றி அடையும். பிள்ளைகளை அவர்கள் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நல்லது. உறவினர்கள் வீட்டு விருந்து விசேஷங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டாகும். நெடுநாள்களாகப் பாதியில் நிறுத்தி வைத்திருந்த வீட்டுவேலைகளை மறுபடியும் ஆரம்பிப்பீர்கள். குடும்பத்திற்கு தேவையான பொருள்களை வாங்கி சந்தோஷப்படுவீர்கள். பிரிந்திருந்த கணவன்–மனைவி ஒன்று சேருவார்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படும் வாய்ப்பு உண்டாகும். உறவினர் வகையில் சிறிது ஜாக்கிரதையுடன் பக்குவமாகவும் நடந்து கொள்வது நன்மை பயக்கும். உடல்நிலையில் சற்று கவனம் தேவை. வண்டி வாகனங்களில் செல்லும்போது எச்சரிக்கையுடன் செல்லவும். நினைத்த காரியம் இந்த மாதம் நிறைவேறும்.

அலுவலகத்தில் இதுவரை இருந்து வந்த இறுக்கமான சூழ்நிலை மாறும். அலுவலக ஊழியர் களிடமும் மேல் அதிகாரிகளிடமும் அனுசரித்து நடந்து கொள்ளுங்கள். தாங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வும் வேலை மாற்றமும் கிடைக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைத்தாலும் பணவரவிற்குக் குறைவிருக்காது. அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அண்டை அயலாருடன் சுபநிகழ்ச்சிகளுக்குச் சென்று வருவீர்கள். தாங்கள் விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்ச்சியடைவீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 17,18,19

அதிர்ஷ்ட நாள்கள்:2,4,8,10,15, 20,24,28,31

வணங்க வேண்டிய தெய்வம்: பிரதோஷம் அன்று சிவனுக்கு வில்வம் சாத்தி லிங்காஷ்டகம் சொல்லி வழிபாடு செய்யவும்.



(உத்திரம் 2,3,4 -ம் பாதம் ஹஸ்தம், சித்திரை 1,2-ம் பாதம்)

குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் காணப்படும். வெளி வட்டாரத்தில் செல்வாக்கும் மரியாதையும் அதிகரிக்கும். மாத முற்பகுதியில் உறவினர் வகையில் சிறிய பிரச்னைகள் ஏற்பட வாய்ப்பு இருப்பதால் பொறுமை யாகக் கையாளுவது அவசியமாகும். கேது சாதகமாக உள்ளதால் மிகவும் தைரியத்துடன் காணப்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறைந்து காணப்படும். நண்பர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைக் குறைத்துக் கொள்ளவும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் அல்லது குலதெய்வக் கோயில் சென்று வரும் சூழ்நிலை ஏற்படும். இந்த மாதத்தில் குடும்பத்தில் உள்ள பெண்களால் அனுகூலமும் சந்தோஷமும் ஏற்படும். உடன் பிறந்தோருடன் விவாதம் செய்வதைத் தவிர்த்தால் பிரச்னைகள் குறையும். குழந்தைகள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. பெரியவர்கள் மற்றும் அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனைகளைக் கேட்டால் சில பிரச்னைகளுக்கு சுலபமாக முடிவு காணலாம். சிலருக்கு திடீரென்று திருமண யோகம் ஏற்படும். மனதிற்குப் பிடித்த மணவாழ்க்கை அமையும்.

அலுவலகத்தில் வேலை பளுவுடன் சேர்ந்து மறைமுக எதிரிகளின் பிரச்னையும் அதிகரித்துக் காணப் பட்டாலும் அதை தங்களின் சமயோசித புத்தியால் கண்டறிந்து நாசுக்காகக் கையாண்டு வெற்றி காண்பீர்கள். அலுவலக வேலைகளைத் தாமதமின்றி செவ்வனே செய்து முடிப்பீர்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் சற்று கவனமுடன் இருக்க வேண்டிய நேரமிது. கூட்டுத் தொழிலிலோ புதிய வியாபார ஒப்பந்தங்களிலோ தற்போது கையெழுத்திட வேண்டாம். மாதத்தின் பிற்பகுதியில் வியாபாரம் சிறக்கும். பொருளாதாரம் பெருகி லாபம் அதிகரிக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு இந்த மாதம் மிகவும் அதிர்ஷ்டமான மாதமாக இருக்க போகிறது. தாங்கள் நினைத்த ஆடை ஆபரணங்கள் அனைத்தையும் வாங்கி மகிழ்வீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 19,20,21

அதிர்ஷ்ட நாள்கள்: 1,6,9,12,14,19,23,26,30

வணங்க வேண்டிய தெய்வம்: ஏழுமலையானை மலர் சாத்தி வழிபடவும். தேய்பிறை அஷ்டமியில் காலபைரவர் வழிபாடும் நலம் சேர்க்கும்.

துலாம்

(சித்திரை 3,4-ம் பாதம், சுவாதி, விசாகம் 1,2,3-ம் பாதம்)

வெளிவட்டாரத்தில் செல்வாக்கு அதிகரிக்கும். மாதப் பிற்பகுதியில் புதிய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். தாங்கள் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும், எதிர்பார்த்திருந்த பணவரவும் கிடைக்கப் பெறுவீர்கள். குடும்பத்திற்குத் தேவையான புதிய பொருள்களை வாங்குவீர்கள். சிலருக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும். குடும்பமே சந்தோஷத்தில் மிதக்கும். வாழ்க்கை துணையிடம் இருந்து எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். நண்பர் மற்றும் உறவினர்களின் வீட்டு விசேஷங்களில் கலந்துகொள்வீர்கள். இதுவரை இருந்த உடல் உபாதைகள் நீங்கி ஆரோக்கியம் மேம்படும். குடும்பத்தில் சிறிய பிரச்னைகள் ஏற்பட்டாலும் சிறிது நேரத்திலேயே சரியாகிவிடும். பணம், நகை சம்பந்தமான விஷயங்களைப் பேசும் போது சற்று கவனமுடன் வார்த்தைகளைக் கையாளுங்கள். குடும்பத்தில் உடன்பிறப்புகளின் வருகையினால் சந்தோஷம் நிறைந்து காணப்படும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை. தந்தையின் ஆரோக்கியத்திலும் கூடுதல் கவனம் தேவை. குழந்தைகள் வகையில் சுபகாரியங்கள் நடக்கும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். தீவிர முயற்சியின் பெயரிலேயே சில வேலைகளைச் செய்து முடிக்க வேண்டி வரும். ஆனாலும் சக ஊழியர்களின் உதவியுடன் எல்லா வேலைகளையும் கனகச்சிதமாக முடித்து விடுவீர்கள். கவலை வேண்டாம்.

தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு மாதத்தின் பிற்பகுதியில் லாபம் அதிகரிக்கும். சற்றுக் கூடுதலாக உழைக்க வேண்டி வரும். வியாபார விஷயமாக வெளியூர் பயணம் மேற்கொள்ள நேரிடும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு இந்த மாதம் முழுவதும் தாங்கள் நினைத்த விஷயம் அனைத்தும் நடக்கும். உறவினர்கள் வீட்டு சுப காரியங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

சந்திராஷ்டம நாள்கள்: 21,22,23

அதிர்ஷ்ட நாள்கள்: 2,5,9,14,19,20,26,30

வணங்க வேண்டிய தெய்வம்: வெள்ளியன்று துர்கை அம்மனுக்கு அரளிப்பூ சாத்தி துர்கா அஷ்டகம் சொல்லி வழிபடவும். வியாழக் கிழமை களில் தட்சிணாமூர்த்தியை வழிபாடும் நன்று.

விருச்சிகம்

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை)

மாத முற்பகுதியில் அனைத்துக் காரியங்களிலும் வெற்றி உண்டாகும். தாங்கள் எடுக்கும் புதிய முயற்சிகள் அனைத்தும் பலிதமாகும். பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். சிலருக்குப் புண்ணியத் தலங்களுக்கும், குலதெய்வக் கோயில்களுக்கும் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். உறவினர்களால் பிரச்னைகளும் செலவுகளும் ஏற்படக்கூடும் என்பதால் கூடுமானவரை அளவோடு பேசவும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு பிரச்னைகள் ஏற்படும். நிதானமாக யோசித்துச் செயல்படவும் மாத முற்பகுதியில் அரசாங்கத்திலிருந்து எதிர்பார்த்த செய்தி வந்து சேரும். மின்சார சாதன வகையில் செலவுகள் ஏற்படப் போவதால் சிக்கனமாகச் செலவழியுங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் நிறையும். குடும்ப விஷயம் பேசும்போது உறவினர்களின் தலையீட்டைத் தவிர்க்கவும். திடீரென்று பணவரவு ஏற்படும்.

அலுவலகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். சிலருக்குத் தாங்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றமும் ஏற்படப் போவதால் மிகவும் சந்தோஷம் அடைவீர்கள். சக ஊழியர்கள் உங்களுடன் மிகவும் ஒற்றுமையாக இருப்பார்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்த அளவில் கிடைக்கும். நிலுவையில் இருந்த பழைய கடன் வசூலாகும். வியாபாரத்திலிருந்த மறைமுக எதிரிகளை முறியடிப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மாத முற்பகுதி மிகவும் யோகமானதாக அமையும். தாங்கள் நீண்ட நாள்களாக நினைத்திருந்த மனையோ வீடோ வாங்கும் யோகம் ஏற்படும். தாயிடமிருந்து மறைமுக உதவி கிடைக்கப் பெறுவீர்கள்.

சந்திராஷ்டம நாள்கள்: 24,25, 26

அதிர்ஷ்ட நாள்கள்:15,9,16,19,22,28,30,31

வணங்க வேண்டிய தெய்வம்: செவ்வாய் பகவானுக்கு சிவப்பு மலர் கொண்டு அர்ச்சிப்பதும், சனிக்கிழமைகளில் ஆஞ்சநேயருக்கு அர்ச்சனை செய்வதும் நன்மை தரும்.



தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதம்)

பணவரவு கணிசமாக உயரும். மாதப் பிற்பகுதியில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். நீங்கள் நெடுநாள்களாக சாதிக்க வேண்டும் என்று நினைத்த காரியத்தை சாதிப்பீர்கள். மாதத்தின் பிற்பகுதியில் ஆடை ஆபரணச் சேர்க்கை உண்டாகும். பழைய வாகனத்தை மாற்றி விட்டுப் புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். குடும்பத்தில் சந்தோஷமும் நிம்மதியும் ஏற்படும். சிலருக்குக் குழந்தை பாக்கியம் ஏற்படும். மாதப் பிற்பகுதியில் தந்தையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிலருக்கு மனை அல்லது வீடு வாங்கும் யோகம் ஏற்படும். மாத முற்பகுதியில் திடீரென்று அதிர்ஷ்டம் ஏற்பட்டு தன வரவு அதிகமாகும். புதிய ஆபரணம் வாங்குவீர்கள். குடும்பத்தில் பேசும்போது கவனம் தேவை. தெரியாத நபர்களுக்கு நகை இரவல் கொடுக்கவோ பணம் கைமாற்றாகவோ கடனாகவோ கொடுக்க வேண்டாம். அரசாங்கம் சம்பந்தமான அனுகூலமான செய்தி ஒன்று வந்து சேரும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். உறவினர்களுடனும் உடன் பிறந்தவர்களுடனும் சந்தோஷத்தில் மிதப்பீர்கள்.

அலுவலகத்தில் இருந்து வந்த இறுக்கமான சூழ்நிலை மாறும். சக ஊழியர்களின் உதவியுடன் அனைத்து வேலைகளையும் செய்து முடிப்பீர்கள். நெடுநாள்களாக எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு ஊதிய உயர்வு முதலியவை கிடைக்கப்பெறுவீர்கள். மதிப்பு மரியாதை அதிகரிக்கும்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாதப் பிற்பகுதியில் வியாபாரம் அதிகரித்து தனவரவு அதிகரிக்கும். கூட்டு வியாபாரமோ தொழிலோ தற்போது தவிர்க்கவும். புதிதாக வியாபாரத்தை விரிவுபடுத்தும் முயற்சியையும் தவிர்க்கவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குப் புதிய ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். விருந்து விசேஷங்களில் கலந்து கொண்டு சந்தோஷப்படு வீர்கள். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும்.

சந்திராஷ்டம நாள்கள்: 1,2, 27,28,29

அதிர்ஷ்ட நாள்கள்: 4,6,9,11,15,19,24,26,31

வணங்க வேண்டிய தெய்வம்: குரு பகவானுக்கு விளக்கேற்றி வழிபடவும். சனிபகவானுக்கு சனிக்கிழமையன்று நல்லெண்ணெய் தீபம் ஏற்றி வழிபடத் தடைகள் நீங்கும்.



மகரம்

(உத்திராடம் 2,3,4-ம் பாதம், திருவோணம், அவிட்டம் 1,2-ம் பாதம்)

காரிய அனுகூலம் உண்டாகும். புதிய வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். நண்பர்களிடமிருந்து நீங்கள் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். இதுவரை கிடைக்காது என்று நினைத்த பணத்தை எதிர்பாராதவிதமாக திருப்பித் தருவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் ஆனந்தமும் உண்டாகும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். பெண் குழந்தைகளால் அதிக மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தைவழி உறவுகளால் மாத முற்பகுதியில் அலைச்சலும் செலவுகளும் ஏற்பட வாய்ப்பு உண்டு. மாதப் பிற்பகுதியில் குழந்தைகளிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு சரியாகி விடும். சகோதர சகோதரிகள் இடையே இணக்கம் ஏற்பட்டு மிகவும் மகிழ்ச்சியுடன் திகழ்வீர்கள். அடிப்படை வசதிகளை அதிகரித்துக் கொள்ளும் சூழ்நிலை ஏற்படும். வீட்டிற்கு வேண்டிய புதிய மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். தாய்மாமன் வழியில் மனஸ்தாபம் ஏற்பட்டு உடனே சரியாகி விடும். மாதப் பிற்பகுதியில் வாழ்க்கைத் துணையால் லாபமும் அனுகூலமும் ஏற்படும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். இருந்தாலும் மாதப் பிற்பகுதியில் உடன் வேலை பார்ப்பவர்களின் உதவியுடன் எல்லா வேலைகளை யும் சரிவர முடித்து விடுவீர்கள். தாங்கள் எதிர்பார்த்த இடமாற்றம் பதவி உயர்வுடன் ஏற்பட வாய்ப்புண்டு.

தொழில் மற்றும் வியாபாரத்தில் மாதப் பிற்பகுதியில் எதிர்பார்த்ததை விட அதிக லாபம் கிடைக்கும். ஆனாலும் சனி பகவானின் பார்வையினால் சில தடங்கல்கள் ஏற்பட்டுப் பிறகு சரியாகிவிடும். பற்று வரவு சுமுகமாக நடை பெறும்.

பெண்களுக்குக் குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறப் போவதால் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். சகோதரிகளுடன் இணக்கமாக இருப்பீர்கள். புதிய ஆடை ஆபரணங்கள் வாங்கும் சூழ்நிலை ஏற்படும்.

சந்திராஷ்டம நாள்கள்: 3,4, 30,31

அதிர்ஷ்ட நாள்கள்: 5,9,15,20,23,26,28,29

வணங்க வேண்டிய தெய்வம்: சுப்ரமணியரை சுப்ரமணிய புஜங்கம் படித்தும், புவனேஸ்வரி அம்மனுக்கு விளக்கேற்றி வெண்ணிற மலர் கொண்டு அர்ச்சித்தாலும் வளமான வாழ்வு கிடைக்கும்.

கும்பம்

(அவிட்டம் 3,4-ம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3-ம் பாதம்)

மாதப் பிற்பகுதியில் எடுக்கும் காரியங்கள் அனைத்திலும் வெற்றி ஏற்படும். அரசாங்கக் காரியங்கள் தாமதமானாலும் நன்மையிலேயே முடியும். எதிர்பாராத பண வரவிற்கு வாய்ப்புண்டு. சகோதர சகோதரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டுச் சிறிது நேரத்தில் சரியாகி விடும். மாதத்தின் பிற்பகுதியில் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். உடல்நிலை சிறிது பாதிக்கப்பட்டு மருத்துவ செலவுகள் ஏற்பட்டுப் பிறகு சரியாகி விடும். மாதப் பிற்பகுதியில் தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். தந்தையின் உடல் நிலையில் அதிக கவனம் தேவை. குடும்பத்திற்குத் தேவையான ஆடைகள் வாங்குவீர்கள். சிலருக்குக் குலதெய்வக் கோயிலுக்கும் புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். உறவினர்களிடையே கருத்து வேறுபாடு நீங்கி சுமுகமான சூழ்நிலை ஏற்படும். குடும்பத்தில் உள்ள பெரியவர்களின் உதவியால் சில முக்கியமான வேலைகளை சாதித்துக் கொள்வீர்கள். நண்பர்களின் வீட்டில் நடக்கும் விருந்து விசேஷங்களில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

அலுவலகத்தில் சிலருக்கு அதிகப் பணிச்சுமை ஏற்படும். எதிர்பார்த்த இடமாற்றம் ஏற்படும். உயர் அதிகாரிகளிடம் அனுசரித்துப் போவது எதிர்காலத்திற்கு நல்லது.

தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் சற்று தாமதமாக ஏற்படும். முன்பின் அறிமுகம் இல்லாதவர்களுக்குப் பணம் கடன் கொடுக்க வேண்டாம். உழைப்புக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். புதிய முயற்சிகளைக் கொஞ்சம் தள்ளிப் போடவும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு அண்டை அயலாரின் ஒத்துழைப்பு கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். பண வரவிற்குக் குறைவிருக்காது.

சந்திராஷ்டம நாள்கள்: 4,5,6, 31

அதிர்ஷ்ட நாள்கள்:2,3,10,14,18,21,25,28,30

வணங்க வேண்டிய தெய்வம்: செவ்வாய் கிழாய்களில் கந்த சஷ்டி கவசம் பாராயணம் செய்வதும், மஹாலக்ஷ்மி அஷ்டகம் பாராயணம் செய்வதும் நன்மை பயக்கும்.

மீனம்

(பூரட்டாதி 4 – ம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி)

வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்பு ஒன்று ஏற்படலாம். சிறிது அலைச்சல்கள் இருந்தாலும் முயற்சிகள் வெற்றிகரமாக முடிவடையும். எதிர்பாராத இடத்திலிருந்து பண உதவி கிடைக்கப் பெறுவீர்கள். மனை, வீடு வாங்குவதை சற்றுத் தள்ளிப் போடுங்கள். இளைய சகோதர சகோதரிகளின் வழியில் அனுகூலம் உண்டு. அரசு சார்ந்த உதவிகள் மாதப் பிற்பகுதியில் கிடைக்கும். உணவு விஷயத்தில் சற்று கவனம் தேவை. தாய்வழியில் மாதப் பிற்பகுதியில் நல்ல செய்தி வந்து சேரும். தந்தையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிறகு சரியாகும். கணவன் மனைவி உறவில் சிறு சலசலப்புகள் வந்தாலும் பின்பு சரியாகி விடும். புதிதாக அறிமுகமாகிய நண்பர்களிடம் சற்று கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் இருங்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும் நிம்மதியும் ஏற்படும். உறவினர்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிரிந்திருந்த தம்பதிகள் ஒன்று சேர்வார்கள். தனவரவு அதிகரிக்கும் மாதமிது.

அலுவலகத்தில் இதுவரை இருந்துவந்த இறுக்கமான சூழ்நிலை மாறும். உயரதிகாரிகளிடம் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறும். ஊதிய உயர்வு கிடைக்கும். சக அலுவலர்கள் ஒத்துழைப்பார்கள்.

தொழில் மற்றும் வியாபாரத்தில் சக வியாபாரிகளால் மறைமுகப் போட்டிகளைச் சந்திக்க நேரிடலாம். அரசாங்க வழியில் சலுகைகள் கிடைக்கக் கொஞ்சம் தாமதமாகும். ஆனாலும் பொருளாதாரம் பெருகி தனவரவு அதிகரிக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குப் புகுந்த வீட்டினரிடமிருந்து மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். பலவிதங்களிலும் முன்னேற்றமான மாதமாக இருக்கும்.

சந்திராஷ்டம நாள்கள்: 6,7,8

அதிர்ஷ்ட நாள்கள்:3,5,12,14,19,22,25,29,31

வணங்க வேண்டிய தெய்வம்: திங்கள் கிழமைகளில் சிவபெருமானுக்கு சிவஸ்துதி பாராயணம் செய்வதும், வில்வதளத்தால் அர்ச்சிப்பதும் வாழ்வில் மேன்மை தரும். விநாயகருக்கு அறுகம்புல் கொண்டு அர்ச்சித்தால் தடங்கல் நீங்கி வளம் பெறலாம். ●

● புவனா தியாகராஜன் ● ஓவியம்: பிரபா

வீரமங்கை வேலுநாச்சியார்




புறநானூறு போற்றும் வீர மங்கையர் பலரை நம் தேசம் கண்டிருக்கிறது; இதயத்தில் இருத்தி வாழ்த்தி வணங்கவும் செய்திருக்கிறது. அத்தகைய வீர மங்கையரில் ஒருவர்தான் வேலுநாச்சியார். வீரம் மற்றும் விவேகத்தின் ஒருங்கிணைந்த வடிவம்தான் வேலுநாச்சியார். நவாப் படைகளையும், ஆங்கிலேயப் படைகளையும் எதிர்த்துக் களம் கண்டு வெற்றிகொண்ட வீர மங்கையின் வாழ்க்கை நம்மையும் வீறுகொண்டு எழச் செய்யும்.

ராமநாதபுரத்துக்கு அருகிலுள்ள சக்கந்தி என்ற ஊரில் தந்தை முத்துவிஜய ரகுநாத செல்லதுரை சேதுபதி - முத்தாத்தாள் தம்பதிக்கு வேலுநாச்சியார் ஒரே பெண்ணாகப் பிறந்தார். வீரம் செறிந்த மண்ணில் பிறந்த வேலுநாச்சியார் சிறு வயதிலிருந்தே வீர விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டிருந்தவராக இருந்தார். அச்சம் என்றால் என்னவென்றே தெரியாமல் வளர்ந்தார்.

குதிரையேற்றம், யானையேற்றம் கற்றுக்கொண்டதுடன், வாள்வீச்சிலும், வில்வித்தையிலும், ஈட்டி எறிதலிலும் அபார தேர்ச்சி பெற்றார். பல மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். கல்வியிலும் சிறந்து விளங்கினார். வேலுநாச்சியாரின் வீரம், விவேகம் ஆகியவற்றைக் கேள்விப்பட்ட சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர், 1746-ம் வருடம் வேலுநாச்சியாரை திருமணம் செய்து கொண்டார். திருமணத்தைத் தொடர்ந்து வேலுநாச்சியார் சிவகங்கை அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். சீரும் சிறப்புமான சிவகங்கைச்

இந்திய பெண்மணிகள் 6



சீமைக்கும் சோதனை வரத்தான் செய்தது.

மண்ணாசை கொண்ட ஆற்காடு நவாப், தன்னுடைய பெரும்படையை அனுப்பி ராமநாதபுரத்தைக் கைப்பற்றிக்கொண்டான். சிவகங்கைச் சீமையையும் கைப்பற்றிக்கொள்ளத் துடியாய்த் துடித்தான். ஆனால், முத்துவடுகநாதர் மற்றும் வேலுநாச்சியார் ஆகியோரின் வீரமும், விவேகமும், போர்க்கலைகளில் அவர்களுக்கு இருந்த தேர்ச்சியும் நவாபை யோசிக்கும்படிச் செய்தது. மேலும் அவர்களின் படைத் தளபதிகளான பெரிய மருது, சின்ன மருது ஆகியோரும் வீரத்துக்குப் பிரசித்தி பெற்றவர்கள். எனவே, ஆற்காடு நவாப் நேரம் பார்த்துக் காத்திருந்தான்.

காத்திருந்த நேரமும் வரத்தான் செய்தது. சிவகங்கையைக் கைப்பற்ற ஆங்கிலேயப் படைகள் ஆற்காடு நவாபுக்கு உதவி செய்ய முன்வந்தன. அவர்களிடம் இருந்த நவீன ரக ஆயுதங்களைக் கொண்டு சிவகங்கையைத் தாக்கி தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர நினைத்த ஆற்காடு நவாபுக்கு அது அத்தனை எளிதாக இல்லை.

ஒருநாள் மன்னர் முத்துவடுகநாதர் காளையார்கோயில் இறைவனின் ஆலயத்தில் வழிபாடு செய்யச் சென்றார். அவர் ஆலயத்தில் வழிபாடு செய்ய வந்திருப்பதை ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்ட ஆற்காடு நவாப், கோயிலைச் சுற்றி வளைத்து தாக்குதல் தொடுக்கும்படி கட்டளை பிறப்பித்தான். மிகச் சில வீரர்களுடனே கோயிலுக்கு வந்திருந்த மன்னரும், வீரர்களும் மிகத் துணிச்சலாகப் போராடினர். ஆயினும் நவீன ரக ஆயுதங்களுடன் எதிர்த்து நின்ற பெரும்படையின் முன்னால் மன்னர் தோல்வியையே சந்திக்க நேரிட்டது. வடுகநாதரும் உடன் வந்த வீரர்களும் கொல்லப்பட்டனர்.

செய்தியைக் கேள்விப்பட்ட வேலுநாச்சியார் கதறித் துடித்தார். மன்னரின் முகத்தை எப்படி யேனும் பார்த்துவிடவேண்டும் என்பதற்காக காளையார்கோயிலுக்குச் செல்லப் புறப்பட்டார். அதே சமயம் வேலுநாச்சியாரைக் கைது செய்ய சிறு படையை அனுப்பினான் ஆற்காடு நவாப். எதிர்த்து வந்த வீரர்களை விரட்டியடித்த வேலுநாச்சியார், காளையார்கோயிலுக்குச் செல்ல முயன்றபோது, பெரிய மருது மற்றும் சின்ன மருது ஆகியோர் ஒருமித்த குரலில், ''மகாராணி, கோட்டை கைமாறிவிட்டது. மன்னரும் வீரமரணம் அடைந்துவிட்டார். நீங்களும் போய் அகப்பட்டுக்கொண்டால் தந்திரமாகச் செயல்பட்ட நவாபை பழிவாங்க முடியாது. நம் நாட்டைக் கைப்பற்றுவதுடன், நாட்டின் பெருமையையும் காப்பாற்ற நீங்கள் வாழத்தான் வேண்டும்'' என்று வற்புறுத்திக் கூறினார்கள்.

ஆனாலும், காளையார்கோயிலுக்குத் துணிந்து சென்றார். எங்கெங்கும் பிணக்குவியல். கோயில் திடலின் நடுவில் மன்னரும் இளையராணியும் வீழ்ந்துபட்டு கிடந்தனர். அந்தக் காட்சியைக் கண்ட வேலுநாச்சியார், ஒருகணம் தானும் உடன்கட்டை ஏறிவிடலாமா என்றுகூட நினைத்தார். ஆனால், அந்தக் கணமே தன் முடிவை மாற்றிக்கொண்டார். தன் கணவரையும் இளையராணியையும் தந்திரமாகக் கொன்ற ஆற்காடு நவாபை பழிவாங்கவேண்டும் என்று தீர்க்கமான முடிவுக்கு வந்தார். மருது சகோதரர்களின் பாதுகாப்புடன் பல்லக்கில் ஏறி மேலூருக்குத் தப்பிச் சென்றார். மருது சகோதரர்களும் குதிரையில் தொடர்ந்து சென்றனர்.

வீரத்தில் மட்டுமல்லாமல் விவேகத்திலும் சிறந்து விளங்கிய வேலுநாச்சியார், நவாபையும் ஆங்கிலேயப் படைகளையும் வீழ்த்த ஹைதர் அலியின் உதவியை கேட்டுப் பெறுவது என்று தீர்மானித்தார். எதிரிக்கு எதிரி நண்பன் என்ற வகையில் ஆற்காடு நவாபுக்கும், ஆங்கிலேயருக் கும் எதிரியான ஹைதர் அலியின் உதவியைக் கேட்பது என்ற வேலுநாச்சியாரின் தீர்மானம் வெற்றி பெறவே செய்தது. தான் ஒளிந்திருந்த காடுகளிலிருந்து, திண்டுக்கல்லில் முகாமிட்டி ருந்த ஹைதர் அலிக்கு உதவி கேட்டு கடிதம் எழுதினார்.

அந்தக் கடிதத்தை எடுத்துக்கொண்டு மூன்று வீரர்கள் ஹைதர் அலியின் அரண்மனைக்குச் சென்றார்கள். காவல் வீரர்களிடம் தாங்கள் வேலுநாச்சியாரின் தூதர்களாக வந்திருப்பதாகக் கூறினார்கள். தகவல் ஹைதர் அலிக்குச் சென்றது. ஹைதர் அலி அவர்களை உள்ளே வரும்படி அழைத்தான். வேலுநாச்சியார் இல்லாமல் மூன்று வீரர்கள் மட்டுமே வந்ததைக் கண்ட ஹைதர் அலி, ''வேலுநாச்சியார் வரவில்லையா?'' என்று கேட்டான். வீரர்களில் ஒருவன் தன் தலைப் பாகையைக் கழற்ற, அங்கே வேலுநாச்சியார் நின்றிருந்தார்.

பல மொழிகளைக் கற்றிருந்த வேலுநாச்சியார், ஹைதர் அலியுடன் உருதுமொழியில் பேசத் தொடங்க, ஹைதர் அலி வியப்புற்றார்.


பல மொழிகளைக் கற்றிருந்த வேலுநாச்சியார், ஹைதர் அலியுடன் உருதுமொழியில் பேசத் தொடங்க, ஹைதர் அலி வியப்புற்றார். அவரிடம் தன்னுடைய

வேதனை மற்றும் லட்சியத்தை உணர்வுபூர்வமாக விளக்கினார் வேலுநாச்சியார். வேலுநாச்சியாரின் வீரத்தைக் கண்டு வியந்த ஹைதர் அலி, அவரை தன்னுடைய கோட்டையிலேயே தங்கி இருக்க அனுமதித்தார்.

வேலுநாச்சியார் தன் நம்பிக்கைக்கு உரிய பணிப்பெண்கள் மற்றும் வீரர்களுடன் விருப்பாட்சி மற்றும் திண்டுக்கல் கோட்டைகளில் தங்கியிருந்தபடி, படைகளைப் பெருக்கத் தொடங்கினார். நவாபை வீழ்த்தி, ஆங்கிலேயப் படையை அடியோடு அழிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டிருந்த வேலுநாச்சியார், உரிய நேரத்துக்காகக் காத்திருந்தார்.



ஒருநாள் வேலுநாச்சியார் ஹைதர் அலி தந்த நவீனரக ஆயுதங்களுடன் நவாப் படைகளுடன் போர் செய்யப் புறப்பட்டார். முதலில் காளையார்கோயிலைக் கைப்பற்றினார். சிவகங்கை மற்றும் திருப்பத்தூர் பகுதிகளில் நவாபின் படைகளும், ஆங்கிலேயப் படைகளும் சூழ்ந்திருந்தன. அவர்களை வீழ்த்தினால் தான் சிவகங்கையை மீட்க முடியும்; அனுமன் கொடியை அரண்மனை மாடத்தில் ஏற்ற முடியும்.



தன் படைகளை இரண்டாகப் பிரித்த வேலுநாச்சியார், ஒரு படைக்கு சின்ன மருதுவை தளபதியாக நியமித்தார். மற்றொரு படைக்கு பெரிய மருதுவுடன் சேர்ந்து தானே தலைமை ஏற்றுச் சென்றார். சின்ன மருதுவின் படை திருப்பத்தூரில் இருந்த படைகளை வீழ்த்தியது.

வேலுநாச்சியாருடன் சென்ற படைகள் சிவகங்கையை அடைந்தன. சிவகங்கை அரண்மனையில் இருந்த ராஜராஜேஸ்வரி கோயிலுக்கு விஜயதசமியன்று பெண்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று வழிபடுவது வழக்கம். வேலுநாச்சியாரும் அவருடன் இருந்த வீர மங்கையரும் தங்கள் ஆடைக்குள் ஆயுதங்களை மறைத்துக்கொண்டு கூட்டத்துடன் கூட்டமாகக் கோயிலுக்குள் சென்றுவிட்டனர். கோயிலுக்குள் இருந்தபடி தங்கள் தாக்குதலைத் தொடங்கினார் கள். தங்கள் மீது இப்படி ஒரு திடீர் தாக்குதல் தொடுக்கப்படும் என்பதைச் சற்றும் எதிர்பார்க்காத ஆங்கிலேயப் படையினர், எதிர்த்து நிற்க முடியாமல் வெட்டுப்பட்டு மடிந்தார்கள். எஞ்சியவர்களோ உயிர் பிழைத்தால் போதும் என்று தப்பி ஓடினார்கள்.

சிவகங்கைக் கோட்டையில் பறந்துகொண்டி ருந்த ஆங்கிலேயரின் கொடி இறக்கப்பட்டு, வேலுநாச்சியாரின் அனுமன் கொடி ஏற்றப்பட்டது. வேலுநாச்சியாரின் சபதம் நிறைவேறியது. சிவகங்கையின் அரசியாகப் பொறுப்பேற்றுக் கொண்டு திறம்பட ஆட்சி செய்தார். அவருடைய காலம் வீரத்தின் காலமாக இருந்தது.

வேலுநாச்சியாரின் வாழ்க்கையில் மறக்க முடியாத இரண்டு வீரப் பெண்மணிகள் உடையாளும், குயிலியும். இந்த இரண்டு பெண்களைப் பற்றியும் பிறிதொரு இதழில் பார்ப்போம்.

●

மரமெனும் வரமே



ஒருவிதையில் உருவாகும் தருவே
உயிர்வளிக் குழந்தையின் கருவே
தருவடிவாம் கடவுளின் உருவே
வாழ்க்கைத் தத்துவத்தின் குருவே

மண்ணுக்குள் விதையாய்த் துயில்கிறாய்
மழைக்கரம் உனைத்தட்ட எழுகிறாய்
சிறுதளிராய் இலைவிட்டு வளர்கிறாய்
உயர்ந்து கிளைபரப்பி நிற்கிறாய்

வெயில்தாங்கி நிழலினைத் தருகிறாய்
வீடற்ற ஏழையரைக் காக்கிறாய்
புள்ளினங்கள் கூடுகட்ட மகிழ்கிறாய்
பழம்தந்து பசியினைக் களைகிறாய்

பொன்விளைய மழையினைக் கொடுக்கிறாய்
மண்ணரிப்பை வேர்கொண்டு தடுக்கிறாய்
கரியமில வாயுவை எடுத்துக்கொண்டு
சுவாசிக்க நல்வளி(ழி) யைத் தருகிறாய்

அன்பாய்த் தென்றல் தழுவிடினும்
துன்பப்புயல் சுழன்றடித்துத் தாக்கிடினும்
இன்பதுன்பம் இணையாய் எண்ணுகின்ற
உறுதியான மாந்தனாய் நிற்கிறாய்

வானுயரப் பரந்து விரிந்து
கானுயிர்க்கு நலன்பல புரிந்து
இடுகாட்டில் உடலினை எரித்து
இறுதியில் மண்ணோடு மரிக்கிறாய்

இயற்கைக்கு உயிரூட்டும் உன்னை - நான்
இ(ரு)றக்கும்வரை பாதுகாத்து வளர்ப்பேன்
உனையழிக்க எவரேனும் வந்தால்- உனக்கு
அவரையே உரமாக்கி விடுவேன்!

-ஜோதி பெருமாள், புதுதில்லி



● மு.அரி

தெய்வ மூலிகைகள் 5





தரையெல்லாம் பூத்திருக்கும் தங்கமலர்! ஆ(ஹா)வாரை

சித்தர்கள் கொண்டாடும் சிறப்பான தாவரம் ஆவாரை. ஆவாரையின் இலை, பூ, காய், பட்டை, வேர் ஆகிய ஐந்தும் ஆவாரை பஞ்சாங்கம் என்று சித்த வைத்திய நூல்கள் கொண்டாடுகின்றன. இவை தீர்க்கும் நோய்கள் அநேகம். 'ஆவாரை சேர்த்தால் சாவும் நெருங்காது; நோவும் நெருங்காது' என்பது பழமொழி. இது முற்றிலும் உண்மை. ராஜ உறுப்புகளான இதயம், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகம், நுரையீரல் ஆகிய ஐந்துக்கும் பலமும் நலமும் அளிப்பது ஆவாரை.

ஆவிரை, ஹேம புஷ்பி, மேகாரி, தலபோடம், ஆகுலி என்றெல்லாம் அழைக்கப்படும் ஆவாரை கடுமையான கோடையிலும் வளரும் தன்மை கொண்டது. இன்றும் கிராமங்களில் ஆடு மாடு மேய்ப்பவர்கள் வெயில் காலங்களில் ஆவரைச் செடியை கொஞ்சம் பறித்து தலைக்கு மேல் வைத்துக் கட்டிக் கொள்வார்கள். வெயிலின் உஷ்ணமே தெரியாமல்



காப்பாற்றும் தன்மை கொண்டது இந்தச் செடி.

சர்க்கரை நோய் என்றாலே ஆவாரைதான் ஞாபகம் வரும் பலருக்கும். சித்த வைத்தியம் பரிந்துரைத்த ஒரே சர்க்கரை நோய்க்கான மருந்து இதுவே. ஆவாரை குடிநீரைக் குடித்தால் சர்க்கரை நோய் கட்டுப்பாட்டுக்குள் வருவதோடு, சர்க்கரை நோயால் உண்டாகும் நரம்பு மண்டல பாதிப்பு, தோல்பாதிப்பு, அதி ரத்த அழுத்தம், சிறுநீர்த் தொற்றுகள், கண் பார்வைக் கோளாறு, இருதய நோய்கள், கை கால் மதமதப்பு போன்றவையும் குணமாகும். இன்சுலின் சுரக்கவும், ரத்த சர்க்கரையின் அளவை சீராக வைக்கவும் இது அருமருந்து என்கிறது சித்த வைத்தியம். சர்க்கரை நோயால் வரும் கால் அழுகல் நோய் வராமல் தடுக்க இது உதவுகிறது.

பொன்னாவாரை, சுடலாவாரை, நில ஆவாரை என மூன்று ஆவாரைகள் மருத்துவத்தில் பயன்படுகின்றன. சிறுநீர்க் கடுப்புக்கு ஆவாரைப் பொடி நிவாரணம் தரும். உடல் பலத்துக்கும் உஷ்ணம் குறையவும் இது நல்லது. வெள்ளைப்படுதல், ஆண்மைக் குறைவு, சிறுநீரில் விந்து வெளியேறுதல், வியர்வை நாற்றம், உடலில் உப்பு பெருகுதல், உடல் வறட்சி, நாவறட்சி இவற்றுக்கும் ஆவாரை நல்ல மருந்து.

ஆவாரம் பட்டை, ஆவாரம் வேர்ப்பட்டை இரண்டையும் கொதிக்க வைத்துக் குடித்தால் ரத்தத்தில் யூரியா அளவு குறையும். ரத்தம் சுத்திகரிக்கப்படும். ஆவாரை லேகியம் தோல் நோய்களைக் குணப்படுத்தி உடல் மினுமினுப்பை உண்டாக்கும். சீரான மாதவிடாய் இல்லாத, அதிக ரத்தப் போக்கு கொண்ட, சினைப்பை நீர்க்கட்டி பிரச்னை உடைய பெண்களுக்கு ஆவாரை குடிநீர் நல்ல மருந்து. கருச்சிதைவைத் தடுக்கவும், கர்ப்பச்சூடு குறையவும் இது உதவும்.

தொன்றுதொட்ட காலம் முதலே உதவி வரும் தமிழ் மருந்தான ஆவாரை, ஆண்மை விருத்திக்கும் நல்ல மருந்து. தொல்காப்பியம், குறிஞ்சிப்பாட்டு போன்ற பழந்தமிழ் நூல்களும் இந்தச் செடியின் பெருமையைக் கூறுகின்றன. தோரணம் கட்டவும், பொங்கல் விழாவில் அலங்கரிக்கவும் இந்தச் செடி ஆரம்பத்தில் பயன்பட்டுள்ளதை சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. ஆவாரம் பூவின் இதழ்களைப் பறித்து நிழலில் உலர்த்தித் தூள் செய்து சாப்பிடுவதே நல்ல பலன் அளிக்கும். முடியாதவர்கள் கடையில் வாங்கலாம்.

ஆவாரை, பாசிப்பருப்பு, பூலாங்கிழங்கு, மஞ்சள் சேர்த்து அரைத்துக் குளிக்க சொறி, சிரங்கு நீங்கி உடல் பளபளப்பாகும். கல்லீரல் அழற்சி, மூல நோய்க்கும் ஆவாரை நல்ல மருந்து. அகோர பசி, உடல் மெலிவு, பலவீனம், மயக்கம், ஆண்மைக் குறைவு, மலச்சிக்கல், ரத்த மற்றும் சீதபேதி, மூட்டுவலி, உடல் சூடு, பெண்களின் மலட்டுத் தன்மை, மூச்சுத் திணறல் அனைத்துக்கும் கண்கண்ட மருந்தாக இருப்பது ஆவாரை பஞ்சாங்கம்.

மது குடித்து ஈரல் கெட்டுப் போனவர்களுக்கு ஆவாரை நல்ல மருந்து. இதய அடைப்புகள் வராமல் இருக்கவும் ஆவாரை பயன்படுகிறது. ஆவாரை இலைகளால் புகை போட கொசு, நுண்கிருமிகள் அண்டாது. கண் எரிச்சல், நீர் வடிதல், தோல் வெடிப்பு, தோல் வறட்சி, ஈறு பிரச்னைகள், வாய்வு பிரச்னை, சிறுநீர் எரிச்சல், ரத்த சோகை போன்றவற்றுக்கும் இது நல்ல மருந்து. ஆவாரைப் பொடியால் வாய்க் கொப்பளித்தால் ஈறில் ரத்தம் வடிவது நிற்கும்.

ஆவாரை கஷாயம், லேகியம், பொடி, சூரணம், மாத்திரை என எப்படி எடுத்துக் கொண்டாலும் நல்லதே. ஆனால் தரமானதாக இருக்க வேண்டும். தகுந்த மருத்துவர்களின் ஆலோசனைக்குப் பிறகே எடுத்துக் கொள்ள வேண்டும். ஆவாரையில் ரசம், சூப், தேநீர், குழம்பு, அல்வா செய்தும் சாப்பிடலாம். கொஞ்சம் கசப்பும் துவர்ப்பும் இருக்கும். உடலுக்கு பலமும் நோய் எதிர்ப்புச் சக்தியும் கொடுக்கும்.

● சக்தி காமராஜ்



எவ்விதக் குறைபாடும் இல்லாத மக்களுக்குத் தொழில்கல்வி கற்க ஏராளமான வாய்ப்புகள் கொட்டிக் கிடக்கின்றன. ஆனால், பார்வையற்ற பெண்கள் கற்பதற்குப் பயிற்சிக்கூடங்களோ, தொழிற்கூடங்களோ அதிகளவு இல்லை என்பதே உண்மை!

பார்வையற்றவர்கள் வேலைக்குச் சென்று சம்பாதிக்க இயலாதவர்களாக இருப்பதால், இவர்களுக்கு வீட்டிலும் சரி, சமூகத்திலும் சரி குறைந்தபட்ச அங்கீகாரம்கூடக் கிடைப்பதில்லை.

சென்னை லிட்டில் ப்ளவர் கான்வென்ட் பள்ளியில் பார்வையற்ற குழந்தைகளுக்காக தன்னார்வலராக சேவை செய்துகொண்டிருந்தார் திருமதி கௌரி மாணிக்கம். அப்போதுதான் அவருக்குள் ஓர் எண்ணம் வேரூன்றியது. பார்வையற்ற பெண்கள் வாழ்வில் மலர்ச்சி பெறவும், பொருளாதாரத்தில் ஏற்றம் பெறவும் வித்தியாசமாக ஏதேனும் செய்யவேண்டும் என்பதே அந்த எண்ணம். தன் எண்ணத்தைச் செயல்படுத்த, அப்போது அதே வளாகத்தில் அமைந்திருந்த காது கேளாதோர் பள்ளியில் பணி செய்துகொண்டிருந்த சகோதரி ஸ்டெல்லா அவர்களிடம் ஆலோசனை கேட்டார். அவருடைய ஆலோசனைப்படி, கோவை ராமகிருஷ்ணா வித்யாலயா கல்வியியல் கல்லூரி முதல்வரும், ஒருங்கிணைந்த மனிதவள மேம்பாட்டு மையத்தின் (Integrated Human Resource Development Center - IHRDC) இயக்குநருமான டாக்டர் எம்.என்.ஜி.மணி அவர்களைச் சந்தித்தார். பார்வையற்றவர்களுக்கான கல்வி கற்பித்தல், தொழிற்கல்விப் பயிற்சிக்கெனப் பல்வேறு திட்டங்களை வகுத்துள்ள அவருடைய ஆலோசனையின்படி 1987-ம் வருடம் சக்தி திறனாலயம் நிறுவப்பட்டது.

பாப்பம்பட்டியில் பயிற்சி மையம் ஏற்படுத்தி, பயிற்சி பெற்றவர்களுக்கான பணிமனைகளான துடியலூர், சூலூர், பொள்ளாச்சி என்.ஜி.எம். கல்லூரி வளாகம் போன்ற பகுதிகளில் செயல்பட்டு வந்த மையங்கள் அனைத்தையும் ஒன்றிணைத்து கோவை, வரதராஜபுரத்திலுள்ள கஸ்தூர்பா காந்தி வளாகத்தில் சக்தி திறனாலயம் (Sakthi Thiranalayam Blind Skills Development Center) தற்போது தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

சக்திக் குழுமங்களின் நிறுவனர் அருட்செல்வர் டாக்டர் நா. மகாலிங்கம் ஐயா அவர்களின் கனவுகளில் ஒன்றான, பார்வையற்ற பெண்களும் சமூகத்தில் எதிர்நீச்சல் போட்டு மற்றவர்களுக்கு இணையாக வாழவேண்டும் என்ற நற்சிந்தனையையும் இச்சக்தி திறனாலயம் நிறைவேற்றி



SAKTHI THIRANALAYAM

பார்வையற்ற பெண்களுக்கு இன்னொரு தாய்வீடு



வருகிறது. திருமதி கௌரி மாணிக்கம் அவர்கள் தலைமை நிர்வாகியாக இருந்து, இம்மையம் மேலும் திறம்படச் செயல்படுவதற்குப் பல்வேறு புதுப்புது திட்டங்களை உருவாக்கித் தந்து வருகிறார்.

கோவையைச் சுற்றியுள்ள கிராமப்புறப் பகுதியில் வசிக்கிற கல்வியறிவற்ற, பார்வையற்ற பெண்கள்வாழ்வின்முன்னேற்றத்திற்கு என்றே இந்தத் திறனாலயம் ஆரம்பிக்கப்பட்டது என்றால் அது முற்றிலும் உண்மை. இம்மையத்தில் பார்வையற்ற பெண்கள் பயிற்சி பெறுவதற்கு எந்தவித அடிப்படைக் கல்வித் தகுதியும், கட்டணமும் தேவையில்லை. பயிற்சியைக் கற்றுக் கொள்வதற்கான ஆர்வம் மட்டும் இருந்தாலே போதுமானது.

ஊதுவத்தி, சோப் ஆயில், பினாயில், ஒயர்கூடை பின்னுதல், அட்டை பைல் மற்றும் என்வலப் கவர் தயாரிப்பு எனப் பல கைத்தொழில்களில் தொடர்ந்து பயிற்சி வழங்கி வருகிறது. மேற்கூறிய அனைத்து உற்பத்தி பொருள்களுமே சக்தி என்கிற பெயரிலேயே தயாரிக்கப்படுகின்றன. டை-கட்டிங், மடிப்பு ஆகிய வேலைகளையும் பார்வையற்ற பெண்கள் திறம்படச் செய்கிறார்கள். இங்கு உற்பத்தியாகும் பொருள்களின் தரம் உயர்வாகவும், விலை நியாயமாகவும் இருப்பதால், ஒருமுறை வாங்கிப் பயன்படுத்தியவர்கள் தொடர்ந்து வாங்கிப் பயனடைகிறார்கள்.

உற்பத்தியாகும் பொருள்கள் அனைத்தும் இம்மையத்திலேயே விற்கப்படுவதால், சுற்றுவட் டாரப் பகுதியிலுள்ள வியாபாரிகளும் இங்கு வந்து விரும்பி வாங்குகிறார்கள்.



அதுமட்டுமல்லாமல், பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை முதலிய நகரங்களிலிருந்தும் வியாபாரிகள் வாங்கிச் செல்கிறார்கள். சக்தி குழுமம், ஏ.பி.டி முதலிய அதன் சார்பு நிறுவனங் களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன. இந்நிறுவனங்களின் தொடர் ஆதரவினால் பார்வையற்ற பெண்களுக்குத் தொடர்ச்சியாக வேலைவாய்ப்பு கிடைக்கிறது.

சக்தி திறனாலயத்திற்குத் தொழில் கற்க வருபவர்கள் அனைவருமே பார்வையற்ற பெண் களாக இருப்பதால், அவர்களுக்கென சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியைகள் மூலம் தொழில் பயிற்சிகள் திறமையாக அளிக்கப்படுகின்றன. மேலும் பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை போன்ற நகரப் பகுதிகளிலிருந்தும் பார்வையற்ற பெண்கள் பயற்சி பெற்று, பணியாற்றியும் வருகின்றார்கள்.

தொடக்கத்தில் நம்மால் இப்படிப்பட்ட கைத் தொழில்களைக் கற்றுக்கொள்ள முடியுமா என்ற தயக்கத்துடனேதான் மையத்தில் சேருகிறார்கள். பின்னர் சிறப்பான முறையில் கற்றுக்கொள்கிறார் கள். பாதியிலேயே விட்டுவிட்டுச் செல்பவர்களை யும் தேடிக் கண்டுபிடித்து தன்னம்பிக்கை ஊட்டி யும் தேவையான அறிவுரைகள் வழங்கியும் பாதி யில் விட்ட பயிற்சியைத் தொடரச் செய்கிறார்கள்.

அதிக எண்ணிக்கையில் பார்வையற்ற பெண்கள் இம்மையத்தில் சேரும்போது, சக்தி திறனாலயத்தின் அடுத்தகட்ட வளர்ச்சியாக, எதிர்வரும் சில ஆண்டுகளில் பிரிண்டிங் பிரஸ், ஸ்கிரீன் பிரிண்டிங் போன்ற பயிற்சிகளையும் அளிக்க உத்தேசித் துள்ளனர். அதனையும் இங்கு பயிற்சி பெற வரும் பார்வையற்ற பெண்கள் இவ்வரிய வாய்ப்பை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நிர்வாகத்தின் விருப்பம். பயிற்சியின்போது காலை, மாலைத் தேநீரும், மதிய உணவும் வழங்கி, வேலைவாய்ப்பும் தரப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் தினந்தோறும் வீட்டிலிருந்துதான் வர வேண்டும். இம்மையத்தில் விடுதி வசதி இல்லை.


பயிற்சி பெற்றவர்கள் தன்னம்பிக் கையைப் பெற்று, வேலைவாய்ப்பைத் தனதாக்கி, வருமானம் ஈட்டி, சிறந்த முறையில் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குகிறார்கள் என்பதே சக்தி திறனாலயத்தின் சிறப்பாகும். மேலும், படித்துவிட்டு வேலை இல்லாமல் தவிக்கும் பார்வையற்ற பெண்களுக்கும் வேலை வாய்ப்பு வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

முழுக்க முழுக்கப் பெற்றோரின் ஆதரவி லிருந்த பார்வையற்ற பெண்கள், இம்மையத் தில் சேர்ந்த பிறகு பெற்றோர்களைத் தங்கள்











ஊதியத்திலேயே காப்பாற்றி வருகிற அளவுக்கு, தற்போது பார்வையற்ற பெண்களின் பொருளாதார நிலை உயர்ந்துள்ளது. சக்தி திறனாலயம் தொடங்கிய காலத்திலிருந்தே ஏ.பி.டி நிறுவனங்கள் சார்பில் நிதிஉதவி இம்மையத்திற்குக் கிடைத்து வருகிறது. தமிழக அரசின் எந்தவொரு உதவியும் இதுவரை இந்த மையம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இங்கு பயிற்சி பெறும் பார்வையற்ற பெண்களின் பெற்றோர்களுக்கு ஒவ்வொரு வருடமும் ‘பெற்றோர் சந்திப்புக் கூட்டம்’ நடைபெறுகிறது. "வாழ்க்கையில் எந்தப் பிடிப்புமில்லாமல் நிர்க்கதியாக இருந்த எங்கள் பார்வையற்ற பெண் பிள்ளைகள், இங்கு வந்த பிறகுதான், கைத்தொழில் கற்று, வேலைவாய்ப்பு மூலம் ஊதியம் பெற்று, மிகவும் சந்தோஷமாக இருப்பதாக உணர்கிறோம்” என்று அனைத்து பெற்றோர்களுமே ஒருமித்த குரலில் கூறினர். ‘சக்தி திறனாலயம் எங்களுடைய பார்வையற்ற பெண்களுக்கு மற்றொரு தாய்வீடு போல் இருக்கிறது’ என்றும் சிலிர்ப்பும் நெகிழ்ச்சியுமாகக் கூறினர். தொடர்ந்து சக்தி திறனாலயம் அமைப்பின் தலைமை நிர்வாகி ‘அம்மா’ என்று அன்போடு அழைக்கப்படும் திருமதி கௌரி மாணிக்கம் அவர்களுக்குத் தங்களுடைய அன்பையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டனர்.

இங்கு பயிற்சி பெறும் பார்வையற்ற பெண்களுக்கு இ.எஸ்.ஐ. மூலம் மருத்துவ வசதி ஏற்பாடு செய்யப்படுகிறது. மேலும் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டு வேலைக்கு வர முடியாமல் போனாலோ அல்லது வயதுமுதிர்வால் பணிக்கு வர முடியாத பார்வையற்ற பெண்களுக்கு ஓய்வூதியமாக மாதந்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்படுகிறது.

பணிபுரியும் பார்வையற்ற பெண்களுக்குச் சம்பளமும், அவர்களின் வேலைத் திறனுக்கேற்ற ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. இவர்களின் ஊக்கத்தொகைகள் மட்டும் அந்தந்தத் தொழிலாளர்களின் பெயரிலேயே வங்கிக் கணக்கில் சேமிக்கப்படுகிறது. இப்படி ஒவ்வொரு பார்வையற்ற பெண் தொழிலாளியின் வங்கிக் கணக்கில் தற்போதுவரை ரூபாய் 30 ஆயிரம், ரூபாய் 40 ஆயிரம் எனச் சேமிக்கப்பட்டுள்ளது. இங்கு பணிபுரியும் பார்வையற்ற பெண்களின் குறைகளைக் கேட்டு அறிந்துகொள்ளும் திருமதி கௌரி மாணிக்கம் அவர்கள், உடனடியாக அவற்றையெல்லாம் தாயுள்ளத்தோடு நிவர்த்தி செய்து வருகிறார். ஒவ்வொரு தீபாவளியன்றும் பார்வையற்ற பெண்களுக்கும், அலுவலகப் நிர்வாகப் பணியாளர்களுக்கும் புத்தாடைகள், இனிப்புப் பலகாரங்கள் வழங்கி அவர்களுடைய மகிழ்ச்சியில் சக்தி திறனாலயம் பங்குகொள்வது மனநிறைவைத் தருகிறது.

பார்வையற்ற பெண்கள் இம்மையத்தில் பயிற்சி பெற விரும்பினால் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

சக்தி திறனாலயம்,
கஸ்தூர்பா காந்தி அறக்கட்டளை வளாகம்,
479, காமராஜர் சாலை, வரதராஜபுரம்,
லைன் பஸ் ஸ்டாப், கோவை - 641 015
போன் : 0422-2508545, செல் : 9600901450

● 'சிவோஹம்' ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி

பிரணவமாகவும் பேரொளியாகவும் விளங்குபவள்

அன்னை பராசக்தி!

ஆதிசக்தியை அனைத்துக்கும் மேலான தெய்வமாக - பரப்ரம்ம சொரூபமாகவே கருதி வழிபடும் வழிபாட்டு முறை 'சாக்தம்' எனப்படும். சாக்தமதத்தில் பராசக்தி முழுமுதற் கடவுளாக போற்றப்படுகிறாள். பிரமன், விஷ்ணு, ருத்ரன் ஆகியோரால் வணங்கப்படுபவளாக இருப்பதால் மூவருக்கும் முதல்வியாக நான்காவதாக (துரியமாக)க் கருதப்படுகின்றவள் பராசக்தி.

பராசக்தியின் பெருமை ஆதிசங்கரர் இயற்றிய சௌந்தர்யலஹரியில் பேசப்படுகிறது. படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களைப் புரிகின்றவர்கள் முறையே பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன், சதாசிவன் என்ற மூர்த்திகள். அம்பாள் அமுதக் கடலின் மத்தியில் கல்பகவிருட்சங்களால் சூழப்பட்ட ரத்தினமயமான தீவில் சிந்தாமணிகளால் இழைக்கப்பட்ட அரண்மனையில் மஞ்சத்தில் அமர்ந்திருக்கிறாள். மேலே கூறப்பட்ட முதல் நான்கு கடவுளரும் மஞ்சத்தின் நான்கு கால்களாகவும், சதாசிவன் கால்களுக்கு மேலுள்ள பலகையாகவும் இருக்க, அதன்மேல் காமேசுவரனோடு கூடிய காமேசுவரியாகக் காட்சி தருகிறாள். அவள் ஆனந்த சொரூபியாக இருப்பதால் பரப்ரம்ம மஹிஷி (பட்டத்துராணி) என்று வருணிக்கப் படுகிறாள்.

பாஸ்கரராயர், 'பூமி முதற்கொண்டு சிவன் முடிவாக உள்ள முப்பத்தாறு தத்துவங்களும் தேவியின் யோகபீடமாகிற ஆசனம்' என்கிறார்

ஒரே சக்திதான் பிரம்மத்தைச் சார்ந்த நிலையில் பராசக்தி எனவும், சிவனைச் சார்ந்தபோது மகாமாயை எனவும், விஷ்ணுவைச் சார்ந்தபோது யோகமாயை எனவும் அழைக்கப்படுகிறாள். அப்படியே பிரமன், மகேசுவரன் முதலான ஏழு கடவுளரின் சக்திக்கு உருவம் கொடுத்துப் பிராம்மீ, மஹேஸ்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, நாரசிம்ஹீ, ஐந்திரீ என்ற பெயர்களில் சப்தமாதாக்களின் பிம்பங்கள் கோயில்களில்


Anup Gomay
2020...

பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

வேதகாலத்திலேயே வாக்தேவதை போற்றப்படுகிறாள். ஹிமவான் புத்திரியை ஹைமவதி (பார்வதி) என்று அழைப்பார்கள். ஒரு காலத்தில் இந்திராதி தேவர்கள், தாம்தாமே பெரியவர் என்று ஆர்ப்பரித்துக் கொண்டிருக்கும்போது, ஹைமவதி அவர்கள் முன் தோன்றி அவர்களால் ஒரு துரும்பைக் கூட அசைக்க முடியாது என்பதை உணர்த்தி, பரப்பிரம்மமே மேலான தெய்வம் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளச் செய்தாள் என்கிறது 'கேனோபநிடதம்'.

சிவனும் - சக்தியும் இணைபிரியாதிருப்பவர். 'சொல்லும் பொருளும்போல் பிணைப்புண்டு இருப்பவர்கள், பார்வதி - பரமேசுவரர்' என்று சொல்கிறான் கவி காளிதாசன். இப்படி இருக்கும் சிவனுக்கு இரண்டு நிலைகள் உண்டு என்று காச்மீர சைவம் கூறும். சாக்த மதத்திற்கும் இது பொருந்தும், 'சிவசக்தி'யாகிற பிரகாசம் என்ற அசைவற்ற நிலையை விட்டு, 'மாயாசக்தி'யாகிற விமர்சம் என்ற செயற்படுகின்ற நிலையை அடையும்போது சக்தி தொழிற்படத் தொடங்குகிறது. முதல் நிலையில் ஞானசக்தியும் - இச்சா சக்தியுமாயிருந்த பரம்பொருளே, பிரபஞ்ச சிருஷ்டி முதலாய ஐந்து தொழில்களைச் செய்யப் புகும்போது, கிரியா சக்தி மேலோங்கி நிற்கச் செயல் படுகிறது. இதையே,

நின்ற பராசக்தி நீள்பரன் தன்னோடு

நின்றறி ஞானமும் இச்சையு மாய் நிற்கும்

நன்றறி யும்கிரி யாசக்தி நண்ணவே

மற்றன வற்றுள் மருவிடுந் தானே

என்று திருமந்திரம் 1136-வது பாடல் கூறுகிறது.

சிருஷ்டித் தொடக்கத்தில் 'பிந்து' தோன்றுகிறது. சக்தி பிந்துவிலே பிரவேசிக்கும்போது தோன்றுவது 'நாதம்.' நாதமும் - பிந்துவும் சேரும்போது விளைவது 'காமம்.' அப்போது வெளிப்படுகின்ற வெள்ளைத் துளியையும், சிவப்புத் துளியையும் 'கலை' என்பார்கள். இதைத்தான் அருணகிரிநாதர், 'நாதபிந்து கலாதி நமோ நமோ' என்று குறிப்பிடுகிறார். மேற்கூறப்பட்ட நான்கையும் ஒருசேர இணைத்து 'காமகலா' என்று சாக்தர்கள் கூறுவார்கள். பரை, லலிதா, திரிபுரசுந்தரி, பட்டாரிகா என்பவையெல்லாம் இவளுக்கு மறுபெயர்கள்.

'உலகம் தேவியின் மறுவடிவமே, அதில் நீக்கமற இருப்பவள் அவளே' என்பார்கள் சாக்தர்கள். உலகும் உயிரும் எந்த அளவுக்கு உண்மைப் பொருள்களோ அந்த அளவுக்கு சக்தியும் உண்மைப் பொருள்தான். சூரியன் ஓரிடத்தில் இருப்பதாகக் காணப்பட்டாலும் அதன் ஒளி எங்கும் பரவியிருப்பது போல, பராசக்தி எங்கும் வியாபித்திருக்கிறாள். கல், நீர், மரம், விலங்கு, மனிதர், தேவர் எல்லோரிடத்திலும், சக்தியில் தாரதம்யம் இருந்தாலும், அப்பராசக்தியே எல்லா இடங்களிலும் விளங்குகிறாள் என்று விஷ்ணுபுராணம் கூறும். ஆகவேதான், உலக வழக்கில் ஒருவன் முதுமை அடைந்துவிட்டாலோ - வறுமைக்கு உட்பட்டுவிட்டாலோ, 'அவனுக்கு சக்தி இல்லை' என்று சொல்கிறார்கள். நெருப்பில் எப்படி வெப்பம் ஒன்றி இருக்கிறதோ அப்படி ஒவ்வொரு பொருளிலும் சக்தி இருக்கிறது. விஞ்ஞானத்தில் Matter, Energy இரண்டிற்கும் உள்ள நெருக்க நிலையோடு இதை ஒப்பிட்டுக் காணலாம்.

சிவபுராணத்தில் உமை தானே பரப்பிரம்மமாகவும், பேரொளியாகவும், பிரணவமாகவும், பரந்த இவ்வுலகமாகவும், காரணகாரியமாகவும் எல்லாமாய் இருப்பதாகவும் கூறுகிறாள். சாக்தத்தில் குண்டலினி யோகம் தனியிடம் பெறுகிறது. ஒவ்வொருவரின் உள்ளத்திற்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நமது உடலின் முதுகெலும்புத் தண்டின் அடிப்பாகத்திலிருந்து உச்சந்தலையில் மூளைப்பகுதியில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரை போன்ற அமைப்பில் உள்ள





சிவபுராணத்தில்
உமை தானே
பரப்பிரம்மமாகவும்,
பேரொளியாகவும்,
பிரணவமாகவும்,
பரந்த
இவ்வுலகமாகவும்,
காரணகாரிய
மாகவும் எல்லாமாய்
இருப்பதாகவும்
கூறுகிறாள்.



தேவியை படிப்படியாக ஆறு மையங்களின் வழியே சென்று காணும் யோகநெறியை திருமூலரின் திருமந்திரத்திலும், தந்திரசாஸ்திரங்களிலும் காணலாம். ஒவ்வொருவரிடத்திலும் பெட்டிப் பாம்பு போல் உறங்கிக் கிடக்கும் குண்டலினி சக்தியின் உந்துதலை கீழ்நோக்கிச் செல்லாமல் மேல் நோக்கிச் செல்லுமாறு யோகநெறியில் முயல்வது குண்டலினியோகம். ஐம்பூதங்களைக் குறிக்கும் மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி ஆகிய சக்கரங்களைக் கடந்து, மனதைக் குறிக்கும் இரு புருவங்களுக்கிடையிலுள்ள ஆக்ஞை எனும் சக்கரத்தையும் கடந்து, சிவசக்தி இருக்கும் சஹஸ்ராரத்தில் ஒன்றுவதே இக் குண்டலினி யோகம். கீழ்த்தரமான காம இன்பத்தைப் பேரின்ப நிலைக்குக் கொண்டுவர வேண்டுமானால், பெண்ணை மதிக்கத் தெரிய வேண்டும். பெண்மையில் தெய்விகத்தைக் காண வேண்டும் என்பது இவர்களது குறிக்கோள். ஒவ்வொரு சக்தி உபாசகரும் தன்னையே பெண்ணாகக் கருதிக் கொண்டால், கீழ்த்தரமான இச்சையை புனிதமான ஆன்மிக வேட்கையாக மாற்றலாம் என்பது சாக்தர்களின் கோட்பாடு.

இந்த தேவி வழிபாடு ஏதோ ஒருவகையில் நம்நாட்டில் மொஹஞ்சதாரோ மக்களால் பின்பற்றப்பட்டு வந்ததற்குச் சான்றாக, அங்கே பெண் தெய்வ உருவங்கள் காணப்படுகின்றன. எகிப்து, பாபிலோனியா, கிரேக்கம் முதலான பிற நாடுகளிலும் இவ்வழிபாடு பண்டைக்காலத் தில் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. சங்ககாலத்தில் கொற்றவை வழிபாடு இருந்திருக்கிறது. நக்கீரர் காடுகிழாளைப் ‘பழையோள்’ என்று குறிப்பிடுகிறார், திருமுருகாற்றுப்படையில். வடமொழியில் பிருகதாரண்யக உபநிடதம், தேவி பாகவதம், திருபுரா ரகஸ்யம், சௌந்தர்யலஹரி, வரிவஸ்யாரகஸ்யம் முதலான நூல்களில் தேவியின் அருஞ்செயல்களும் வழிபாட்டு முறைகளும், பெருமையும் விளக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தில் திருக்கடவூர் அபிராமி அம்மையின் அருளுக்குப் பாத்திரமான அபிராமபட்டர் தேவி உபாசகர். அவர் பாடிய அபிராமி அந்தாதியின் 20-ம் பாடலில் அம்மையை ‘பூரணாசல மங்கலை’ என்று குறிப்பிடுகின்றார். பூரணம் - எல்லாமாய் இருப்பவள்; அசல சிருஷ்டிக்கு முந்திய ஞான இச்சா சக்திகளோடுகூடிய அசையாத நிலை. மங்கலை - என்றும் மங்களாமாயிருந்து உபாசக ருக்கு மங்களத்தை விளைவிப்பவள். மேற்குக் கடற்கரையிலுள்ள பூர்ணாசல பீடத்திலே உள்ள மங்கலை என்றும் கொள்ளலாம். ‘அவள் அர்த்தநாரியாக இருக்கின்றாள். வேதங்களின் அடியும் முடியுமாய் இருக்கின்றாள். சஹஸ்ர கமலமான அமுதக் கடலில் சந்திரனாக இருக்கின்றாள். மூலாதாரம் முதலான தாமரைகளில் உறைகின்ற அவள் தன் இதயத் தாமரையிலும் வீற்றிருக்கின்றாள்’ என்று பட்டர் அபிராமி அன்னைக்குப் புகழ்மாலை சூட்டுகின்றார்.


தேவி பாரதநாட்டின் பல பகுதிகளிலும், பல உருவங்களில் பல பெயர்களைத் தாங்கி அன்பர்களுக்கு அருள் பொழிந்து கொண்டிருக்கிறாள். இமயத்தில் ஹைமவதி, நேபாளத்தில் ருஜேச்வரி, கல்கத்தாவில் காளி, காசியில் அன்னபூரணி, பிருந்தாவனத்தில் காத்யாயனி, பூரியில் விமலை, விந்தியமலையில் மகிஷாசுரமர்த்தனி, திருப்பதியில் பத்மாவதி, காஞ்சியில் காமாட்சி, மதுரையில் மீனாட்சி, தென்குமரியில் குமாரி என்ற வகையில் ஆங்காங்குள்ள மக்களுக்கு அருள் வழங்கிக் கொண்டிருக்கிறாள் அன்னை. அன்னை சக்தியை நவராத்திரி நாள்களில் பக்திபூர்வமாக வழிபடுவோம். ●

SIVOHAM

திருவருணை திருத்தலத்தில்

பாணலிங்க க்ஷேத்திரம்!





தலச் சிறப்பு

‘திருவண்ணாமலை ஒரு ஞானமலை; பக்தர்களை ஈர்க்கும் மலை; ஜ்யோதி மலை; சிந்தாமணி, காமதேனு, கற்பக விருட்சம் போன்று வேண்டியதை அருளும் மலை’ என்பது கௌதம முனிவரின் சத்திய வாக்கு. இந்தத் தலத்தைச் சுற்றிலும் ஐம்பது கிலோ மீட்டர் தொலைவு சிவபூமி என்று போற்றப்படுகிறது. எண்ணற்ற மகான்களும், ஞானியர்களும், சித்தபுருஷர்களும் மகிமை சேர்த்த இந்தத் தலத்துக்கு மற்றுமோர் சிறப்பாக அமைய உள்ளது ‘அருள்மிகு அருண பாணலிங்க க்ஷேத்திரம்’

ஆசிரமச் சிறப்பு

திருவண்ணாமலை திருமூலர் அறக்கட்டளை சார்பில் அமைந்திருக்கும் ‘சிவோஹம்’ ஆசிரமம், சிவனை முழுமுதற் பரம்பொருளாகக் கொண்டு ஆன்மிகப் பணியும், அருட்பணியும் ஆற்றும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

பாணலிங்க க்ஷேத்திர மகிமை

‘சிவோஹம்’ ஆசிரமத்தின் ஸ்தாபகர் ஸ்வாமி விஜயானந்த சரஸ்வதி அவர்கள் உலக நன்மைக்காக திருவண்ணாமலை தலத்தில் பாணலிங்க க்ஷேத்திரம் நிர்மாணித்து, பிரமாண்ட பாணலிங்கத்துடன் சுற்றிலும் நூற்றியெட்டு பாணலிங்கங்களும் பிரதிஷ்டை செய்து, வரும் நவம்பர் மாதம் 15-ம் தேதி கும்பாபிஷேகம் நடைபெற ஏற்பாடு செய்து வருகிறார்.

சிவபெருமானின் சிவலிங்க வடிவங்களில் பாணலிங்க வழிபாடு மிகவும் உன்னதமானது.

சிவபெருமானின் சக்தி வடிவங்கள் பாணலிங்கங்கள் என்று ஸ்காந்தம் போற்றுகிறது


பாணலிங்கம் இருக்கும் இடத்தில் நல்லிணக்கம், மன அமைதி, செல்வச் செழிப்பு ஆகியவை நிலைத்திருக்கும்

பாணலிங்க க்ஷேத்திரத்தை மனத்தூய்மையுடன் பஞ்சாட்சர ஜபம் செய்தபடி ‘மந்த்ர ப்ரதக்ஷிணா’ வந்தால் நமக்குத் தேவையான அனைத்தையும் கேட்காமலேயே அருள்வார் சிவபெருமான். இந்த ‘மந்த்ர ப்ரதக்ஷிணா’ வை எந்த நாளிலும் செய்யலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.ஸ்ரீராம்: +91 99405 80649; திரு.ராஜேந்திரன்: +91 95388 90011; திரு.சினிவாசன்: +91 99943 06949. வங்கிக் கணக்கு விவரம்: A/c Name: Thiruvannamalai Thirumoolar Charitable Trust; Bank Name: ICICI; A/c no: 619605027541; RGTS?NEFT?IFS Code: ICIC0006196

● எஸ்.கண்ணன்கோபாலன்

காலனுக்கும் அருளிய கடவூர் ஈசன்!



அபிராமி அம்பிகையை கண்ணும் மனமும் குளிரக் குளிர தரிசித்த நாம், அமிராமி பட்டருக்காக அவள் நிகழ்த்திய அருளாடலை எண்ணி வியப்புற்றபடியே ஐயனின் கோயிலுக்குச் செல்கிறோம். ஐயனின் பிராகாரத்தை வலம் வந்து முதலில் கள்ளவாரண பிள்ளையாரை வழிபட்ட பிறகு ஐயனின் சந்நிதிக்குச் செல்கிறோம். கருவறையில் ஐயன் அமிர்தகடேஸ்வரர், அமுதகடோற்பவர், காலசங்காரர், கடவூர் வீரட்டேஸ்வரர் என்று பல திருப்பெயர்களுடன் காட்சி தருகிறார்.

ஐயனின் திருமேனியில் ஒரு சிறு பிளவும், தழும்பும் காணப்படுகின்றன. இதன் பின்னணியில் அமைந்திருக்கும் மார்க்கண்டேயரின் திவ்விய சரிதத்தைப் பற்றி உடன் வந்த நண்பர் கூறினார். அது நம் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்.

மிருகண்டு முனிவர் - மருத்துவதி தம்பதியர்க்கு சிவபெருமானின் அருளால் பிறந்த பிள்ளைதான் மார்க்கண்டேயர் என்பதும், அவருடைய ஆயுள் பதினாறு வயது வரைதான் என்பதும் நமக்குத் தெரிந்த விஷயங்கள்தான். ஆனால், மார்க்கண்டேயர் விஷயத்திலும் ஐயன் இயற்கை நியதியை மீறவில்லை என்பது குறிப்பிடத்தக்க சிறப்புச் செய்தி. பிறந்தவர் அனைவரும் இறக்க வேண்டும் என்பது இயற்கை நியதி. தான் வகுத்த அந்த நியதியை தானே மீறக்கூடாது என்பதால், மார்க்கண்டேயருக்கு ஆயுளை நீட்டித்துத் தராமல், என்றும் பதினாறு வயதிலேயே சிரஞ்சீவியாக இருக்குமாறு அருள் புரிந்துவிட்டார்.

ஐயனை தரிசித்த பிறகு ஐயனின் சந்நிதிக்கு வலப்புறம் உள்ள காலசம்ஹார மூர்த்தி சந்நிதிக்குச் செல்கிறோம். மார்க்கண்டேயருக்கு அருள்புரிந்த நிலையில் ஐயன் அமிர்தகடேஸ்வரர் காலசம்ஹார மூர்த்தியாக அன்னை பாலாம்பிகையுடன் திருக்காட்சி தருகிறார். ஐயனின் வலப்புறத்தில் மார்க்கண்டேயரும், ஐயனின் காலடியில் அவரால் நிக்ரஹம் செய்யப்பட்ட யமனும் இருக்கின்றனர்.

யமனை நிக்ரஹம் செய்த பிறகு பூமியில் இறப்பே இல்லாமல் போய்விட்டபடியால் பூமியின் பாரம் அதிகமாகிவிட்டது. பாரம் தாங்கமாட்டாத பூமி பிராட்டியார் ஐயனை வேண்டிப் பிரார்த்திக்க, ஐயன் யமனுக்கு அனுக்கிரஹம் செய்து அருள் புரிந்தார். அனுக்கிரஹம் செய்த யமனின் சந்நிதி காலசம்ஹார மூர்த்திக்கு நேரெதிரில் பிராகாரத்தில் அமைந்திருக்கிறது.

காலசம்ஹாரமூர்த்தி மூலவராக மட்டும் இல்லாமல் அவரே உற்ஸவராகவும் இருக்கிறார். அவருக்கு வருஷத்தில் பன்னிரண்டு முறை மட்டுமே அபிஷேகம் நடைபெறுகிறது. சித்திரைத் திருவிழாவின் ஆறாம் நாள் திருவிழாவில் அவரே உற்ஸவராக வீதியுலா வருகிறார்.

ஐயன் அமிர்தகடேஸ்வரரையும் அவர்தம் வீரட்ட வடிவமான காலசம்ஹார மூர்த்தியையும் தரிசித்துவிட்டு பிராகாரம் வலம் வருகிறோம். தெற்குப் பிராகாரத்தில் அனுக்கிரஹ யமனின் சந்நிதிக்கு அருகில் குங்கிலியகலய நாயனார் மற்றும் காரி நாயனார் ஆகியோரின் திருவடிவங்களைக் காணலாம். பொதுவாக அறுபத்து மூவர் சந்நிதியில் அமைந்திருக்கும் குங்கிலியக்கலயரும் காரியாரும் இங்கே தனிச் சந்நிதிகளில் அமைந்திருப்பதன் தாத்பர்யம் பற்றி உடன் வந்த சிவனடியாரிடம் கேட்டோம்.

குங்கிலியக்கலயரும் காரியாரும் திருக்கடவூரில் அவதரித்து சிவத் திருப்பணியில் சதாசர்வ காலமும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் என்று கூறியதுடன் அவர்தம் சிவப் பணிகள் குறித்து சிலிர்ப்புடன் நம்மிடம் பகிர்ந்துகொண்டார்.

குங்கிலியக்கலய நாயனார் திருக்கடவூரில் மறையவர் குலத்தில் தோன்றினார். பெற்றவர்கள் பிள்ளைக்குக் கலயர் என்று திருப்பெயர் சூட்டினர். பிள்ளைப் பிராயத்தில் இருந்தே மிகுந்த சிவபக்தி கொண்டிருந்த கலயர் நாள்தோறும் இறைவனின் சந்நிதியில் குங்கிலியப் புகை போட்டு நறுமணம் நிறைப்பதைத் தன் வழக்கமாகக் கொண்டிருந்தார். இதன் காரணமாக அவருக்குக் குங்கிலியக்கலயர் என்னும் பெயர் ஏற்பட்டது. பிள்ளைப் பிராயத்தில் இருந்தே தன்பால் மிகுந்த அன்பு கொண்டிருந்த கலயரின் மாசற்ற பக்தியை உலகத்தவர்க்கு உணர்த்திடத் திருவுள்ளம் கொண்ட இறைவன், கலயரின்

அபிராமி பட்டருக்கு அருள்புரியத் திருவுள்ளம் கொண்ட அம்பிகை, அவருடைய வாக்கைக் காப்பாற்ற, இயற்கை நியதிக்கு மாறாக முழுநிலவை உதிக்கச் செய்யவில்லை. தன் காதை அலங்கரித்த தாடங்கத்தைக் கழற்றி வானில் வீசி, அந்தத் தாடங்கத்தையே முழுநிலவாக பிரகாசிக்கச் செய்தாள். புவியீர்ப்பு விசைக்கு அப்பால் உள்ள பொருள்கள் மிதக்கும் என்ற அறிவியல் கோட்பாட்டை நிரூபிக்கும் வண்ணம் அம்பிகை நிகழ்த்திய அருளாடல் இது. மேலும் இதே காலக்கட்டத்தில் தான் சர் ஐசக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார் என்று சொல்லப்படுகிறது.

மனைவி கொடுத்த திருமாங்கல்யத்தை விற்று குங்கிலியப் புகை போட்டுவிட்டபடியால் வீட்டுக்குச் செல்லத் தயங்கி கோயிலிலேயே உறங்கிவிட்ட கலயனார், கனவில் இறைவன் இட்ட கட்டளையை மறுக்க முடியாமல் விழித்தெழுந்து வீட்டுக்குச் சென்றதும், தன் பொருட்டு இறைவன் நிகழ்த்திய அருளாடலை எண்ணி எண்ணி பூரித்துப் போற்றினார்.

வாழ்க்கையில் வறுமையை ஏற்படுத்தினார்.

ஒருநாள் வீட்டில் எதுவும் இல்லை. பிள்ளைகளும் உறவினர்களும் பசியால் வாடுவதைக் கண்டு மனம் பொறுக்காத கலயரின் மனைவி, இறுதியாகத் தன் திருமாங்கல்யத்தை கலயரிடம் கொடுத்து அதை விற்று வீட்டுக்குத் தேவையான அரிசி முதலியவற்றை வாங்கி வரும்படியாக அனுப்பினார். நாயனார் கடைத்தெருவில் சென்று கொண்டிருந்தபோது, எதிரில் ஒரு வணிகன் குங்கிலியம் விற்று வருவதைக் கண்டார். மனைவி தன்னிடம் கொடுத்திருந்த திருமாங்கல்யத்தை அந்த வணிகனிடம் கொடுத்து அதற்கு ஈடாக குங்கிலியம் பெற்றுக் கொண்டு ஐயனின் சந்நிதிக்கு வந்து குங்கிலியப் புகை போட்டபடி இறைவனின் சந்நிதியிலேயே இருந்தார். இரவு நெடுநேரமாகியும் கணவர் வீடு திரும்பாததால், மனைவியும் பிள்ளைகளும் சோர்ந்து தூங்கிவிட்டனர்.

தம்மிடத்தே மிகுந்த பக்திகொண்டு வறுமையிலும் கலங்காமல் தன் சந்நிதியில் குங்கிலியப்புகை போட்டுக் கொண்டிருந்த கலயருக்கு அருள்புரிய திருவுள்ளம் கொண்ட சிவனார், கலயருடைய இல்லத்தில் ஏராளமான நெல் மற்றும் தானியங்களுடன் ஆபரணங் களையும் ஆடைகளையும் கொடுத்து அருளினார். கலயருடைய மனைவியின் கனவில் தோன்றி தம்முடைய அனுகிரகத்தை உணர்த்தியதுடன், கோயிலில் இருந்து திரும்பும் கணவருக்கு உணவு சமைத்து வைக்கும் படியாகக் கூறி மறைந்தார். விழித்து எழுந்த கலயரின் மனைவி இறைவனின் திருவருளை எண்ணி வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டவராக உணவு சமைப்பதில் ஈடுபட்டார். அதேபோல் கோயிலில் உறங்கிக் கொண்டிருந்த கலயரின் கனவிலும் இறைவன் தோன்றி வீட்டுக்குச் செல்லுமாறு பணித்தார்.

மனைவி கொடுத்த திருமாங்கல்யத்தை விற்று குங்கிலியப் புகை போட்டுவிட்டபடியால் வீட்டுக்குச் செல்லத் தயங்கி கோயிலிலேயே உறங்கிவிட்ட கலயனார், கனவில் இறைவன் இட்ட கட்டளையை மறுக்க முடியாமல் விழித்தெழுந்து வீட்டுக்குச் சென்றதும், தன் பொருட்டு இறைவன் நிகழ்த்திய அருளாடலை எண்ணி எண்ணி பூரித்துப் போற்றினார்.



ஒருமுறை திருப்பனந்தாளில் சாய்ந்து இருந்த சிவலிங்க மூர்த்தத்தை நிமிர்த்தி பிரதிஷ்டை செய்து வழிபட விரும்பிய மன்னன், பலவாறாக முயற்சித்தும் நிமிர்த்த முடியாமல் வருத்தம் கொண் டான். அதுபற்றி கேள்விப்பட்ட குங்கிலியக்கலயர் அங்கே சென்று, கயிறு ஒன்றின் ஒரு முனையை சிவலிங்கத்தில் சுற்றி மறு முனையைத் தன் கழுத்தில் சுற்றிக்கொண்டு இழுக்கத் துணிந்தார். அவருடைய அன்புக்குக் கட்டுப்பட்ட ஈசனின் சிவலிங்க வடிவம் நிமிர்ந்தது! அங்கேயே சில நாள்கள் இருந்த குங்கிலியக்கலயர் பின்னர் திருக்கடவூருக்கு வந்து குங்கிலிய தூபம் போடும் திருப்பணியைத் தொடர்ந்தார். இந்தத் தலத்துக்கு வந்த


ஓம்சக்தி
SRI KALASAMHARAMURTI
SRI BALAMBAL
MARKANDEYAR
YAMADHARMA

மூலவர் : அமிர்தகடேஸ்வரர் மற்றும் காலசம்ஹாரமூர்த்தி

அம்மன் : அபிராமி மற்றும் பாலாம்பிகை

தலவிருட்சம் : வில்வம்

தீர்த்தம் : அமிர்தபுஷ்கரணி, கங்கை தீர்த்தம்

பழைமை : 1,500 வருடங்களுக்கு முன்

புராணப் பெயர் : திருக்கடவூர்

ஊர் : திருக்கடையூர்

மாவட்டம் : மயிலாடுதுறை


பாடியவர்கள் : அப்பர், ஞானசம்பந்தர், சுந்தரர்

திருவிழா : சித்திரை மாதம் பிரம்மோற்ஸவம், தை அமாவாசை அபிராமி பட்டருக்கு அபிராமி அன்னை அனுக்கிரஹம், கார்த்திகை சங்காபிஷேகம், நவராத்திரி, ஆடிப்பூரம்

திறந்திருக்கும் நேரம் : காலை 6.00 முதல் பகல் 1.00 மணி வரை

மாலை 4.00 முதல்
இரவு 9.00 மணி வரை

முகவரி : அருள்மிகு
அமிர்தகடேஸ்வரர் திருக்கோயில்,
திருக்கடையூர் – 609 311,
மயிலாடுதுறை மாவட்டம்,
போன் : 04364 - 287429



திருஞானசம்பந்தப் பெருமானுக்கும் சிறப்பான உபசரிப்பு செய்து அவருடைய திருவருளையும் பெற்றார். உரிய காலத்தில் சிவபெருமானின் திருவடிகளை அடைந்தார்.

அடுத்தவரான காரிநாயனாரும் சொல் விளங்கி பொருள் புரியாத வகையில் தம் பெயரில் காரிக்கோவை பாடி, மூவேந்தர்களிடமும் சென்று அந்தப் பாடலைப் பாடினார். பொருள் விளங்காமல் திகைத்த மூவேந்தர்களுக்கும் அதன் பொருளை அழகுபட விளக்கி அவர்களை வியப்பில் ஆழ்த்தினார். அப்படி பெற்ற பெரும் செல்வத்தைக் கொண்டு பல சிவாலயங்களுக்குத் திருப்பணிகள் மேற்கொண்டும், சிவனடியார் களுக்குத் தேவையானவற்றை வழங்கியும் சிவபெருமானின் அருளுக்குப் பாத்திரமானார்.

திருக்கடவூர் திருத்தலத்தில் அவதரித்து சிவத் திருப்பணியில் தம்மைப் பூரணமாக ஈடுபடுத்திக் கொண்ட திருத்தொண்டர்களின் சிவபக்தித் திறம் நம்மை மெய்சிலிர்க்கச் செய்கிறது. ஆலயத்தில் நம்மைப் பரவசப்படுத்திய மற்றுமோர் அம்சம் ஸ்வரம் தவறாமல் அங்கே கேட்ட வேத கோஷம்தான். அந்த வேத கோஷங்கள் அங்கே நாளும், காலையும் மாலையும் ஒலிப்பதை நாம் தவறாமல் கேட்கலாம் என்றார் உடன் வந்த ஓர் அன்பர்.

தருமபுர ஆதீனத்துக்கு உரிமையான அந்தக் கோயிலில் நாளும் விழாக் கோலம்தான். ஆம். மார்க்கண்டேயருக்கு சிரஞ்சீவித்துவம் அருளியதன் காரணமாக அங்கே பக்தர்கள் ஆயுஷ் ஹோமம் செய்துகொள்வதும், அறுபது வயது பூர்த்தி ஆனவர்கள் சஷ்டியப்தபூர்த்தி, எழுபது வயது பூர்த்தி அடைந்தவர்கள் பீமரத சாந்தி, எண்பது வயது நிறைவு பெற்றவர்கள் சதாபிஷேகம் மற்றும் கனகாபிஷேகம் போன்ற வைபவங்களை தங்களுடைய ஜன்ம நட்சத்திரம் வரும் நாளில் திருக்கோயிலில் நடத்திக் கொள்வதால், ஒவ்வொரு நாளும் அங்கே பக்தர்களின் கூட்டம்தான்! வேத மந்திர முழக்கம்தான்! அந்த வேத மந்திர முழக்கங்கள் நாளும் அங்கே ஒலிப்பதன் காரணமாகவே ஆலயத்தின் சாந்தித்யம் மேலும் மேலும் பொலிவு பெற்று வருகிறது என்பதையும் நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் அமைந்திருப்பதும், தருமபுர ஆதீனத்தின் நிர்வாகத்தில் இருப்பதுமான அருள்மிகு அபிராமி அம்பிகை சமேத அருள்மிகு அமிர்தகடேசர் ஆலயத் திருப்பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆலயத் திருப்பணிக்கு உதவி செய்ய விரும்பு வோர் ஆலயத்தைத் தொடர்பு கொள்ளலாம்.

முகவரி:

Sri amirthakadeshwara Swamy temple
Thirukadaiyur - 609311
0436 4287429

ஆலயத்தை விட்டு வெளியில் வந்த நம் மனத்தில், மார்க்கண்டேயருக்கு சிரஞ்சீவித்துவம் அருளிய மகேஸ்வரனின் அருள் திறனும்; தன்னுடைய அத்யந்த பக்தனுக்காக தன்னுடைய தாடங்கத்தையே முழு நிலவாகப் பிரகாசிக்கச் செய்த அம்பிகையின் தாய்மை அன்பும்; வறுமை நிலையிலும் ஐயனின் சந்நிதியில் குங்கிலிய தூபம் போடத் துணிந்த குங்கிலியக் கலயரின் சிவபக்திச் சிறப்பும்; கோவை பாடிக் கிடைத்த செல்வங்களை எல்லாம் சிவப் பணிகளிலும் சிவனடியார்களை உபசரிப்பதிலும் செலவிட்ட காரியாரின் கனிந்த பக்தியும் நம்மைப் பரவசத்தில் திளைக்கச் செய்ய, ஐயன் அமுதீசரையும் அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணியாம் அன்னை அபிராமியையும் நெஞ்சில் இருத்தி அவர்தம் திருவடி பணிந்து திரும்புகிறோம்.





● எம்.மரிய பெல்சின்

பாடாய்ப்படுத்தி எடுக்கும் வாய்வுக்கோளாறு... சரிசெய்ய வழிகள் உண்டு!

செரிமானக்கோளாறு, மலச்சிக்கல் பற்றி கடந்த இதழ்கள்ல பார்த்தோம். இப்போ வாய்வுக் கோளாறைப் பற்றி பார்ப்போம். வாய்வுக்கோளாறு இல்லன்னா வாயுக்கோளாறு, கேஸ் பிராப்ளம்னும் சொல்வாங்க. இந்தப் பிரச்னை வர்றதுக்கு என்ன காரணம்கிறதை முதல்ல தெரிஞ்சிக்கணும். இயற்கையாவே சிலபேரோட உடம்பு வாகுக்கு வாய்வு உற்பத்தியாகும். இன்னும் சிலபேருக்கு சரியான நேரத்துல சாப்பிடலைன்னாலும் வாய்வு உண்டாகும். அடுத்தது வாய்வை உண்டாக்கக்கூடிய உணவுப்பொருள்களை சாப்பிடுறதுனாலயும் வாய்வுக்கோளாறு ஏற்படலாம். காரணம் என்னவா இருந்தாலும் அதை சரிபண்றதுக்கு வழி இருக்கு.

கிழங்குவகைகள், வாழைக்காய், பயறு, பருப்புவகைகள், சிலவகை மீன்கள்னு பல உணவுகள் மூலமா வாய்வுக்கோளாறு உண்டாகலாம். வாய்வுக்கோளாறு பிரச்னை அதிகம் உள்ளவங்க இதையெல்லாம் தவிர்த்தா நல்லது. ஒருவேளை சாப்பிட்டாலும் அதை சரிபண்றதுக்கு நிறைய வழிகள் இருக்கு.

வாய்வுக்கோளாறு இருந்தா சில அறிகுறிகள் தெரியும். அடிக்கடி ஏப்பம் போறது, வயித்துல இரைச்சல் உண்டாகுறது, வயிறு திடீர்னு உப்புறது, காற்று பிரிதல், எதுக்களித்தல்னு நிறைய அறிகுறிகள் இருக்கும். இதை இப்பிடியே விட்டுட்டா உடம்புல எங்கெங்க இடைவெளி இருக்கோ... அங்கல்லாம் வாய்வு போய் உக்காந்துக்கிடும். இதனால அந்த இடங்கள்ல வலி எடுக்கும். சிலபேருக்கு தீராத கழுத்துவலி இருக்கும். இதுக்கு என்னென்னவோ டெஸ்ட் எடுத்தும், சிகிச்சை எடுத்தும் என்ன பிரச்னைன்னு கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு போக்கு காட்டும். நடுமுதுகுலயும் இடுப்பு பகுதியிலயும் காத்து போய் உக்காந்து மனுசனை ஒரு வழி பண்ணிரும். கழுத்து, முதுகு, இடுப்புப் பகுதியில வாய்வுவோட ஆதிக்கம் இருந்தா நிமிர்ந்து நடக்க முடியாம, உட்கார முடியாம அவதிப்படுவாங்க. சிலபேரால பாத்ரூம்ல உக்காந்து எழுந்திரிக்கக்கூட முடியாது. அந்த அளவுக்கு பாடாப் படுத்தி எடுத்துரும்.

வாய்வுக்கோளாறு உச்சத்துக்கு போய்ட்டா தலை சுத்துற மாதிரி இருக்கும். சிலபேருக்கு மயக்கம் வரும். ஹார்ட் அட்டாக் வந்தா என்னென்ன அறிகுறி இருக்குமோ அதெல்லாம் இருக்கும். ஹார்ட் அட்டாக் வர்றவங்களுக்கு வர்ற மாதிரியே நெஞ்சு வலிக்கும். வாய்வுக் கோளாறால வரக்கூடிய இந்தப் பிரச்னையை சிலபேர் மாரடைப்புன்னு நினைச்சி ரொம்ப பயந்திருவாங்க. பலபேர் வாய்வுக்கோளாறால வந்த பிரச்னைக்கு ஹார்ட் அட்டாக் ட்ரீட்மென்ட் எடுப்பாங்க. அதனால அது வாய்வுக்கோளாறு தானான்னு கண்டுபிடிக்கணும். ஆனா, இதை நாமே முடிவு செஞ்சிடக்கூடாது. ஒருவேளை உண்மையிலயே ஹார்ட் அட்டாக் வந்திருந்தா அதை வாய்வுக்கோளாறுன்னு நினைச்சி சிகிச்சை எடுக்காம இருக்கக்கூடாது. மருத்துவர்கள்கிட்ட ஆலோசனை கேட்டு அது வாய்வுக் கோளாறா, ஹார்ட் அட்டாக்கான்னு முடிவு பண்ணிட்டு அதுக்கு தகுந்த மாதிரி ட்ரீட்மென்ட் எடுங்க.

பொதுவா வெத்திலை போடுறதால வாய்வுக்கோளாறுல இருந்து விடுபடலாம். ஆனா வெத்திலைன்னதுமே பலபேர் அது ஒரு மோசமான பழக்கம்னு நினைக்காங்க. அந்தக் கால பாட்டிமார் வெத்திலையோட புகையிலையை சேர்த்து சாப்பிடுவாங்க. புகையிலை நல்லதில்லைங்கிறதால வெத்திலை போடுற பழக்கத்தை நல்ல பழக்கம் இல்லைன்னு சொன்னாங்க. அதை எல்லோரும் அப்பிடியே நம்பிட்டோம். புகையிலை சாப்பிட்டா அது பல்லுல கறையை உண்டாக்குறதோட வாய்ல புண், வாய்லயும் வயித்திலயும் புற்றுநோயை உருவாக்க வாய்ப்பிருக்கு. ஆனா, வெத்திலை போடுறதால எந்தக் கெடுதலும் இல்லை. அதை



முதல்ல புரிஞ்சிக்கிடணும்.

வெத்தி லைங்கிற வெற்றிலை வாய்வுக் கோளாறு, செரிமானக் கோளாறு, மலச்சிக்கல் பிரச்னைனு பல பிரச்னைகளுக்கு நல்ல மருந்து. முக்கியமா உடம்புல வாய்வு சேராம பாத்துக்கிடும். பொதுவா மதிய சாப்பாட்டுக்குப் பிறகு வெத்திலை போடுறது நல்லது. வெத்திலைன்னதும் வெறும் வெத்திலையா இல்லாம அதோட கொஞ்சம் பாக்கு, சுண்ணாம்பு சேர்த்துச் சாப்பிடணும். சிலபேர் வாசனைக்காக கொஞ்சம் கிராம்பு, ஏலக்காய், பட்டை சேர்த்துக்கிடுவாங்க. குங்குமப்பூ, ஜாதிக்காய் சேர்த்து சாப்பிடுறவங்களும் இருக்காங்க. வெத்திலைக்கு நிறைய மருத்துவ குணங்கள் இருக்குங்கிறதால தாராளமா சாப்பிடலாம். காலையும் சாயங்காலமும் வெறும் வயித்துல வெத்திலையோட மிளகு, கல் உப்பு சேர்த்துச் சாப்பிட்டு வந்தாலும் இந்த வாய்வுக்கோளாறு பிரச்னை சரியாகும்.

பெருங்காயம்: கட்டிப் பெருங்காயம் இல்லன்னா தூள் பெருங்காயத்தை மோரோட கலந்து சாப்பிடலாம். இல்லன்னா வெந்நீரோட கலந்து சாப்பிடலாம். ஒண்ணு இல்லன்னா ரெண்டு சிட்டிகை சாப்பிட்டா போதும். ஓமம்கூட வாய்வுக்கோளாறை சரிபண்ணும். அரை ஸ்பூன் ஓமத்தை இளம்வறுப்பா வறுத்து பொடியாக்கி கொஞ்சம் வெல்லம் இல்லன்னா நாட்டுச்சர்க்கரை சேர்த்து சாப்பிட்டு வெந்நீர் குடிச்சா பிரச்னை சரியாகும். ஓமம் இல்லன்னா ஓமவாட்டர் குடிக்கலாம். சிலபேர் ஓமத்தை தண்ணிவிட்டு கொதிக்க வச்சி குடிப்பாங்க.

பூண்டு: அதாவது வெள்ளைப்பூண்டு சாப்பிட்டாலும் வாய்வுக்கோளாறு சரியாகும். சிலபேர் பச்சையா பூண்டு சாப்பிடுவாங்க. அது நல்லதில்ல. வேக வச்சி சாப்பிடுறதுதான் நல்லது. தண்ணி விட்டு கொதிக்க வச்சி சாப்பிடலாம். இல்லன்னா தீயில சுட்டு சாப்பிடலாம். பால்ல வேக வச்சும் சாப்பிடலாம். ராத்திரி தூங்கப்போறதுக்கு முன்னாடி பூண்டுப்பால் செஞ்சி சாப்பிட்டாலும் வாய்வுக்கோளாறு சரியாகும்.

பிரண்டைகூட வாய்வுக்கோளாறை சரிபண்ணும். பிரண்டையை துவையல் செஞ்சி சாப்பிடலாம். இளம்பிரண்டையை நார் உரிச்சி நல்லெண்ணெய் விட்டு நல்லா வதக்கணும். பச்சை நிறம் பிரவுன் நிறமா மாறுற அளவுக்கு வதக்கணும். அதுக்குப் பிறகு மிளகாய் வத்தல் (காய்ந்த மிளகாய்), பூண்டு, புளியை வதக்கி உப்பு சேர்த்து அரைக்கணும். உளுந்து, தேங்காய்கூட வறுத்து சேர்த்துக்கிடலாம். இதை வாரத்துல ஒருநாள் இல்லன்னா ரெண்டுநாள் சாப்பாட்டுல சேர்த்துக்கிட்டு வந்தா வாய்வுக்கோளாறு சரியாகும்.

சுக்கு, மிளகு, திப்பிலி சேர்த்து வறுத்துப் பொடியாக்கி சாப்பிடலாம். இந்த மூணு பொருள்களோட வெள்ளைப்பூண்டு சேர்த்து தட்டிப்போட்டு கொதிக்க வச்சி காலையும், சாயங்காலமும் குடிச்சிட்டு வந்தா வாய்வுத்தொல்லை சரியாயிரும். இது இல்லாம திரிபலா சூரணம் சாப்பிட்டாலும் இந்தப் பிரச்னை சரியாகும். திரிபலாங்கிறது நெல்லிக்காய், கடுக்காய், தான்றிக்காய் சேர்ந்த கலவை. இதை ராத்திரி தூங்கப்போறதுக்கு முன்னாடி அரை ஸ்பூன் அளவு சாப்பிட்டு வெந்நீர் குடிச்சிட்டுவந்தாலும் வாய்வுத்தொல்லை சரியாகும்.

சுக்கு, மல்லி, மிளகு சேர்த்துப்பொடியாக்கி அதை தண்ணி விட்டு கொதிக்க வச்சி கருப்பட்டி சேர்த்துக் குடிச்சாலும் வாய்வுத் தொல்லை சரியாகும். வெறும் சுக்குப்பொடியை வாய்ல போட்டு வெந்நீர் குடிக்கலாம். இஞ்சிச்சாறு எடுத்து காலைல வெறும் வயித்துல குடிச்சிட்டு வந்தாலும் வாய்வுக்கோளாறு பிரச்னைல இருந்து விடுபடலாம். இஞ்சி, மல்லித்தழை, கறிவேப்பிலை, புதினாவை துவையல் செஞ்சி சாப்பிட்டாலும் வாய்வுக்கோளாறு சரியாகும்.

புதினா ஜூஸ் கூட இந்தப் பிரச்னையை சரிபண்ணும். கைப்பிடி அளவு புதினா எடுத்து அதோட சின்னத்துண்டு இஞ்சி சேர்த்து அரைச்சி தண்ணிவிட்டு வடிகட்டி அரை எலுமிச்சம்பழத்தோட சாறு அதோட தேன், சீனி (சர்க்கரை) இல்லன்னா நாட்டுச்சர்க்கரை சேர்த்துக் குடிச்சாலும் வாய்வுக்கோளாறு சரியாகும். இந்த ஜூஸ் குடிச்சா வாய்வுக்கோளாறு மட்டுமில்லாம வாந்தி, வயித்துப்போக்கு, வயிற்றுவலியும்கூட சரியாகும். ●



வீசிய கல்...!

அகரம்
செ.தர்மலிங்கம்



கிணற்றில் தண்ணீர் எடுக்கச் சென்ற ஜானகி, முணுமுணுத்தவாறு வீட்டுக்குள் வந்தாள். ஷோபாவில் அமர்ந்து நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த சபாபதி, "யாரோடு பேசிட்டு வர்றே ஜானு..." என்றார்.

"பக்கத்து வீட்டில் குடியிருக்கானே மாரியப்பன்... என்னவோ, அவன் வீட்டுத் தோட்டம் மாதிரி, நம்ம முருங்கை மரத்தில் கீரை பறிக்கிறான்...!" என்றாள்.

"அப்படியா... அது தப்பாச்சே..."

"அடுத்தவங்க பொருளைத் தொடக்கூடாதுங்கிற அறிவில்லையா... உனக்கு ஏண்டா இந்தப் பிழைப்புன்னு கேட்டுட்டுத்தான் வர்றேன்..."

"அதுக்கு என்ன சொன்னான்...?"

"அவன் மனைவி கிராமத்திலிருந்து கேழ்வரகு மாவு கொண்டு வந்திருக்காளாம். அதில் 'அடை' செய்யும்போது, முருங்கைக் கீரையைச்

சேர்த்துச் செய்தால் அடை ருசியாக இருக்குமாம். அதுக்காகத்தான் கொஞ்சம் கீரைப் பறிச்சேன்கிறான்."

"நல்லாயிருக்கே... அவங்க ருசியா அடை சாப்பிடுவதற்கு நம்ம முருங்கை மரம்தான் கிடைச்சுதா...?"

"அது மட்டுமா... ஒருநாள் வாழைஇலை அறுத்தான். ஏண்டா கேட்காமல் இலை அறுக்கறேன்னு கேட்டேன். அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா...?"

"என்ன சொன்னான்...?"

"வீட்டுக்கு உறவினர் வந்திருக்கார், அவருக்கு இலையில் சோறு போடுவதற்காகத்தான் அறுத்தேன்னான்."

"அதன்பிறகு, மாமரத்தில் மாங்காய் பறிச்சான். கேட்டதுக்கு மனைவி ஊருக்குப் போய்ட்டா, மதியச் சாப்பாட்டுக்குப் பழையசோறு இருக்கு, கடிச்சுக்க வடுமாங்காய் இருந்தால் நல்லா இருக்கும்னு பறிச்சேன்கிறான். இப்படி நம்ம தோட்டத்தில் விளைகிறதை எல்லாம் அவன்தான் அனுபவிக்கிறான்" என்று ஆதங்கப்பட்டாள் ஜானகி.

"இதை வளரவிடக் கூடாது ஜானு... ஆரம்பத்திலேயே கண்டிக்கணும். இப்ப கொல்லைப் பக்கம் திருடுறவன், ஒருநாள் வீடு புகுந்து திருடமாட்டான் என்பதற்கு என்ன உத்திரவாதம்...?"

"மாரியப்பன் பக்கத்துவீட்டில் இருக்கும்வரை நமக்குத் தொல்லைதான். 'ஹவுஸ் ஓனரைப் பார்த்து, அவனைக் காலிபண்ணச் சொல்லிடுங்க..." என்று ஜானகி கூற, சபாபதி அதிர்ந்தார்.

பக்கத்துவீட்டு சிவராமன், சொந்த வீட்டை வாடகைக்கு விட்டுட்டு, நாலு தெரு தள்ளி, அவர் வாடகை வீட்டில் குடியிருப்பதற்குக் காரணமே ஜானகிதானே...


சபாபதி வீட்டின் கொல்லையில் மா, பலா, வாழை, கொய்யா எனப் பலன்தரக் கூடிய மரங்கள் இருந்தன. அதிகாலையில் பறவைகளின் சப்தம்.

அந்த மரங்களைப் பார்க்கும்போது, பக்கத்துவீட்டில் இருக்கும் உமாவுக்கு எரிச்சலாக இருந்தது.

"மாமரத்தின் சருகுகள் எங்கள் வீட்டுப் புழக்கடையை அடைத்துக் கொள்கிறது. வற்றல் காயவைக்க முடியவில்லை. மழைக் காலங்களில் கம்பளிப் பூச்சிகளும், அட்டைகளும் படையெடுத்து வருகின்றன. மரங்களை வெட்டுங்கள்..." என்று உமா கூற...

ஜானகிக்கு "சுருக்"கென்று கோபம் வந்தது.

"அடிக்கடி இதையே சொல்றே உமா... முதலில் உங்கள் வீட்டுப் பக்கம் வர்ற மாமரத்தின் கிளைகளை வெட்டச் சொன்னாய்... வெட்டினோம். இப்போது மரங்களை வெட்டச் சொல்கிறாய்... மரம் நட்டு வளர்த்திருந்தால் அதன் அருமை உனக்குப் புரியும்... எங்கள் வீட்டுத் தோட்டத்தில் இருக்கிற மரங்களைப்



அதன்பிறகு, மாமரத்தில் மாங்காய் பறிச்சான். கேட்டதுக்கு மனைவி ஊருக்குப் போய்ட்டா, மதியச் சாப்பாட்டுக்குப் பழையசோறு இருக்கு, கடிச்சுக்க வடுமாங்காய் இருந்தால் நல்லா இருக்கும்னு பறிச்சேன்கிறான். இப்படி நம்ம தோட்டத்தில் விளைகிறதை எல்லாம் அவன்தான் அனுபவிக்கிறான்



பார்த்துப் பொறாமைப்படுகிறாய்..."

இருவருக்கும் வாக்குவாதம் முற்றியது.

காம்பவுண்ட் சுவற்றுக்கு அருகில் நின்று, இருவரும் தடிப்பான வார்த்தைகளைப் பிரயோகித்தனர்.

வீட்டுக்குள்ளிருந்து வந்த சிவராமன், 'உன்னோட பெரிய தொல்லையாப் போச்சு...' என்றவாறு உமாவின் கரத்தைப் பற்றி இழுத்துச் சென்றார்.

அதன்பிறகு, ஆட்டோக்காரர் மாரியப்பனைக் குடியமர்த்திவிட்டு, சிவராமன் வேறு வீட்டுக்கு மாறிவிட்டார். அவரிடம் போய் மாரியப்பனைக் காலி பண்ணச் சொன்னால் செய்வாரா?

"ஏன் பேசாமல் இருக்கீங்க...?"

ஜானகியின் குரல், சபாபதியின் சிந்தனையைக் கலைத்தது.

"போறேன்... போய்ப் பேசிட்டு வர்றேன்..." வெறுப்புடன் புறப்பட்டார் சபாபதி.

அழைப்புமணி ஒலித்ததும் 'படக்'கென்று கதவு திறந்தது.

சிவராமன் பிரசன்னம். ஏன் இங்கு வந்தாய் என்பது போன்ற பார்வை. அவருக்குப் பின் உமாவின் முகம் தெரிந்தது. அதில் குரூரப் பார்வை.

"உங்கள் வீட்டில் குடியிருக்காரே மாரியப்பன், அவரை வீட்டைக் காலி பண்ணச் சொல்லுங்க..." என்றார்.

"ஏன் காலிபண்ணச் சொல்றீங்க...?"

"கை சுத்தமில்லேங்க... எங்கள் தோட்டத்தில் விளைகிறதை எல்லாம் திருடுறான். இன்று தோட்டத்தில் திருடுறவன், இன்னொரு நாள் வீட்டுக்குள் புகுந்து திருடமாட்டான் என்பதற்கு என்ன உத்திரவாதம்? அதனால்தான் முன்னெச்சரிக்கையாச் சொல்றேன், மாரியப்பனிடம் போய் வீட்டைக் காலி பண்ணச் சொல்லுங்க..."

"இந்த வீட்டுக்கு வந்த பிறகுதான், சண்டை சல்லு இல்லாமல் நிம்மதியாக இருக்கேன். இங்கேயும் வந்து ஏன்யா தொல்லை கொடுக்குறீங்க? அவர் குடிவந்து நான்கு மாதங்கள்தான் ஆகிறது. இப்போதைக்கு அவரிடம் போய் காலிபண்ணச் சொல்ல




Godrej interio®
N.MAHALINGAM & COMPANY
68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand Coimbatore - 641 018.
Email : homeappliances@nmanco.com, godrej@nmandco.com
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811, Mob : +91 98438 40000

முடியாது..." என்றவர், "டப்"பென்று கதவை மூடினார்.

ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார் சபாபதி.

"ஹவுஸ் ஓனரைப் பார்த்தீங்களா...? காலி பண்றேன்னு சொன்னாரா?" ஆவலுடன் கேட்டாள் ஜானகி.

"முடியாதுன்னுட்டார்..." விரக்தியுடன் பதில் வந்தது.

"எனக்குத் தெரியும்... அப்படித்தான் சொல்வார்... நம்மைப் பழி வாங்குவதற்காகவே, மாரியப்பனை உமா குடியமர்த்தி இருக்கிறாள்..." பகையை மனதில் வைத்துக் கூறினாள் ஜானகி.

"அதைப் பற்றிப் பேசிப் பலனில்லை ஜானகி... இனி மாரியப்பனால் ஏதாவது பிரச்னை வந்தால், காவல்நிலையத்துக்குப் போவதைத் தவிர, வேறு வழியில்லை" என்றார் சபாபதி.

நாள்கள் கடந்தன.

அன்று அடுக்களையில் இருந்து வெளியில் வந்த ஜானகி, திடுக்கிட்டாள். ஹாலில் மாரியப்பன் நின்றான்.

சின்னச் சின்ன திருட்டாகத் தோட்டத்தில் திருடுறவன், என்றாவது ஒருநாள் வீட்டுக்குள் புகுந்திடுவான்னு, கணவர் கூறியது நினைவுக்கு வந்தது.

"வீட்டுக்குள்ள ஏன் வந்தே... அவர் இல்லாத நேரம் பார்த்து கிடைச்சதைச் சுருட்டிண்டு போகலாம்னு வந்தியா? மரியாதையா வெளியில் போறியா... இல்ல போலீசுக்குப் போன் பண்ணவா...?" மிரட்டலாகக் கூறினாள் ஜானகி.

ஒரு கணம் மிரண்டுபோன மாரியப்பன், 'தவறா நினைக்காதிங்கம்மா... உங்கள் கணவர் டூ-வீலரில் செல்லும்போது, கார் மோதி... கீழே விழுந்துட்டார். தலையில் அடிபட்டு ரத்தம் கசிந்தது. ஆட்டோ ஸ்டாண்டில் நின்ற நான், அவரை என் ஆட்டோவில் அழைச்சிட்டுப் போய், மருத்துவமனையில் சேர்த்துட்டு உங்களுக்குத் தகவல் சொல்றதுக் காக வந்தேன்... என்னைப் போய்..."

"அவருக்கு என்னாச்சு...?" பதற்றத்துடன் கேட்டாள் ஜானகி.

"பயப்பட வேண்டாம்னு டாக்டர் சொன்னார். வாங்க... என் ஆட்டோவில் உங்களை மருத்துவமனைக்கு அழைச்சிட்டுப் போறேன்..."

நெஞ்சு படபடக்க, பதற்றத்துடன் வீட்டைப் பூட்டிவிட்டுப் புறப்பட்டாள் ஜானகி.

"என்னை மன்னிச்சிடு மாரியப்பா... உன் நல்ல மனசு புரியாமல் பலமுறை உனனைக் கேவலப்படுத்திப் பேசியிருக்கேன். அதையெல்லாம் மனசில் வச்சுக்காமல், தெய்வம் போல் வந்து என் கணவரைக் காப்பாற்றி இருக்கிறாய்..." உணர்ச்சிப் பெருக்குடன் கூறினாள்.

"நான் கிராமத்தில் வளர்ந்தவன். சூதுவாது தெரியாது... என்னால் முடிந்த சின்ன உதவி..." என்றான். பேசிக் கொண்டே இருவரும் மருத்துவமனையை அடைந்தனர்.

அவசரச் சிகிச்சைப் பிரிவில், தலையில் கட்டுடன் பெட்டில் படுத்திருந்தார் சபாபதி. அவரைப் பார்த்ததும், ஜானகி விம்மினாள்.

மெதுவாகக் கண் விழித்தவர், "அழாதே ஜானு... குறித்த நேரத்தில் மாரியப்பன் என்னை இங்கு கொண்டு வந்து சேர்த்து, ரத்தம் கொடுத்துக் காப்பாத்திட்டான்... மாரியப்பன் செய்த சிறு சிறு தவறுகளைப் பார்த்து, அவனை எதிரியாக நினைத்தோம். ஆனால், மாரியப்பன், மனிதநேயமுள்ள மனிதன் என்பதை நிரூபித்துவிட்டான்..." என்று கண்கலங்கிய சபாபதி, "இனி எங்கள் தோட்டத் தில் நீ எதை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம். அதற்கு நாங்கள் தடைசொல்ல மாட்டோம்..." என்று கூறினார் மாரியப்பனைப் பார்த்து.

"அதற்கு வழி இல்லீங்கய்யா..." என்றான் மாரியப்பன்.

"என்ன மாரியப்பா சொல்றே...?" ஒன்றும் புரியாதவளாய் கேட்டாள் ஜானகி.

"வீட்டு ஓனரின் மகன் வெளிநாட்டிலிருந்து வரப்போறாராம். அதனால் வீட்டைக் காலி பண்ணச் சொல்லிட்டார். நானும் வேறு வீடு பார்த்துட்டேன்..." என்றான்.

அவருக்குத்தான் பிள்ளை இல்லையே... வேறு எந்தப் பிள்ளை வரப் போகிறான்...! என்று எண்ணிய சபாபதியும், ஜானகியும் ஒருவரையோருவர் பார்த்துக் கொண்டனர்.

அவர்கள் வீசிய கல், திரும்பவும் வந்து தாக்கியதைப் போல் நெஞ்சு வலித்தது. ●

● காயத்ரி கிருஷ்ணராஜ்





முன்னோர் வழிபாட்டுக்கு உகந்த தலம்!

பித்ருதோஷம் நீக்கும் முக்தீஸ்வரர்!





முன்னோர் வழிபாடு என்பது அனைவரும் அவசியம் செய்யவேண்டிய வழிபாடு. மறைந்த நம் முன்னோர்களை வழிபட உகந்த தினம் அமாவாசை. அதனால்தான் மாதம்தோறும் வரும் அமாவாசை நாளில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுப்பதை ஒரு கடமையாகவே கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. மாதம்தோறும் அமாவாசை நாள்களில் முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்க முடியாதவர்கள்கூட, ஆடி அமாவாசை, புரட்டாசி மாத மகாளய அமாவாசை, தை மாத அமாவாசை ஆகிய மூன்று அமாவாசைகளில் மறைந்த முன்னோர்களுக்கு கண்டிப்பாக தர்ப்பணம் கொடுக்கவேண்டும். இந்த மூன்று அமாவாசை தினங்களில் புனிதத் தலங்களுக்குச் சென்று தர்ப்பணம் கொடுப்பது மிகவும் விசேஷம். அப்படிப்பட்ட தலங்களில் ஒன்றுதான் திலதர்ப் பணபுரி என்று அழைக்கப்படும் திலதைப்பதி திருத்தலம்.

இந்தத் தலத்தில் இறைவன் அருள்மிகு முக்தீஸ்வரர், மந்தாரவனேஸ்வரர் என்ற திருப்பெயர்களுடனும், அம்பிகை பொற்கொடி அம்மை, சுவர்ணவல்லி அம்பிகை என்ற திருப்பெயர் களுடனும் அருள்புரிகின்றனர்.

தலவரலாறு:

ராமரின் மனைவியை ராவணன் தந்திரமாகக் கடத்திச் சென்றபோது, ஜடாயு என்ற கழுகுகளின் அரசன் ராவணனைத் தடுக்க

முயன்றார். ராவணன் தன் வாளால் ஜடாயுவின் இறகுகளை வெட்டி வீழ்த்தி மண்ணில் சாய்த்தான். ராமர் வரும் வரை தன் உயிரைத் தக்க வைத்துக்கொண்டிருந்த ஜடாயு, ராமர் வந்ததுமே அவரிடம் தகவல் சொல்லிவிட்டு, அவருடைய மடியிலேயே தன் உயிரை விட்டார். அவருக்கு இறுதிச் சடங்குகள் செய்தார் ராமர்.

மேலும், வனவாச காலத்தில் மறைந்துவிட்ட தன் தந்தை தசரதருக்கு சிராத்தம் கொடுக்க இந்தத் தலத்துக்கு வந்த ராமர், அரசலாற்றில் நீராடி சிவபூஜை செய்து, தசரதருக்கு பிண்டம் வைத்து சிராத்தம் செய்தார். அப்போது தனக்கு உதவி செய்வதற்காக போராடி உயிரை விட்ட ஜடாயுவுக்கு மரியாதை தரும் விதமாக, அவருக்கும் எள்ளும் நீரும் வைத்து தர்ப்பணம் கொடுத்தார். எனவே, சிவன் முக்தீஸ்வரர் என்றும், தலம் "திலதர்ப்பணபுரி' என்றும் பெயர் பெற்றது. 'திலம்' என்றால் 'எள்' என்று பொருள்.

இங்கு சிவன் சுயம்பு மூர்த்தியாக அருள்பாலிக்கிறார். மனித முக விநாயகர்: இத்தலத்தில் அருளும் சிவன், முன்னோர் களுக்கு முக்தி தருபவராக அருளுவதால் இவரை "முக்தீஸ்வரர்' என்றே அழைக்கிறார்கள்.

ராமர் திலம் (எள்) வைத்து தர்ப்பணம் செய்த தலம் என்பதால், "திலதர்ப்பணபுரி' என்று அழைக்கப்பட்ட ஊர், தற்போது சிதலைப்பதி என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் விநாயகர், மனித முகத்துடன் மேற்கு பார்த்து தனிச் சந்நிதியில் இருக்கிறார். இதனை கஜமுகா சுரனை வதம் செய்ததற்கு முன்புள்ள கோலம் என்கிறார்கள். ஆதி விநாயகர் என்று அழைக்கப் படும் இவருடைய சந்நிதியில் மட்டைத் தேங்காய் கட்டி வேண்டி க்கொண்டால் நியாயமான கோரிக்கைகள் நிறைவேறும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

சிறிய கோயில் - கிழக்கு நோக்கிய சந்நிதி.





உள்ளே சென்றால் கொடிமரம், நந்தி, உள் வாயிலைக் கடந்து முன் மண்டபம் அடைந்தால் நேரே மூலவர் தரிசனம். மூலவர் துவிதளவிமானத்தின் கீழ் வீற்றிருக்கிறார். வலப்பால் அம்பாள் சந்நிதி, பிராகாரத்தில் விநாயகர், ராம லட்சுமணர்கள் திருமேனிகள். அவர்கள் பிரதிஷ்டை செய்த சிவலிங்கங்கள், ஆறுமுகர், கஜலட்சுமி, நவகிரகம், பைரவர், நால்வர், சூரிய சந்திரர், தேவியருடன் பெருமாள் ஆகியோர் காட்சி தருகின்றனர். கோஷ்டத்தில் விநாயகர், தட்சிணாமூர்த்தி, மகாவிஷ்ணு, பிரம்மா, துர்கை உள்ளனர்.

இந்தக் கோயிலில் ராமர் தர்ப்பணம் செய்த போது மாதா, பிதா, குரு, தெய்வம் ஆகிய நால்வரையும் வணங்கி நான்கு பிண்டங்கள் பிடித்து வைத்து பூஜித்தார். இந்தப் பிண்டங்கள் லிங்கங்களாக மாறின. மூலஸ்தானத்திற்கு பின்புறத்தில் இந்த லிங்கங்களையும், தர்ப்பணம் செய்த ராமரையும் காணலாம். இவர் வலது காலை மண்டியிட்டு, வடக்கு நோக்கி திரும்பி வணங்கியபடி காட்சி தருகிறார். ராமரின் இத்தகைய தரிசனத்தை காண்பது அபூர்வம். கருவறை கோஷ்டத்தில் (சுற்றுச்சுவர்) லிங்கோத்பவர் இடத்தில், மகாவிஷ்ணு நின்ற கோலத்தில் இருக்கிறார். நவகிரக சந்நிதி அருகில் மற்றொரு பெருமாள் ஸ்ரீதேவி, பூதேவியுடன் வடக்கு நோக்கி அமர்ந்த கோலத்தில் இருக்கிறார். இவ்வாறு மகாவிஷ்ணுவின் மூன்று விதமான கோலங்களை இக்கோயிலில் தரிசிக்கலாம்.

முக்தீஸ்வரரை சூரியன், சந்திரன் இருவரும் ஒரே நேரத்தில் வணங்கியுள்ளனர். எனவே இவர்கள் இருவரும் அருகருகே இருக்கின்றனர். சூரியன், சந்திரன் இவ்விருவரும் சந்திக்கும் நாளே அமாவாசை. இங்கே தினமும் இருவரும் இணைந்திருப்பதால், இக்கோயிலில் தினமும் அமாவாசையாகும். இதனை 'நித்ய அமாவாசை' என்பர். இக்கோயிலில் முன்னோர்களுக்கு பிதுர் தர்ப்பணம் செய்ய அமாவாசை, திதி, நட்சத்திரம் பார்க்கத் தேவையில்லை. எந்த நாளில் வேண்டுமானாலும் சிராத்தம், தர்ப்பணம் செய்து கொள்ளலாம்.

பிரகாரத்தில் உள்ள துர்கை எட்டு கைகளுடன் இருக்கிறாள். இவள் இடது காலை பின்னோக்கி வைத்திருக்கிறாள். காலுக்கு கீழே மகிஷாசுரனும், பின்புறத்தில் சிம்ம வாகனமும் இருக்கிறது. நவகிரக சந்நிதியில், சூரிய பகவான் மட்டும் உயர்ந்த பீடத்தில் இருக்கிறார்.

இந்தக் கோயிலில் சுவர்ணவல்லி தாயார் காட்சி தருகிறார். சுவர்ணம் என்றால் 'தங்கம்' என்று பொருள். தங்கநகை தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள் இந்த அம்பிகையை வழிபட தங்கநகை வியாபாரத்தில் சிறப்பான முன்னேற்றம் உண்டாகும் என்பது ஐதிகம்.





ஆதிவிநாயகர்

உத்தரவாகினியாக அரசலாறு தவழ்வதால் இந்தத் தலம் காசிக்கு நிகராகப் போற்றப்படுகிறது. எனவே, என்றைக்கு வேண்டுமானாலும் இந்தத் தலத்துக்கு வந்து முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுக்கலாம். அதன் மூலம் பித்ருதோஷம் நீங்கி வாழ்க்கை வளம் பெறும். மகாளய பட்சம் வரும் புரட்டாசி மாதத்தில் இந்தக் கோயிலுக்கு வந்து பித்ருக்களுக்கு தர்ப்பணம் கொடுப்பது மிகவும் விசேஷம்!

● திருமேனி நாகராசன்

அண்ணல் காந்தியடிகள் ஒரு முறை லண்டனில் சிலநாள்கள் தங்கியிருந்தார். அப்பொழுது அம்மாநகரில் உள்ள இந்தியச் சங்கத்தினர் சார்பில் அண்ணலைச் சிறப்பிக்க விரும்பினார்கள். சங்கத் தலைவரும் சில உறுப்பினர்களும் அடிகளைச் சென்று பார்த்து அவரைத் தாங்கள் ஏற்பாடு செய்யும் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்றும், நிறைவில் தங்களோடு இரவு உணவில் பங்கேற்க வேண்டும் என்றும் அன்போடு கேட்டுக் கொண்டார்கள்.

காந்தியடிகளும் மகிழ்ச்சியுடன் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டார். உரிய நாளும் வந்தது. அண்ணல் அன்று மாலை 6.00 மணிக்குக் கூட்டத்திற்கு வருவதாக வாக்களித்திருந்தார். மணியோ 5.30 ஆகிவிட்டது. இன்னும் அரை மணிப்பொழுதில் அண்ணல் வந்துவிடுவார் என்பதால் சங்கத்தலைவர் ஏற்பாடுகள் ஒவ்வொன்றையும் சரிபார்த்துக் கொண்டே வந்தார். இறுதியாக சங்கத்தலைவர் சமையற் பணிகளைப் பார்வையிட வந்தார். வந்தவர் சமையல் செய்வோருடன் இணைந்து பணி செய்துகொண்டிருந்த காந்தியடிகளைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார். பரபரப்புடன் ஓடிச்சென்று அண்ணலின் கைகளைப் பற்றிக்கொண்டு, ''காந்திஜி, எப்போது வந்தீர்கள்? நீங்கள் இங்கே சமையற் கூடத்தில் வேலை செய்யலாமா?' என்று பயபக்தியுடன் கேட்டார்.



அண்ணல் சிரித்த முகத்துடன், "நான் மாலை 4.00 மணிக்கே வந்துவிட்டேன். நான் சைவ உணவுக்காரன். இவர்கள் சைவ உணவைச் செய்யச் சிரமப்படலாம் என்பதால் இவர்களுக்குச் சிறிது ஒத்தாசை செய்துகொண்டிருந்தேன் அவ்வளவே. இப்பொழுது மணி 5.45தானே ஆகிறது. சரியாக 6.00 மணிக்குக் கூட்டத்திற்கு வந்துவிடுகிறேன்'' என்று தம் பக்கத்தில் நின்றிருந்த சங்கத் தலைவரிடம் அண்ணல் அமைதியாகச் சொன்னார்.

அண்ணல் காந்தியடிகளின் எளிமையைப் பார்த்த சங்கத் தலைவர் மலைத்துப்போனார். அரசியல் உலகில் அண்ணலைப் போல எளிமையானவரை அகிலத்தில் பார்ப்பது அரிது அல்லவா? பெரியவர்கள் எப்பொழுதும் பணிவாகத்தான் நடந்து கொள்வார்கள் போலும்! அதனால்தான் அவர்கள் பெரியோர். வயலில் முதிர்ந்த நெற்கதிர் தலைசாய்த்துத்தானே படுத்துக்கிடக்கிறது?

அரசியலில் அண்ணல் காந்தியடிகளைப்போலத் தமிழ்நாட்டில் ஆன்மிக நிலையில் எளிமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் வடலூர் வள்ளலார் என்று உறுதிபடச் சொல்லிவிடலாம் உண்மைதான் 19-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அவர் எளிமைக்கு ஆகச் சிறந்த உதாரணம். வள்ளலார்க்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எளிமைக்கு முன் உதாரணமாக இருந்தவர் அப்பரடிகள் என்று அன்பர்களால் அழைக்கப்படும் திருநாவுக்கரசு சுவாமிகள்.

சம்பந்தரும் அப்பரும் 7-ம் நூற்றாண்டில்





அப்பரும் அண்ணலும்

வாழ்ந்த சமகாலத்தவர்கள். இவர்கள் ஒருவரோடு ஒருவர் அன்பு பாராட்டி இருந்ததைச் சிவனடியார்கள் அருட்கடலும் அன்புக்கடலும் ஒன்றியது என்றும், சிவபெருமான் அருளும் உமையவள் அருளும் இணைந்தது என்றும் போற்றியதாகச் சேக்கிழார் சிறப்பித்திருக்கிறார்.

ஒருசமயம் திருஞானசம்பந்தர் சோழநாட்டை நோக்கி வந்துகொண்டிருந்தார். வந்தவர் அப்பர் சுவாமிகளைச் சந்திக்க ஆவல் கொண்டார். அப்பொழுது அப்பர் திருப்பூந்துருத்தியில் இருப்பதைக் கேள்விப்பட்டு அவரைக் காண விருப்பத்துடன் அந்தத் தலத்திற்குப் புறப்பட்டார். சம்பந்தர் வருகையை அடியார் சிலர் நாவுக்கரசருக்குச் சொல்ல, அவரோ சம்பந்தரை நேரே கண்டு வணங்கவேண்டும் என்று எண்ணிச் சென்றார்.

அப்பரடிகள் அடியார் யாரும் தம்மை அடையாளம் காணாதபடி திருக்கூட்டத்துள் புகுந்து சம்பந்தர் காணாதபடி நிலத்தில் விழுந்து அவரை வணங்கிவிட்டு அவரது பல்லக்கைச் சுமந்து வந்த அடியாரோடு தாமும் ஓர் அடியவராய்ப் பல்லக்கைச் சுமந்து வருவாராயினார்.

பல்லக்குத் திருப்பூந்துருத்தியை அடைந்ததும் சம்பந்தர் அப்பரடிகளைக் காணும் ஆவலில் 'அப்பரே! எங்கு இருக்கிறீர்கள்?' என்று உரக்கக் கூப்பிட்டார். அப்பர், 'அடியேன் உங்கள் திருவடிகளைத் தாங்கும் பெருவழ்வு பெற்று இங்கே உள்ளேன்' என்று பல்லக்கு அடியிலிருந்து கூறினார்.

பல்லக்கின் கீழிருந்து நாவுக்கரசரின் குரலொலி வருவதைக் கேட்டதும் சம்பந்தர் பதைபதைத்து உடனே பல்லக்கை விட்டிறங்கி அப்பரை வணங்க விரைந்து வந்தார். அப்பரோ மீண்டும் சம்பந்தர் திருக்கரங்களைப் பற்றி அவரை வணங்கமுற்பட்டார்.

இந்தக் காட்சியைக் கண்ட சிவனடியார்கள் எல்லாம் உள்ளம் நெகிழ்ந்து, 'ஹர ஹர' என்று ஆரவார முழக்கம் செய்தார்கள். அப்பரடிகளின் எளிமையும் பணிவும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது அல்லவா? பெரியோர் தம்மிடம் பெருமைக்குரிய பண்புகள் நிறைந்திருந்த போதும் அவற்றை நினைத்து ஒருபோதும் அவர்கள் பெருமிதம் அடையமாட்டார்கள் என்பதுதான் நாம் பெறும் படிப்பினை ஆகும்.

பணியுமாம் என்றும் பெருமை (குறள்)

●

மன

ஒருவருக்கு உடல் ஆரோக்கியம் மட்டும் இருந்தால் போதாது. மனமும் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பது. உடல் ஆரோக்கியத்துக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம் மன ஆரோக்கியத்துக்கும் கொடுக்கப்பட வேண்டும். குழந்தைகள் முதல் அனைத்து பருவத்தினருக்கும் வயதினருக்கும் மனநலம் மிக மிக அவசியமாகும்.

மனநலம் காக்க சில குறிப்புகள்:

◆ முதலில் நீங்கள் உங்களை நேசிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். எப்போதெல்லாம் உங்கள் மனம் சோர்வு அடைகிறதோ அப்போதெல்லாம் கடந்த காலங்களில் உங்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி தந்த சம்பவங்கள், நீங்கள் பெற்ற வெற்றிகளை நினைத்துப் பார்க்கலாம். உங்களை உள்ளன்புடன் நேசிப்பவர்களையும் நினைத்துப் பார்க்கலாம். நம்மை நேசிப்பவர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணமே உங்கள் மனச் சோர்வைப் போக்கிவிடும். முக்கியமாக உங்களை மனரீதியாக பாதிக்கும் நபர்களின் தொடர்பை அவசியம் தவிர்த்துவிடுங்கள்.

◆ தினமும் தியானம் செய்வதால் மனதுக்கும், உடலுக்கும் பல நன்மைகள் கிடைக்கும். தியானம் செய்வது மனஅழுத்தத்தைப் போக்குவதோடு கவனத்தை ஒருங்கிணைத்தல், நல்ல மனநிலை, நினைவாற்றலை அதிகரித்தல் மற்றும் நல்ல தூக்கம் ஆகியவற்றை அளிக்கிறது. விடுமுறை எடுத்துக்கொண்டு பயணம் செய்வதால் கிடைக்கும் உற்சாகத்தை, தினமும் பத்து நிமிடங்கள் தியானம் செய்வதன் மூலம் எளிதாகப் பெற முடியும்.

◆ நீண்ட நடைப் பயணம், அருவியில் குளிப்பது என்று இயற்கையோடு ஒன்றிய செயல்களில் ஈடுபடுவது மனநலத்தை ஆரோக்கியமாக வைத்திருப்பதற்குப் பெரிதும்



உலக மனநல தினம் - அக்டோபர் -10

நலம்..!

உதவும். இயற்கையோடு ஒன்றி இருப்பது மனஅழுத்தம், பதற்றம் ஆகியவற்றைக் குறைத்து, உற்சாக மனநிலையை அளிப்பதுடன் நினைவாற்றலையும், படைப்புத் திறனையும் அதிகரிக்கச் செய்கிறது.



◆ உங்கள் லட்சியங்கள், அவற்றை அடைய மேற்கொள்ளவேண்டிய முயற்சிகள், செயல்பட வேண்டிய முறைகள் போன்றவற்றை முதலில் திட்டமிட்டுக் கொள்ளவேண்டும். பின்னர் அவற்றில் எவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும் என்று நன்றாக ஆராய்ந்து திட்டமிடும்போது உங்கள் ஆற்றல் மேம்படுவதுடன் நினைத்த லட்சியத்தை அடையவும் முடியும். திட்டமிடல் உங்கள் சிந்தனையைச் சீராக்குவதுடன் மனக் குழப்பங்களிலிருந்தும் உங்களை விடுவிக்கிறது.

◆ மேலே சொன்னவை அனைத்தையும் விட மிகவும் அத்தியாவசியமானது போதுமான ஆழ்ந்த உறக்கம். தூக்கமும் மனநலமும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. கனவுகளற்ற ஆழ்ந்த தூக்கம் நல்ல மனநிலை, நினைவாற்றல், அதிக உற்பத்தித் திறன், படைப்பாற்றல் திறன் ஆகியவற்றை அளிக்கும். 'ஒருவர் தினமும் எட்டு மணி நேரமாவது உறங்கவேண்டும். அதுவே உடல் நலத்துக்கும் மனநலத்துக்கும் நல்லது' என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். போதுமான தூக்கம் இல்லாதவர்களுக்கு பதற்றம், மனச்சோர்வு, உடல் பருமன் போன்ற பிரச்னைகள் ஏற்படும். குறைவான தூக்கம் உடலின் நோய் எதிர்ப்பு மண்டலத்தையும் வலுக்குன்றச் செய்யும். நன்றாகத் தூங்குவற்கு ஆரோக்கியமான உணவுப்பழக்கம், தினமும் முப்பது நிமிடங்கள் உடற்பயிற்சியும் அவசியம்.

நமது நிருபர்

ஓம் சக்தி

கலை, இலக்கிய, ஆன்மிக மாத இதழ்



சந்தாதாரர் ஆகுங்கள்!

ஊர் கூடி தேர் இழுப்போம் வாருங்கள், ஆன்மிகமும் தேசியமும் தம்முடைய இருவிழிகளாகக் கொண்ட அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள், ஆன்மிகத்துக்கு வள்ளலாரையும், தேசியத்துக்கு அண்ணல் காந்தியடிகளையும் வழிகாட்டியாகக் கொண்டவர். தமிழ்ச் சமூகத்தின்பால் ஆழ்ந்த அன்பும் பற்றும் கொண்டிருந்தவர். அந்த வகையில், தமிழ்ச் சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள விஷயங்களைக் கொண்டு சேர்க்கவேண்டும் என்ற உயரிய நோக்கில் அருட்செல்வர் அவர்களால் கடந்த 1983-ம் வருடம் தை மாதம் ஆன்மிகம், கலை, இலக்கிய மாத இதழாகத் தொடங்கப்பட்டதுதான் உங்கள் 'ஓம் சக்தி' மாத இதழ்.

தரம் குறையாமலும், நம்முடைய கலாசாரம், பாரம்பர்யம் ஆகியவற்றின் தொன்மையை எடுத்துச் சொல்லும் வகையிலும் கடந்த 39 வருடங்களாகத் தொடர்ந்து ஓம் சக்தி மாத இதழ் வெளிவந்து கொண்டிருக்கிறது. அருட்செல்வர் எந்த லாபநோக்கமும் இல்லாமல் தொடங்கிய இந்த இதழை அவரைத் தொடர்ந்து சக்தி குழுமங்களின் தலைவர் ம.மாணிக்கம், இதழ் நடத்துவதில் உள்ள சிரமங்களைப் பொருட்படுத்தாமல் சிறப்பான முறையில் கொண்டு வருகிறார்.

கடந்த ஏப்ரல் இதழில் இருந்து 'ஓம் சக்தி' இதழ், ஆன்மிகம், தேசபக்தி, மருத்துவம், சாதனைப் பெண்கள் என்று மிகத் தரமாக வெளிவருவதாகப் பல தரப்பில் இருந்தும் வெளிப்படும் பாராட்டுகள் எங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கவே செய்கிறது. அதே நேரம், ஓர் இதழை லாப நோக்கம் இல்லாமல் நடத்துவது என்பது ஊர் கூடி தேர் இழுப்பதைப் போன்றதுதான். அந்த வகையில் நாங்கள் வாசகர்களின் பேராதரவை எதிர்பார்க்கிறோம். மதிப்புக்கு உரிய சந்தாதாரராக ஓம் சக்தி இதழுடன் இணைந்து பயணிக்க அன்புடன் அழைக்கிறோம்.

சந்தா விவரம்	
1 வருடம்	ரூ.180/-
3 வருடம்	ரூ.500/-
5 வருடம்	ரூ.800/-
ஆயுள் சந்தா (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)	ரூ.2,500/-

சந்தா தொடர்பான விவரங்களுக்கு : 0422 - 4322471

சந்தா விவரம்

☐ 1 வருடம் - ரூ.180/- ☐ 3 வருடம் - ரூ.500/- ☐ 5 வருடம் - ரூ.800/- ☐ ஆயுள் சந்தா- ரூ.2,500/- (14 வருடம்) (சிறப்பிதழ்கள் உட்பட)

வாசக அன்பர்கள் இந்த சந்தா ஃபாரத்தை பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை M.O/Cheque/D.Dயாக 'SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI' என்ற பெயருக்கு எடுத்து ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

பெயர்:..

முகவரி:..

செல்பேசி:.................... மின்னஞ்சல்:....................

சந்தா விவரம்:..

● நிவேதிதா ● ஓவியம்: ஸ்யாம்

சவால்களை எதிர் கொண்டு வெற்றி கண்ட வீரமங்கை

மேஜர் மதுமிதா



“இந்தியா மிகவும் மகத்தான தேசம். நான் இந்தியனாக இருப்பதில் பெருமை கொள்கிறேன். வீரர்களாகிய நாங்கள் எங்கள் கடமைகளை எங்களால் முடிந்த அளவுக்கு மிகச் சிறப்பாகச் செய்வோம். தேசத்தைப் பாதுகாப்பதற்கு நாங்கள் எப்போதும் இங்கே இருக்கிறோம். ஆகையால் நீங்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழலாம்”

இந்திய ராணுவத்தின் அதிகாரியான மேஜர் மிடாலி மதுமிதா கூறிய வார்த்தைகள் இவை. அவருடைய வாழ்க்கை சவால்களால் நிரம்பியது. அத்தனை சவால்களையும் எதிர்கொண்டு வெற்றி கண்டவர்; இன்றைக்கும் களத்தில் நிற்பவர்.

ஒடிசா மாநிலத்தில் கல்வியாளர்கள் நிரம்பிய குடும்பத்தில் பிறந்தவர் மதுமிதா. ரூர்கேலாவில் உள்ள மவுண்ட் கர்மல் கான்வென்ட் பள்ளியில் தொடக்கக் கல்வியை முடித்தவர், தொடர்ந்து உயர் கல்வியை எஸ்.ஜி.மகளிர் கல்லூரியிலும் முடித்தார். பின்னர் பிஜெபி கல்லூரியில் ஆங்கிலத்தில் இளங்கலைப் பட்டமும், ராவெண் ஷா கல்லூரியில் முதுகலை பட்டமும் பெற்றார். தாய்மொழி ஒரியா தவிர, ஆங்கிலம், இந்தி, தாரி, ஸ்பானிஷ் ஆகிய மொழிகளிலும் தேர்ச்சிப் பெற்றார். இவருடைய தாயார் ஆசிரியையாகப் பணியாற்றியவர். தன்னுடைய மகள் மதுமிதாவும் தன்னைப் போலவே ஓர் ஆசிரியையாகப் பணியாற்றவேண்டும் என்று விரும்பினார்.

ஆனால், மதுமிதாவுக்கோ ராணுவத்தில் சேர்ந்து நாட்டுக்குச் சேவை செய்யவேண்டும் என்பதில்தான் ஆர்வம் இருந்தது. தாயாரும் அவருடைய ஆர்வத்துக்குக் குறுக்கே நிற்கவில்லை. மகள் ராணுவத்தில் சேர்ந்து சேவை செய்ய அனுமதித்தார். இதில் வியப்புக்கு உரிய விஷயம், மதுமிதாவின் தாய் விரும்பியதைப் போலவே ராணுவத்தின் கல்விப் பிரிவில் ஓர் ஆசிரியையாக லெப்டினென்ட் கர்னல் என்ற பதவியில் குறுகிய கால நியமனமாக நியமிக்கப்பட்டார். குறுகிய கால நியமனம் என்பது ஐந்து முதல் பதினைந்து வருடங்களுக்கானது. மதுமிதாவுக்கோ தான் ராணுவத்தில் நீண்டகாலம் சேவை செய்ய வேண்டும் என்பதில் மிகுந்த விருப்பம். அப்போதைக்கு தனக்குக் கொடுக்கப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.



இவர் ஐக்கிய நாடுகளின் சார்பாக ஆப்கானிஸ்தான் காபூலில் ராணுவ வீரர்களுக்கு ஆங்கில மொழியில் பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

2010-ம் வருடம் பிப்ரவரி மாதம் 26-ம் தேதி அதிகாலைப் பொழுது காபூல் நகரத்து மக்களுக்கு வெடி குண்டுகளின் முழக்கத்துடனும், துப்பாக்கி குண்டுகளின் சப்தத்துடனும்தான் விடிந்தது. வெடிகுண்டுகளின் முழக்கம் கேட்டதுமே மதுமிதாவின் மனதில், அப்போது காபூலில் தன்னுடன் இருந்த சக வீரர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம்தான் முதலில் தோன்றியது. அவர்களைத் தொடர்பு கொண்டபோது எந்த பதிலும் கிடைக்கவில்லை. மற்றவர்களிடம் விசாரித்தபோது, காபூலில் உள்ள இந்தியத் தூதரகத்தின் மீது தற்கொலைப் படை யினர் தாக்குதல் நடத்திய விவரம் தெரிய வந்தது.

தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பிறகு வாகன நடமாட்டம் எதுவும் இல்லாத நேரத்திலும் மதுமிதா, தோட்டாக்கள் சீறிப் பாய்வதையும், கையெறி குண்டுகள் வெடிப்பதையும் சற்றும் பொருட்படுத்தாமல் அந்த இடத்துக்கு விரைந்து சென்றார். தான் பெற்ற பயிற்சிகளின் துணை கொண்டு நிராயுதபாணியாக இருந்த மக்களைக் காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டு இடிபாடுகளுக்குள் சிக்கிய ஏழு இந்தியர்கள் உள்பட பத்தொன்பது உயிர்களைக் காப்பாற்றியதுடன், அவர்களுக்கு மருத்துவ உதவி கிடைக்க அந்தப் பகுதி மக்களின் உதவிகளையும் நாடிப் பெற்றார். அவருடைய இந்தத் துணிச்சலான செயலை கௌரவிக்கும் வகையில் அவருக்கு ராணுவத்தின் விருதுகளில் ஒன்றான 'சேனா மெடல்' என்ற விருது வழங்கப்பட்டது. இந்த விருதைப் பெறும் முதல் பெண்மணி மதுமிதாதான் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விருதைப் பெற்ற வேளையில்



தனக்கு இருந்த மனநிலையைப் பற்றிக் குறிப்பிடும்போது, ’இந்த விருது பெற்றபோது, தாக்குதலில் வீர மரணம் அடைந்த என் சக வீரர்கள் இருவரைப் பற்றிய எண்ணமே என் மனதில் தோன்றி எனக்கு வலியை ஏற்படுத்தியது’ என்று கூறியிருக்கிறார்.

காபூலில் மட்டுமல்லாமல் தீவிரவாதம் மிகுந்த ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட பல வடகிழக்குப் பகுதிகளிலும் மதுமிதா சிறப்பான முறையில் செயல்பட்டார். இப்படி பல சவால்களைச் சந்தித்து சாதனைகள் நிகழ்த்திய மதுமிதாவுக்கு மற்றொரு சவாலும் எதிர்ப்பட்டது. அவர் குறுகிய காலப் பணியில் நியமிக்கப்பட்டிருந்ததால், பதினைந்து வருடங்களுக்குப் பிறகு 2016-ம் வருடம் அவர் ஓய்வு பெற நிர்ப்பந்திக்கப்பட்டார்.

’ஆணுக்குப் பெண் இங்கு நிகர்’ என்பதில் உறுதியான எண்ணம் கொண்டிருந்த மதுமிதா, ஒரு பெண் என்பதற்காக தன்னைப் பணியிலிருந்து ஓய்வு பெறும்படிச் சொல்வதைத் தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும், தான் இன்னும் தன் தேசத்துக்கு சேவை செய்ய விரும்புவதாகவும் தெரிவித்தார். அதற்கான கடிதத்தையும் பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அனுப்பினார். பாதுகாப்பு அமைச்சகம் அதை ஏற்றுக்கொள்ள மறுத்தது. தொடர்ந்து ராணுவத் தீர்ப்பாயத்தில் முறையிட்டார். தீர்ப்பாயம் அவரை நிரந்தரப் பணியில் நியமிக்கும்படி உத்தரவு பிறப்பித்தது. ஆனால், பாதுகாப்பு அமைச்சகம், அந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்து, தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு இடைக்காலத் தடையைப் பெற்றது.



இதற்கிடையில் தில்லி உயர்நீதி மன்றமும், ’ஆண்களுக்கு நிகராக பெண் களும் பணியாற்ற வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்’ என்று உத்தரவு பிறப்பித் திருந்தது. இந்த உத்தரவை எதிர்த்தும் பாதுகாப்புத் துறை உச்சநீதிமன்றத்தில் முறையீடு செய்தது. மதுமிதாவும் சோர்ந்து போகாமல் உச்சநீதிமன்றத்தின் உதவியை நாடினார்.

தேசத்துக்கு சேவை செய்யவேண்டும் என்பதில் மதுமிதாவுக்கு இருந்த ஆர்வம், துடிப்பு, அவருடைய துணிச்சலான பணிகள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்துக்கொண்ட உச்சநீதிமன்றம், மதுமிதாவை தொடர்ந்து ஓய்வுக் காலம் வரை சேவை செய்ய அனுமதிக்கும்படி உத்தரவு பிறப்பித்தது. லெப்டினென்ட் கர்னலாகப் பணியில் சேர்ந்த மதுமிதா மேஜராக உயர்ந்து நிற்கிறார். ●

தாய் மடி

தங்கமகன்

தாயின் அன்புக்கு மேலொரு அன்பு
தரணியில் இருந்ததில்லை - நாம்
தவறொன்று செய்தாலும் தண்டனை தந்திட
தாய் மனம் விடுவதில்லை
சின்னஞ்சிறு காய்ச்சல் சீண்டிப் பார்த்தாலே
சிந்தை வருந்திடுவாள்
தன் மகவின் பசியைத் தணிக்கின்ற வரையிலும்
தன் பசி மறந்திடுவாள்

பரிமாறும்போது மட்டும் பண்டமுடன் சேர்த்து புனித
பொய்யையும் பரிமாறுவாள்
ஆறாமல் அவள் இடும் ஆறாவது தோசையை
ஐந்தென்றே வாதாடுவாள்
பேர் சொல்லும்படியாக பிள்ளை செயல் புரிந்தால் அவள்
பெருமைக்கு வாய் ஆயிரம்
பிறப்பெடுத்த பேற்றைப் பெற்றுவிட்டதாய் அவள்
பிரமிப்பில் ஆரோகணம்

உயிர் தந்த தாயை ஒருநாளும் நினையாமல்
உலகம் சுழல்வதில்லை
ஒப்பிட முடியாத உன்னத தெய்வம்
ஒருபோதும் மறைவதில்லை - நம்
உயிர் போன பின்னாலும் அன்னைதான்
அடைக்கலம் அதிலோர் மாற்றமில்லை
மானுடம் மட்டுமல்ல மற்ற உயிரினத்துக்கும்
தாய்மையே உச்சமாகும்
மறுபிறவியிலும் கூட மறக்குமா மறக்குமா தாய்
மடிதானே சொர்க்கமாகும்





ரசித்து ருசிப்போம்

குதிரைவாலி கிச்சடி

தேவையான பொருள்கள்:

குதிரைவாலி அரிசி - இரண்டு கப்

காய்கறிக் கலவை (கேரட், பட்டாணி, உருளைக்கிழங்கு, பீன்ஸ்) - இரண்டு கப்

வெங்காயம் - ஒன்று பொடியாக நறுக்கியது

தக்காளி - ஒன்று பொடியாக நறுக்கியது

பச்சை மிளகாய் - 4 இரண்டாகக் கீறிக்கொள்ளவும்

இஞ்சி - பூண்டு விழுது - ஒரு டீஸ்பூன்

நெய் - ஒரு டீஸ்பூன்

உப்பு - தேவையான அளவு

தாளிக்க:

பட்டை, லவங்கம் - 2

பிரியாணி இலை - 2

ரோஜா மொக்கு - 2

எண்ணெய் - தேவையான அளவு

செய்முறை: குதிரைவாலி அரிசியை நன்றாகக் கழுவி, பத்து நிமிடங்கள் ஊறவைக்கவும். குக்கரில் எண்ணெய் விட்டுத் தாளிக்கக்கொடுத்துள்ள பொருள்களைத் தாளித்து, பச்சை மிளகாய், வெங்காயம், இஞ்சி - பூண்டு விழுது சேர்த்து பச்சை வாசனை போகும் வரை வதக்கவும். பிறகு அத்துடன் தக்காளி, காய்கறிகள், உப்பு சேர்த்து வதக்கவும். நன்றாக வதங்கியதும் அத்துடன் அரிசி, 2 கப் தண்ணீர் ஊற்றி, குக்கரை மூடி ஒரு விசில்விட்டு இறக்கவும். குக்கரில் ஆவி அடங்கிய பிறகு மூடியைத் திறந்து சிறிது நெய் விட்டுக் கிளறினால் சூடான சுவையான குதிரைவாலி கிச்சடி தயார். தேங்காய் சட்னியுடன் பரிமாறலாம்.

குதிரைவாலியின் மருத்துவப் பயன்கள்: குதிரைவாலியை தினமும் சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் கட்டுக்குள் இருக்கும். செரிமான பிரச்னைகள், ரத்தசோகை நோய் உள்ளிட்டவற்றை குணப்படுத்துகிறது. இது சிறுநீரை அதிகமாகப் பெருக்கும் சக்தி கொண்டது. இதனால் உடலில் உள்ள தேவையற்ற உப்புகள் கரையும்.

குதிரைவாலியில் அடங்கியுள்ள சத்துகள்: நார்ச் சத்து, மாவுச் சத்து, கொழுப்புச் சத்து, பாஸ்பரஸ், இரும்புச்சத்து, வைட்டமின்கள் ஏ, பி, சி, டி, கே ஆகியவை உள்ளன. 100 கிராம் குதிரைவாலியில் புரதச் சத்து 6.2 கி, கொழுப்புச் சத்து 2.2 கி, தாது உப்புகள் 4.4 கி, நார்ச்சத்து 9.8 கி, மாவுச்சத்து 65.5 கி, கால்சியம் 11 மி.கி, பாஸ்பரஸ் 280 மி.கி அடங்கியுள்ளது.



உங்கள் மனம் மகிழும்
வாகனத்தைத் தேர்ந்தெடுப்பீர்
FORCE MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES Derived Engine மற்றும் Gear Box
FORCE GURKHA E.O.V. 4.4.4
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின் செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை-18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

● எஸ்.கண்ணன்கோபாலன் ● படங்கள்: மதன் சுந்தர்



இந்திரனின் பாவம் தீர்த்த தலம்!

பொம்மக்கா திம்மக்கா சகோதரிகளைத் திருமணம் செய்துகொண்ட பட்டவராயரின் மகிழ்ச்சியான இல்லற வாழ்க்கை சிறிது காலத்துக்கே நீடித்தது. ஒருநாள் பட்டவராயர் மந்தையில் அடைத்து வைத்திருந்த மாடுகளைக் கவர்ந்து செல்ல நூற்றுக்கும் மேற்பட்ட திருடர்கள் காட்டுக்குள் வந்தனர். அதற்குச் சற்று நேரத்துக்கு முன்புதான் மந்தைக் காவலை முடித்துக்கொண்டு, இரண்டு வளர்ப்பு நாய்களை காவலுக்கு விட்டுவிட்டு வீட்டுக்குச் சென்றிருந்தார் பட்டவராயர். மனைவிமார்களிடம் சற்று நேரம் மகிழ்ச்சியாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு, வீட்டு வாசலில் படுத்தார் பட்டவராயர். உறக்கம் கண்களைத் தழுவிய வேளையில் இரவின் நிசப்தத்தைக் கலைப்பது போல் 'ம்மா... ம்மா' என்ற மாடுகளின் தொடர் கதறலும், நாய்களின் குரைப்பொலியும் கேட்டது.

மந்தையைக் கவர்ந்து செல்ல திருடர்கள் வந்துவிட்டார்கள் என்பது பட்டவராயருக்குத் தெரிந்து விட்டது. தன்னுடைய வீச்சரிவாளையும் பட்டாக்கத்தியையும் எடுத்துக்கொண்டு மந்தைக்கு விரைந்து சென்றார். அங்கே நூற்றுக்கும் மேற்பட்ட திருடர்கள் பயங்கர ஆயுதங்களுடன் இருப்பதைப் பார்த்தார். தான் ஒருவராகவே திருடர்கள் அனைவரையும் விரட்டியடித்தார். ஆனால், திருடர்களை வெட்டியதால் ரத்தம் தோய்ந்திருந்த வீச்சரிவாளையும், பட்டாக்கத்தியையும் ஆற்றுநீரில் கழுவிக்கொண்டிருந்த போது,

பொருநைக் கரையில் புனித 5 ஆலயங்கள்!



திருடர்களில் ஒருவன் பின்பக்கமாக வந்து பட்டவராயரின் முதுகில் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டான். சென்ற கணவர் திரும்பாததால் சகோதரிகள் இருவரும் மந்தைப் பக்கம் வந்தனர். அங்கே தங்கள் கணவர் பட்டவராயர் கொலையுண்டு கிடப்பதைக் கண்டு தங்களையும் மாய்த்துக் கொண்டனர்.

அன்றிலிருந்து பட்டவராயரும் பொம்மக்கா சகோதரிகளும் அந்தப் பகுதி மக்களால் காவல் தெய்வமாக வழிபடப்பெற்று வருகின்றனர்.

பாபநாசம் சொரிமுத்து ஐயனார் ஆலயத்தை விட்டுக் கிளம்பி வரும்போது விக்கிரமசிங்கபுரம் என்ற ஊர் எதிர்ப்பட்டது. இந்த ஊரில்தான் திருக்குறளுக்கு நாலடி வெண்பா எழுதிய சிவஞான சுவாமிகள் பிறந்தார். அதேபோல் உலகம்மையின் திருவருள் பெற்ற நமசிவாய கவிராயர் பிறந்த ஊரும் இந்த ஊர்தான். பாபநாசத்தில் கோயில் கொண்டிருக்கும் அன்னை உலகம்மையால் பசியாற்றப்பட்ட நரசிம்ம கவிராயரின் பெருமைகளை உலகறியச் செய்தாள் அன்னை உலகம்மை. அன்னையின் அந்த அருளாடலைத் தெரிந்துகொள்வதற்கு முன்பு உலகம்மை ஆலயம் கொண்டிருக்கும் பாபநாசம் அருள்மிகு பாபநாசர் ஆலயத்தை தரிசித்து விடலாம்.

தலவரலாறு

திருக்கயிலையில் பார்வதி திருக்கல்யாணம் நடைபெற்ற வேளையில் தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள் அனைவரும் வடதிசைக்கு வந்துவிட்டதால் வடதிசை தாழ்ந்து தென்திசை உயர்ந்தது.

பூமியை சமப்படுத்துவதற்காக, அகத்தியரை பொதிகை மலைக்கு அனுப்பினார் சிவன். சிவபெருமானின் திருமணக் கோலம் தரிசிக்காமல் எப்படிச் செல்வது என்று தயங்கிய அகத்தியரிடம், அவர் விரும்பும் இடத்தில் அவருக்குத் தம்முடைய திருமணக் கோலத்தை காட்டி அருள்வோம் என்று சிவபெருமான் உறுதி கூறினார். அதன்படி ஒரு சித்திரை மாதப்பிறப்பன்று அவருக்கு சிவபெருமான் தனது திருமணக் கோலத்தை காட்டியருளினார். கருவறைக்குப் பின்புறம் பிராகாரத்தில் கல்யாண சுந்தரராக அம்பாளுடன் ரிஷபத்தின் மீது அமர்ந்த கோலத்தில் சிவன் இருக்கிறார். அருகிலேயே அகத்தியரும் அவர் மனைவி, லோபாமுத்திரையும் வணங்கிய கோலத்தில் உள்ளனர்.

அசுர குருவான சுக்ராசாரியாரின் மகன் துவஷ்டா என்பவனை குருவாக ஏற்றான் இந்திரன். ஒரு சமயம் துவஷ்டா அசுரர்களின் நலனுக்காக யாகம் ஒன்றை நடத்தினார். இதனை அறிந்த இந்திரன் துவஷ்டாவைக் கொன்று விட்டான். இதனால் அவனை பிரம்மஹத்தி தோஷம் பீடித்தது.

பூலோகத்தில் பல தலங்களுக்கும் சென்று சிவனை வழிபட்டு விமோசனம் தேடினான். வியாழ பகவான் இந்திரனிடம், தாமிரபரணிக் கரையில் அமைந்திருக்கும் பாபநாசம் தலத்தில் உள்ள சுவாமியை வணங்கினால் தோஷம் நீங்கும் என்றார். அதன்படி இந்திரன் இந்தத் தலத்தின் எல்லைக்கு வந்தபோதே பாவம் நீங்கப்பெற்றான். இந்திரனின் பாவத்தை நீக்கிய சிவன் என்பதால் இவரை பாபநாசநாதர் என்கின்றனர்.

சூரியனுக்கு உரிய க்ஷேத்திரம்

அகத்தியரின் சீடரான ரோமச முனிவர் தாமிரபரணி நதிக்கரையில் பல இடங்களில் லிங்க பிரதிஷ்டை செய்யவும், அதற்கான இடங்களை தேர்ந்தெடுத்து தருமாறும் குருவிடம் கேட்டார். சிவனுக்கு பூஜை செய்த தாமரைமலர்களை தாமிரபரணியில் விடும்படியும், அவை எங்கெல்லாம் கரை ஒதுங்குகிறதோ அங்கெல்லாம் லிங்க பிரதிஷ்டை செய்யும்படியும் அகத்தியர் கூறினார். அதன்படி ரோமசர் தாமரை மலர்களை நீரில் விட, ஒன்பது பூக்கள் ஒன்பது இடங்களில் கரை ஒதுங்கின. அந்த இடங்களில் எல்லாம் சிவலிங்க பிரதிஷ்டை செய்தார் ரோமசர். இவை நவ கயிலாய தலங்கள் எனப்பட்டன. நவகிரகங்கள் ஒன்பது என்பதால் ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒவ்வோர் இடம் ஒதுக்கப்பட்டது. நவ கயிலாயங்களில் முதல் தலமான பாபநாசம் முதல் கிரகமான சூரியனுக்கு உரியதானது. சூரிய தலம் என்றும் சூரிய கயிலாயம் என்றும் போற்றப்படுகிறது!

இந்தத் தலத்து லிங்கத்திற்கு முக்கிளா லிங்கம் என்ற பெயரும் உண்டு. இறைவனுக்கு இந்தப் பெயர் ஏற்பட என்ன காரணம்?

-அடுத்த இதழில்

மெய்ப்பொருள் அறிதல் வேண்டும்!



நம்முடைய ஞானபூமியில் அவதரித்த மகான்களின் வாழ்க்கையில், அவர்களுக்கே விளங்காத பல லீலைகளை நிகழ்த்தி, அதன் மூலம் இறைவன் நமக்குச் சில உண்மைகளை உணர்த்துகிறார். கடவுளின் தேசம் என்ற பெருமைக்கு உரிய கேரளத்தில் பில்வமங்கள் சுவாமி என்ற ஞானி ஒருவர் இருந்தார். அவர் மிகச் சிறந்த கிருஷ்ண பக்தர். பகவான் கிருஷ்ணரிடம் நேரில் பேசும் பேறு பெற்றவர்.

ஒருநாள் அவரிடம் ஒரு பக்தர் வந்து, தனக்குக் கடுமையான வயிற்றுவலி இருப்பதாகவும், பகவானிடம் உரிய மருந்தைக் கேட்டுச் சொல்லும்படியும் கேட்டுக்கொண்டார். பில்வமங்கள சுவாமியும் அப்படியே கிருஷ்ணரிடம் கேட்க, 'மாறி மாறி உருளுவது நின்றால் வயிற்றுவலி சரியாகிவிடும்' என்று கூற, அதை அப்படியே பக்தருக்குத் தெரிவித்தார். இதன் பொருள் பில்வ மங்கள சுவாமிக்கு விளங்கவில்லை.

அந்த பக்தர் தனக்கு வயிற்றுவலி வரும்போது மாறி மாறி உருளுவது வழக்கம். எனவே அதைத் தான் பகவான் நிறுத்தச்சொல்கிறார் என்று நினைத்துக் கொண்டார். மறுமுறை வயிற்றுவலி வந்தபோது அப்படியே அசையாமல் இருந்தார். ஆனாலும், வயிற்றுவலி நிற்கவில்லை. மறுபடியும் பில்வமங்கள சுவாமிகளிடம் சென்றார். அவருக்கும் காரணம் புரியவில்லை. எனவே காசிக்குச் சென்று வரும்படிக் கூறினார். அந்த பக்தரும் காசிக்குச் செல்லும் வழியில் கிருஷ்ண பக்தையான ஒரு கிழவியைச் சந்தித்தார். அவருடைய வேதனையைக் கேட்ட அந்தக் கிழவி, "ஒருமுறை 'கோபி ஜனவல்லபாய நம:' என்று கூறினால் வயிற்றுவலி சரியாகிவிடும்" என்று கூறினார். பக்தரும் அப்படியே செய்ய அவருடைய வயிற்றுவலி குணமாகியது.

திரும்பி வந்து நடந்ததை பில்வமங்கள சுவாமியிடம் கூறினார். பில்வமங்களர் இறைவனிடம் சென்று அவர் கூறிய வார்த்தைகளின் பொருளை விளக்கும்படிக் கேட்டுக்கொண்டார். அதற்கு பகவான் கிருஷ்ணர், "இது உனக்குப் புரியவில்லையா, எப்போது எத்தகைய சோதனை வந்தாலும் நீ என்னை நினைத்துக் கொள்ளவேண்டும். அப்போது வேறு எந்த சிந்தனையிலும் உன் மனம் உருளக்கூடாது. அப்போது நான் நிச்சயமாக உதவிக்கு வருவேன்" என்றார்.

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான் அன்பு செயல் வேண்டும்.

– வள்ளலார்

மலர்:39 | அக்டோபர் 2021 | இதழ்:9

நிறுவனர்: **நா.மகாலிங்கம்**
ஆசிரியர் – வெளியிடுபவர்: **ம.மாணிக்கம்**
Editor & Publisher : **M.MANICKAM**

அச்சிடுபவர்: **த.ராஜ்குமார்**
Printer : **T.RAJKUMAR, Rukmani Offset Press**
ருக்மணி ஆப்செட் பிரஸ், 32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், கோவை – 641 021.

பொறுப்பாசிரியர்: **எஸ்.கண்ணன்கோபாலன்**

நிருபர்: **இரா.பொன்னாண்டான்**
தலைமை வடிவமைப்பு: **கே.எம்.பிரசன்னா**
வடிவமைப்பு: **எஸ்.காமராஜ்**
அலுவலக நிர்வாகம்: **ஆர்.குமாரசாமி**

தனிப் பிரதி ரூ.15/–
ஆண்டு சந்தா ரூ.180/–
ஆயுள் சந்தா ரூ.2500/–
(14 ஆண்டுகள் சிறப்பிதழ் உட்பட)

சந்தா தொகையை **"SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI"** என்ற பெயரில் டி.டி.யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி: **ஆசிரியர், ஓம் சக்தி, சக்தி சுகர்ஸ் லிமிடெட், 180, ரேஸ்கோர்ஸ் ரோடு, கோயம்புத்தூர் – 641 018,**
போன்; **0422 4322471, 0422 4322222**
வெளியிட்டோர்; **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com

வாசகர் கடிதங்கள்

மகிழ்ச்சியில் திளைக்கிறது

குடும்பப் பெண்களின் தேக ஆரோக்கியத்தின் அவசியம் குறித்த கட்டுரை வெளியிட்ட ஓம்சக்திக்குப் பாராட்டுகள்! அதவும் தேசிய மகளிர் உடல் ஆரோக்கிய தினம் வரும் செப்டம்பர் இதழில் வெவியிட்டதற்கு மேலும் ஒரு சபாஷ்!

– உஷாமுத்துராமன், திருநகர்.

ஓம்சக்தி பல்வேறு நல்ல செய்திகளைத் தாங்கி வருவது என்னைப் போன்ற ஆன்மிகவாதிகளுக்குப் பயனுள்ளதாக இருக்கிறது. வாழ்த்துகள்!

– மு.அனந்தராஜன், திருவாரூர்.

வெற்றிக்கு அதிபதி கணபதியைத் தாங்கி வெளிவந்திருக்கிற அட்டைப்படமே அசத்தலாக இருக்கிறது.

– மகேந்திரன், ஆலாந்துரை.

டாக்டர் அருள் அவர்கள் ஒருங்கிணைந்த மருத்துவச் சிகிச்சையளித்து வருவது பாராட்டுக்கு உரியது. அவருக்கு உந்திசக்தியாக இருக்கும் திரு. மாணிக்கம் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்!

– தீனதயாளன், முத்தரசநல்லூர்.

பொம்மைகளின் வர்ணங்கள் மங்காமல் பாதுகாக்கும் வழிமுறைகளைப் பற்றிய பயனுள்ள தகவல்களை வழங்கிய திரு. சங்கரலிங்கத்துக்கு வாழ்த்துகள்! நேர்காணல் அருமை.

– ருக்மணி முரளி, கோவை.

பொம்மக்கா திம்மக்கா எனும் தொடர் கட்டுரை ஆவலோடு எதிர்பார்த்தேன். மிஞ்சியது ஏமாற்றம்தான். அக்டோபர் இதழுக்கும் காத்திருக்கிறேன். வருமா...?

– கவிஞர் சக்திக்கனல், ஈரோடு.

ஆதித் தமிழர்கள் உயர்ந்த பண்பாட்டுக்கும், நாகரிகத்துக்கும் சொந்தக்காரர்கள் என நினைக்கும்போது உலக அளவில் தமிழர்களுக்குப் பெருமைச் சேர்க்கிறது. அருட்செல்வர் வழங்கிய கட்டுரையைப் படிக்கும்போதே மனம் மகிழ்ச்சியில் திளைக்கிறது.

– ந. நஞ்சப்பன், திருநெல்வேலி.

முன்னைப் பழைமைக்குப் பழைமையாயும் பின்னைப் புதுமைக்குப் புதுமையாயும் வெளிவரும் ஓம் சக்திக்குப் பாராட்டுகள்!

– திருமேனி நாகராஜன், காரைக்கால்.



தாய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Sakthi
MILK
Pasteurised, Homogenised Standardised Milk
SUPREME
Sakthi
MILK
SELECT
Pasteurised Toned Milk
500ml
Sakthi
MILK
SPECIAL
250
Pasteurised, Homogenised, Standardised Milk
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

இரா.பொன்னாண்டான்



ஐம்புலன் ஒன்றி அன்னையைப் போற்றுவோம்

பாற்கடல் விடமுண்ட
பரமனுக்கு ஒரு ராத்திரி சிவராத்திரி
போர்க்களம் கண்ட
புவனேஸ்வரிக்கு ஒன்பது ராத்திரி
நவராத்திரி..

ஆராலும் அழிக்க முடியாத
அசுரனாம் மகிஷனை -ஒரு
போரால் அழித்து
புவனம் காத்தவள் தேவி.
அவளைப் போற்றுவோம்
மலர்கள் தூவி.


திரும்பிய இடமெல்லாம்
திரிபுரை சுந்தரியாய் நின்று
உறுமிய அசுரர் கூட்டத்தை
உதிரக்கடலில் தள்ளினாள் அன்னை.
உம்பரும் இம்பரும் மகிழ்ந்து
இசைத்தனர் பண்ணை.

அம்மையாகிய அன்னை
சிம்ம வாகினியாய் வந்து
சினந்தாள்.
சூலம் ஏந்தியே
ஆதிசக்தியாய் எழுந்தாள்.
அசுரன் மார்பைப் பிளந்தாள்.

நம்பி கை தொழுத தேவரைக் காக்க
அம்பிகை வந்தாள்.
அழிந்தான் மகிஷன் எனும்
அசுர விஷமி.
அதுதான் விஜய தசமி.

முதல் மூன்று நாள்கள் இச்சா சக்தியாம்
துர்கையாய் வருவாள்
துன்பங்கள் யாவும் களைவாள்.
நடு மூன்று நாள்கள் கிரியா சக்தியாம்
லட்சுமியாய் வருவாள்
நலம்அனைத்தும் தருவாள்.
இறுதி மூன்று நாள்கள் ஞானசக்தியாம்
கலைமகளாய் வருவாள்
அழிவிலா அறிவினை அருள்வாள்.
ஐம்புலன் ஒன்றி
அன்னையைப் போற்றுவோம்.
ஓரறிவு உயிரினம் தொடங்கி
உயர்முனிவர் தெய்வம் வரை
ஒன்பது படி கொலு அமைத்து
ஓங்கார சக்தியை தொழுவோம்.

சக்தி மயமானதே ஜகம் என்றும்
மூவரின் மூலசக்தி அன்னையே என்று
தேவரும் யாவரும் அறிந்த நாள்..
தேவி வழிபாட்டிற்கு உகந்தநாள்..
அந்த
சக்தியை சரணாகதி யடைவோம்..



எங்கள் தங்க மகள்!

இறக்கை இல்லை என்றாலும்,
இரு கை கொண்டு
பறக்கத் தெரிந்த
பாரதத்தின் பட்டாம்பூச்சி நீ!

சிசுக்களை உருவாக்கும்
உயிர் இயந்திரமாய்,
வாழ்வதே சிக்கலாய்
இருந்து வந்த இந்தியாவில்
இன்று நீயும் வென்று வந்தாய்
இரு கை மட்டும் கொண்டு!

இரு நூற்றாண்டாய்
2800 க்கும் மேல்
பதக்கங்களை
தமதாக்கிக்
கொண்டனர்
அமெரிக்கர்கள்
இதுவரை!

இவ்வளவு நாட்கள்
கடந்து விட்ட சரித்திரத்தில்
சாகசமாய் 28 பதக்கம்
பெற்றதே சாதனைதானோ?

சினிமா, இணையம்,
அலைபேசி
என அழிந்து வரும்
எம் அடுத்த தலைமுறை
விழிக்குமா?

இல்லை இதுவும்
கடந்து போகும்
என அடுத்த வாரம்
வேறு விஷயம்
விவாதிக்குமா?

பொறுப்பில் உள்ளோரும்
அறிவார்ந்தோரும் சிந்தித்து,
உலக அரங்கில்
நம் பிள்ளைகளும்
பெற வேண்டும்
பதக்கங்கள்
எனப் பாதை சமைத்துத் தந்தாலே
பலப் பல கொண்டு வரும்
நம் பாரதப் படை.

அதன் முன்னத்தி ஏர்தான்,
நீ – பவீனா படேல்
‘வெள்ளி’ வென்ற
எங்கள் தங்க மகள்!

–வி.பாலா

பத்ம.கிருஷ்ணசாமி

திவ்யதேச

சங்கம திருத்தலம்!



சங்களின்



தர்மம் நலிவுற்று, அதர்மம் தலையெடுக்கும் காலங்களில் எல்லாம், அதர்மத்தை அழித்து தர்மத்தை நிலைநிறுத்த நான் அவதரித்துக் கொண்டே இருப்பேன்’ என்பது கீதாசார்யனின் வாக்கு. அப்படி பகவான் சத்தியயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் போன்ற யுகங்களில் பல அவதாரங்கள் எடுத்திருக்கிறார். ஆனால், இந்தக் கலியுகத்தில்தான் பகவான் ஸ்ரீமன் நாராயணன், உலகத்தவர்க்கு அருள்புரியும் பொருட்டு பல திருத்தலங்களில் அர்ச்சாமூர்த்தியாக எழுந்தருளி இருக்கிறார். அந்த வகையில் பகவான் நாராயணன் அர்ச்சாவதாரக் கோலத்தில் எழுந்தருளி இருக்கும் எண்ணற்ற திருத்தலங்களில், ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பட்ட திருத்தலங்கள் திவ்யதேசங்கள் என்று பிரசித்திப் பெற்று விளங்குகின்றன.

அத்தனை திவ்யதேசங்களையும் ஒரே தலத்தில் நம்மால் தரிசிக்க முடியுமா என்று கேட்டால், முடியும் என்று சொல்வது போல் அமைந்திருக்கும் திருக்கோயில்தான் செங்கல்பட்டுக்கு அருகிலுள்ள திருவடிசூலம் என்னும் தலத்தில் அமைந்திருக்கும் சப்த சைலஜ ஸ்ரீவாரு வேங்கடாசலபதி திருக்கோயில்.அன்னை ஆதிசக்தி, முன்னொரு யுகத்தில் கலியின் துன்பங்கள் தீர தன் திருவடி பதித்து திரிசூலம் ஊன்றிய திருவடிசூலம் திருத்தலத்தில், ஆதிபரமேஸ்வரி மகா ஆரண்ய க்ஷேத்திரத்தில், தேவி ஸ்ரீகுகயோகி மதுரைமுத்து சுவாமிகள் மூலம் கோயில் கொண்டாள். துவாபரயுகத்தில் தான் மாயா துர்கையாகத் தோன்றி கம்சனை அச்சுறுத்தியதற்கு பலனாக, இந்தக் கலியுகத்தில் தான் கொண்ட கோயிலுக்கு அருகில் பகவான் கிருஷ்ணரும் திவ்யதேச மூர்த்தங்களின் வடிவில் சந்நிதி கொள்ள வேண்டும் என்று

கேட்டுக்கொண்ட தாகவும் அதன்படி திருவடிசூலம் திருத்தலத்தில் மூலவராக வேங்கடவன் அருள்பாலிக்க, ஆலய பிராகாரத்தில் திருப்பாற்கடல், திருவைகுண்டம் ஆகிய திவ்யதேசங்களைத் தவிர்த்து நூற்றி ஆறு திவ்யதேசங்கள் அமைந்ததாகவும் தலவரலாறு.

சுற்றிலும் மரகதப் போர்வை போர்த்தியது போல் பசுமை போர்த்திய மலைகள் சூழ்ந்திருக்க, மிகவும் விசாலமான பரப்பளவில் அமைந்தி ருக்கிறது திருக்கோயில். ஆலய முகப்பில் பகவான் நாராயணனின் பத்து அவதாரங்களைச் சித்திரிக்கும் வகையில் மிக பிரமாண்டமான திருவுருவச் சிலையை தரிசிக்கலாம். மகாவிஷ்ணு, நரசிம்மர், வராகர், ஹயக்ரீவர் ஆகிய திருமுகங்களுடன், ஒவ்வொரு அவதாரத்துக்கும் உரிய ஆயுதங்களுடன் அதிஅற்புதமாகக் காட்சி அளிக்கிறார் தசாவதார மூர்த்தி.

உள்ளே இரு புறங்களிலும் பெரிய திருவடி என்று போற்றப்படும் கருடாழ்வாரும், சிறிய திருவடி என்று போற்றப்படும் ஆஞ்சநேயரும் சந்நிதி கொண்டிருக்கிறார்கள். மண்டபத்தின் மேற்புறத்தில் பல வண்ணச் சிற்பங்கள் அமைந்தி ருக்கின்றன. குழலிசைக்கும் கிருஷ்ணனுடன் ராதை; பஸ்மாசுரனிடமிருந்து சிவபெருமானைக் காப்பாற்ற மகாவிஷ்ணு எடுத்த மோகினி அவதாரம்; பெற்றவருக்குச் செய்யும் சேவையே பெருமாளுக்குச் செய்யும் சேவையை விட உயர்ந்தது என்று விட்டலன் மூலமாக உலக மக்களுக்கு உணர்த்திய பாண்டுரங்கன் - ருக்மாயி; மாரீச மாய மானைப் பிடித்துத் தரும்படி கேட்கும் சீதை, ராமர், லட்சுமணர்; மரத்தின் பின்புறம் ராமர் மறைந்திருக்க வாலி - சுக்ரீவ யுத்தம்; 'நின்னொடும் ஐவரானோம்' என்று குகனிடம் சொல்லும் ராமர் என்று வண்ணச் சிற்பங்கள் அமைந்திருக்கின்றன.

விசாலமான பிராகாரத்தில், எண்ணற்ற சந்நிதி கள் அமைந்திருக்கின்றன. அத்தனை சந்நிதிகளும் மிக நேர்த்தியாக வடிவமைக்கப்பட்டு, தங்க நிறத்தில் தகத் தகாயமாகப் பிரகாசித்தபடி காட்சி தருகின்றன. ஒவ்வொரு சந்நிதியிலும் ஒரு திவ்யதேசப் பெருமாள், அந்த திவ்யதேசத்தில் எந்தக் கோலத்தில் எழுந்தருளியுள்ளாரோ அதே திருக்கோலத்தில் எழுந்தருளி உள்ளார். அத்தனை திவ்யதேசங்களும் மண்டலவாரியாகப் பிரிக்கப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. திருப்பாற்கடல், திருவைகுண்டம் ஆகிய திவ்யதேசங்கள் தவிர்த்து, சோழநாட்டுத் திருப்பதிகள் நாற்பது, பாண்டிநாட்டுத் திருப்பதிகள் பதினெட்டு, தொண்டை நாட்டுத் திருப்பதிகள் இருபத்தியிரண்டு, நடுநாட்டுத் திருப்பதிகள் இரண்டு, மலைநாட்டுத் திருப்பதிகள் பதின்மூன்று, வட நாட்டுத் திருப்பதிகள் பதினொன்று என்று மொத்தம் 106 திவ்யதேசங்கள் அமைந்திருக் கின்றன.

சோழநாட்டுத் திருப்பதிகளில் மிகவும் பிரதானமானது ஸ்ரீரங்கம். ஸ்ரீவைஷ்ணவர் களுக்குக் கோயில் என்றாலே அது ஸ்ரீரங்கம் தான். பிரமாவின் பிரார்த்தனைக்கு இரங்கி, பகவான் பிரணவாக்ருதி விமானத்தின் கீழ் எழுந்தருளி பிரமாவுக்குக் காட்சி அளித்ததாகப் புராணம். பிறகு பிரமதேவரிடமிருந்து இந்த மூர்த்தத்தை சூரியவம்சத்தைச் சேர்ந்த இக்ஷ்வாகு பெற்று பூஜித்து வந்தான். பின்னர் ராமனிடம் இந்த மூர்த்தத்தைப் பரிசாகப் பெற்ற விபீஷணன், இலங்கைக்குச் செல்லும் வழியில் இந்த இடத்தில் பெருமாளின் விமானத்தைக் கீழே வைத்ததாகவும், அந்த இடத்திலேயே பெருமாள் கோயில் கொள்ளத் திருவுள்ளம் கொன்டுவிட்டதாகவும் தலவரலாறு. இந்தத் தலத்தில் பெருமாள் சயனக் கோலத்தில் விபீஷணனின் பிரார்த்தனைக்கு இரங்கி தெற்கு நோக்கிக் காட்சி அருள்கிறார். அரங்கனின் அதியற்புத அழகில் மனதைப் பறிகொடுத்த தொண்டரடிப்பொடி ஆழ்வார், அரங்கனைத் தவிர வேறு பெருமாளைப் பாடமாட்டேன் என்று உறுதி கொண்டார். நாம் எல்லோரும் இனியொரு பிறவி இல்லாத பேரின்ப நிலையினைத்தான் வேண்டுவோம்.

ஆனால், தொண்டரடிப்பொடி ஆழ்வாரோ, ‘அச்சுதா, அமரரேறே, ஆயர்தம் கொழுந்தே என்னும் இச்சுவை தவிர யான் போய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்’ என்று மறுபடி மறுபடி மண்ணில் பிறந்து அரங்கனைக் கண்கள் குளிர சேவித்து, மனம் குளிரக் குளிரப் பாடும் வரத்தையே வேண்டி பிரார்த்தித்தார்.



அத்தனை அழகும் அருள்திறமும் நிரம்பப் பெற்ற அரங்கனின் ஆலயம் என்பதால்தான், ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கோயில் என்றாலே அது திருவரங்கம்தான் என்று சொல்லும் பெருமை பெற்றுத் திகழ்கிறது.

திவ்ய தேசங்களில் பெருமாள் ஸ்தாபனா (நின்ற திருக்கோலம்) ; அஸ்தாபனா (அமர்ந்த கோலம்); ஸமஸ்தாபனா (படுத்திருக்கும் கோலம்); பரஸ்தாபனா (வாகனத்தில் எழுந்தருளியிருக்கும் கோலம்) போன்ற பல்வேறு திருக்கோலங்களில் காட்சிதருகிறார். பெருமாளின் சயனக் கோலத்திலும் புஜங்க சயனம், தல சயனம், உத்தான சயனம், வீர சயனம், யோக சயனம், தர்ப்ப சயனம், பத்ர (ஆலிலை) சயனம், மாணிக்க சயனம் என்று பல வகைகள் உள்ளன. ஒவ்வொரு சயனக் கோலத்திலும் பெருமாளை வழிபட்டால் ஒவ்வொரு வரம் கிடைக்கும் என்பது ஐதிகம்.

பாண்டிநாட்டுத் திருப்பதிகளுள் ஆழ்வார் திருநகரியும் திருவில்லிபுத்தூரும் குறிப்பிடத் தக்கவை. ஆழ்வார் திருநகரியில் பெருமாள் அருள்மிகு ஆதிநாதர் என்ற திருப்பெயரில் அருள்கிறார். இந்தத் தலத்தில்தான் 'வேதம் தமிழ் தந்த மாறன்' என்ற பெருமைக்கு உரிய நம்மாழ்வார் அவதரித்தார். அவருக்கு சடகோபன் என்ற திருப்பெயரும் உண்டு.

திருவில்லிபுத்தூர் ஆழ்வார்களில் பெரியவர் என்ற சிறப்பினுக்கு உரிய பெரியாழ்வார் அவதரித்த தலம். இந்தத் தலத்தில்தான் பூரம் நட்சத்திரத்தில் பிறந்து பூரணத்துவம் அடைந்து அரங்கனுடன் இரண்டறக் கலந்த ஆண்டாள் அவதரித்தாள். சூடியும் பாடியும் கொடுத்த அந்தச் சுடர்க்கொடி, நாமும் பூரணத்துவம் அடைவதற்கான வழிகளைக் காட்டி அருளினாள்.


திருப்புல்லாணியும் குறிப்பிடத்தக்க பாண்டிநாட்டு திவ்யதேசம் ஆகும். இந்தத் தலத்தில்தான் தசரதன் புத்திரகாமேஷ்டி யாகம் செய்து பலன் பெற்றதாக ஐதிகம். இந்தத் தலத்தில் சக்கரவர்த்தித் திருமகனாம் ராமபிரான் தர்ப்பையின் மீது சயனம் கொண்டிருக்கிறார். சோழநாட்டுக்கும் தொண்டைமண்டலத்துக்கும் இடைப்பட்ட பகுதி நடுநாடு என்று அழைக்கப் படுகிறது. நடுநாட்டில் திருவந்திபுரம் மற்றும் திருக்கோவலூர் ஆகிய இரண்டு தலங்கள் அமைந்திருக்கின்றன.

வேதாந்த தேசிகர் இந்தத் திருவந்திபுரத்தில் உள்ள ஔஷதகிரி மலையில் அமர்ந்து கருட மந்திரம் ஜபித்தார். அவருக்குக் காட்சி அருளிய கருடபகவான், அவருக்கு ஹயக்ரீவ மந்திரம் உபதேசித்தார். அதன்படி ஹயக்ரீவ மந்திரம் ஜபித்து ஞானம் கைவரப் பெற்றார். பஞ்ச கிருஷ்ணாரண்ய தலங்களில் திருக்கோவலூரும் ஒன்று. முதலாழ்வார்கள் என்று போற்றப்படும் பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் ஆகியோர் இந்தத் தலத்தில் சேர்ந்திருந்த வேளையில்தான், பகவானின் அனைத்து கல்யாண குணங்களையும் அவனுடைய அருளாலே அறிந்து உணரும் பேறு பெற்றார்கள்.

தொண்டைமண்டலத்தில் அமைந்திருக்கும் இருபத்தி இரண்டு திவ்யதேசங்களில் மிகவும் குறிப்பிடத்தக்க ஆலயம் காஞ்சி வரதராஜ பெருமாள் ஆலயம். இந்த ஆலயத்தின் ஆதிமூர்த்தியான அத்தி வரதர், அனந்தசரஸ் என்ற திருக்குளத்தில் சயன நிலையில் இருப்பவர். நாற்பது வருடங்களுக்கு ஒருமுறையே இவரை தரிசிக்க முடியும். இந்தக் கோயிலில்தான் ராமாநுஜருக்கு துறவு மேற்கொள்ள பெருமாள் அனுகிரகம் செய்தார். ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பெருமாள் என்று சொன்னாலே அது காஞ்சி வரதராஜ பெருமாள்தான். அதேபோல் குறிப்பிடத் தக்க தலம் பிருந்தாரண்ய க்ஷேத்திரம் என்று போற்றப்படும் பார்த்தசாரதி பெருமாள் கோயில். இந்தக் கோயிலில் பகவான், பார்த்தனுக்கு சாரதியாக நின்ற கோலத்தில் காட்சி அருள்கிறார். திருமுகத்தில் மீசையுடன் காட்சி அருள்வது விசேஷம். அதேபோல் திருவள்ளூர் வீரராகவ பெருமாள் ஆலயமும் பக்தர்களால் பெரிதும் கொண்டாடப்படுகிறது. இந்தக் கோயிலில் பெருமாள் வீரசயனத்தில் காட்சி அருள்கிறார்.

மலைநாட்டு திவ்யதேசங்களில் திருவனந்தபுரம் மற்றும் திருவட்டாறு ஆகிய தலங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. திருவனந்தபுரத்தில் பகவான் பத்மநாபசுவாமியாக அனந்த சயனத்தில் காட்சி அருள்கிறார். கேரள மன்னர்களின் வழிபடு தெய்வமான அனந்த பத்மநாபசுவாமிக்கு முதன் முதலில் சேரமான் பெருமான் கோயில் கட்டியதாகச் சொல்லப்படுகிறது.

திருவட்டாறு தலத்தில் சயனக் கோலத்தில் இருக்கும் பெருமாளின் திருமேனி இருபத்தி யிரண்டு அடி நீளம் உடையது. கருவறையில் மூன்று நிலைவாயில்கள் உள்ளன. ஒவ்வொரு நுழைவாயிலி லும் முறையே திருமுகம், திருக்கரம், திருவடிகளை தரிசிக்கலாம். திருமுக நுழைவாயிலில் அறிதுயில் கொண்டிருக்கும் பெருமாளின் திருமுகம் மற்றும் இடக் கரத்தையும் தரிசிக்கலாம். கூடவே ஆதிசேஷனையும் கருடாழ் வாரையும் தரிசிக்கலாம். திருக்கர நுழைவாயிலில் சின்முத்திரை காட்டும் வலக் கரத்தையும், சங்கு, சக்கரம் உள்ளிட்டவற்றையும் தரிசிக்கலாம். திருப்பாத நுழைவாயிலில் சரணடைந்தவர்களுக்கு



ஓம் சக்தி

முக்தி அளிக்கவல்ல திருவடிகளை தரிசிக்கலாம்.

வடநாட்டுத் திவ்யதேசங்களில் திருமலை திருப்பதி, சிங்கவேள்குன்றம் என்னும் அஹோபிலம், திருஅயோத்தி, பத்ரிநாத், வடமதுரா என்று சிறப்பு மிக்க பல திவ்யதேசங்கள் உள்ளன. வட மதுரா, பகவான் கிருஷ்ணர் அவதரித்த சிறப்பினுக்கு உரியது. திருஅயோத்தி, சக்கரவர்த்தித் திருமகன் ராமபிரான் அவதரித்த மேன்மை பெற்றது. சிங்கவேள்குன்றமோ பக்த பிரகலாதனைக் காப்பாற்ற வேண்டி தூணிலிருந்து வெளிப்பட்ட நரசிம்ம மூர்த்தி நவ நரசிம்மர்களாக கோயில் கொண்ட புண்ணிய பூமி. திருமலையோ கலியுகத்தின் கண்கண்ட தெய்வமாகக் கலியுகம் முடியும் வரை பக்தர்களுக்கு அருள்புரியவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டு, வேங்கடவன் எழுந்தருளி இருக்கும் உன்னத திவ்யதேசம். அனைத்து திவ்யதேசங்களிலும் பெருமாள் எந்த திருக்கோலத்தில் எழுந்தருளியுள்ளாரோ அதே திருக்கோலத்தில் தரிசனம் தருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இப்படி ஆலயத்தின் விசாலமான பிராகாரத்தில் நூற்றி ஆறு திவ்யதேசங்களை யும் தரிசிக்கலாம்.

திருமலையில் ஏழுமலைகளைக் கடந்து செல்லும் பக்தர்களுக்கு அருள்புரியும் வேங்கடவன் தான், திருவடிசூலம் திருத்தலத்தில் நான்கு புறங்களிலும் பசுமை போர்த்தி ரம்யமாகக் காட்சி தரும் மலைகள் சூழ்ந்திருக்க, அவற்றின் நடுவில் தங்கமயமாகத் தகதகக்கும் பிரமாண்டமான ஆலயத்தில் சந்நிதி கொண்டிருக்கிறார். பெருமாளின் கருவறை உயரத்தில் அமைந்திருக்கிறது. படிகள் ஏறியும் இறங்கியும்தான் செல்லவேண்டும். அந்த அமைப்பு திருமலையில் உள்ளதைப் போன்ற எண்ணத்தையே நமக்குத் தோற்றுவிக்கிறது.

பெருமாளின் கருவறை விமானமும் பொன்னின் நிறத்தில் பிரகாசமாகக் காட்சி தருகிறது. விமானத்தில் நரசிம்மர், சக்கரத்தாழ்வார், வைகுண்ட வாசன், பாற்கடல்வாசன் என்று பெருமாளின் பல திருவடிவங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதிலும் ஆலயக் கருவறை விமானத்தில் சக்கரத் தாழ்வாருக்கு வலப்புறத்தில் மானும் மழுவும் ஏந்திய கோலத்தில் ஏகபாத மூர்த்தி காட்சி தருவது குறிப்பிடத் தக்கது.



கருவறையில் ஸ்ரீவாரு வேங்கடேச பெருமாள் திருமலையில் அருள்வதைப் போலவே நின்ற திருக்கோலத்தில் பக்தர்களுக்கு சேவை சாதிக்கிறார். தீபாராதனையின்போது பெருமாளை தரிசித்த வேளையில், பக்தர்களுக்குத் திருமலை வேங்கடவனையே தரிசித்ததைப் போன்ற பரவச உணர்வு ஏற்படுவதைக் காணலாம். திருமலை வேங்கடவனின் எழிலார்ந்த திருக்கோல தரிசனத் தில் பரவசம் மிகக் கொண்டதனால்தானோ என்னவோ, குலசேகர ஆழ்வார், ‘செடியாய வல்வினைகள் தீர்க்கும் பெருமாளே... நின் படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனோ’ என்று மனம் கனியக் கனியப் பாடியுள்ளார் போலும்!

கோயிலில் பத்மாவதித் தாயாரும் திருச்சானூரில் சேவை சாதிக்கும் அதே திருக்கோலத்தில் காட்சி அருள்கிறார்.

பெருமாளுக்கு உகந்த புரட்டாசி மாதம் திருவடிசூலம் 106 திவ்யதேச தரிசனம்...



பூஜையறை குறிப்புகள்

● கஷ்டங்கள் நீங்க, நினைத்தது நடக்க எளிய வழி தீபம் ஏற்றுவதுதான். தீப ஒளி இருக்குமிடத்தில் தெய்வ அனுகிரகம் நிறைந்திருக்கும். வீட்டில் எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தீபம் ஏற்றி வைக்கலாம்.

● தீபத்தில் உள்ள எண்ணெய்தான் எரிய வேண்டுமே தவிர திரி அல்ல. திரிஎரிந்து கருகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

● விளக்கை ஏற்றும்போது வீட்டில் பின் வாசல் இருந்தால் அதன் கதவை சாத்தி விட வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் எவர்சில்வர் விளக்கைப் பயன்படுத்தக்கூடாது.

● வீட்டில் ஒருவர் உறங்கிக்கொண்டு இருக்கும்போது விளக்கு ஏற்றக்கூடாது.

● காலையில் 5 மணி முதல் 6 மணிக்குள்ளும் மாலை 5.30 மணி முதல் 6 மணிக்குள்ளும் தீபம் ஏற்றி வழி பட்டால், சகல வளங்களும் உண்டாகும்.

● விளக்கில் ஒரு முகம் ஏற்றினால் மத்திமப் பலனே கிடைக்கும். இரண்டு முகங்கள் ஏற்றினால் ஒற்றுமை உண்டாகும். மூன்று முகம் ஏற்றினால் புத்திரபாக்கியம் ஏற்படும். நான்கு முகங்கள் ஏற்றினால் கால்நடைச் செல்வங்கள் பெருகும். ஐந்து முகங்கள் ஏற்றினால் அஷ்ட ஐஸ்வர்யங்களும் உண்டாகும்.

● பூஜையறையில் வழிபாடு செய்யும் போது நின்றுகொண்டே செய்யக் கூடாது.சப்பணமிட்டு அமா்ந்துகொண்டே வழிபாடு செய்யவேண்டும். இடையில் ஒற்றை ஆடையுடன் வழிபடக் கூடாது.

● வீட்டின் நிலைகளில் மஞ்சள் குங்குமம் வைப்பதால் துஷ்ட சக்திகள் நெருங்காது என்பதுடன், விஷக் கிருமிகளில் இருந்தும் பாதுகாப்பு தரும்.

● முதல்நாள் பூஜையில் தெய்வங் களுக்குச் சாத்திய புஷ்பங்கள் நிர்மால்யம் எனப்படும். அந்த நிர்மால்யங்களை எடுத்து, கால் படாமல் நீர்நிலையில் அல்லது தோட்டத்தில் இருக்கும் பூச்செடிகளுக்கு அடியில் போட்டுவிடவேண்டும்.

● பூஜையில் தெய்வங்களுக்கு வெற்றிலை பாக்கு சமர்ப்பிக்கும்போது வெற்றிலையுடன் களிப் பாக்குதான் வைக்கவேண்டும். சீவல், பாக்குப் பொட்டலம் வைக்கக்கூடாது. வெற்றிலையையும் இரட்டைப்படை எண்ணிக்கையில்தான் வைக்கவேண்டும். பாக்கும் இரண்டு வெற்றிலைக்கு ஒரு பாக்கு என்ற எண்ணிக்கையில் வைக்கவேண்டும்.

● வெற்றிலையின் நுனியில் லட்சுமியும், மத்தியில் சரஸ்வதியும், காம்பில் மூதேவியும் இருப்பதாக ஐதிகம். எனவே, வெற்றிலையின் காம்பைக் கிள்ளிவிட்டு, தண்ணீரில் அலம்பிய பிறகே பூஜைக்குப் பயன்படுத்தவேண்டும். வெற்றிலையின் நுனி பாகம் சுவாமியின் இடப்புறம் இருக்கும்படி வைக்கவேண்டும். ●

Registered with Registrar of Newspapers for India
No. 42582/83 Licensed to post without Pre-payment
under Regn.No. TN/WR/CBE/016/WPP/2021-23
Regd. No. : CB/016/2021-23
Date of Publication : 28th Every Month

OM SAKTHI - OCTOBER - 2021